
திருக்கோயில்
அக்டோபர் 1977
ரூ. 1
M.N.Raja



பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குத்
தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வருகை தந்தபொழுது,
நமது அறநிலையத் துறையின் ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்கள்,
மாலை அணிவித்தும், வரவேற்புரை வாசித்தளித்தும் சிறப்பித்தல்.





பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், மேதகு ஆளுநர் அவர்கள் கோயிலைச் சுற்றிப் பார்வையிடுதல். ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களும், துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு, பி. எஸ்சி., பி. எல். அவர்களும், மேதகு ஆளுநரோடு உடனுள்ளனர்.





பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், மேதகு ஆளுநர் அவர்கள், பழநி ஆண்டவர் பல்லக்கில் எழுந்தருளப் புறப்படுங்கால், சாமரை வீசித் தொண்டு புரியும் காட்சி.



[illegible] இந்து சமய அறநிலைய [illegible]

முகப்பு :

திருப்பதி
அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி
(ஸ்ரீநிவாசப் பெருமாள்)

# திருக்கோயில்

மாலை : 20 | பிங்கள ஆண்டு—ஐப்பசித் திங்கள் அக்டோபர்—1977 | மணி : 1

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

இசையின் இசை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்,

திருவருட்பாவில் ஒரு திருப்பாடல்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்
—திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ.,

ஆதிசங்கரரின் கணேச பஞ்சரத்ன ஸ்தோத்ரம்
—பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ.,எல்., டி.

அகரம்—ஆலயங்கள்
—திரு. மா. சந்திரமூர்த்தி, எம்.ஏ.,

திருமாலுக்கு இருமாலை அளித்த பெருமாட்டியார்
—திரு. இராசகோபால இராமாநுசதாசன்

சிவஞான போதத் தெளிவுரை
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஒ.எல்.,

ஆழ்வார்களின் இறுதி நினைவுகள்
—பேராசிரியர் கு. மதுரை முதலியார்

மதுரகவி ஆழ்வார்
—திரு. உ. வே. டி. இராமசுவாமி ஐயங்கார், பி.ஏ., பி.எல்.,

அம்பிகையின் அழகுவெள்ளம் —ஆசிரியர்

சிவப்பிரகாசர்
—திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

மாதவன் விரும்பும் மாபெரும் தலம்
—திரு. என். எஸ். தாத்தாச்சாரியார்

பேதையும் மேதையுமான சீதை
—புலவர்திரு சு. முருகேச முதலியார்

முத்தேவர்
—பேராசிரியர் பெ. இராமாநுசன்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

“ என் கடன் பணி செய்து கிடப்பதே ”

# இசையின் இசை


திரு. எம் கே. பாலசுப்பிரமணியம்,
ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை.


## முன்னுரை :

கலைகளில் சிறந்தது இசைக் கலை. முதன் முதல் மனிதன் பேசத் தொடங்குவதற்கு முன்னர், இசையினாலேயே அவன் தன் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தினான் என்பர். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில், எல்லாச் சுகதுக்க நிகழ்ச்சிகளிலும், இசைக் கலை இடம் பெறுகின்றது. மனித குல நாகரிக கலாச்சார வளர்ச்சி நெறிகளில், இசைக்கலைக்குச் சிறப்பிடம் உள்ளது. இசைக் கலையின் இனிமையில், எல்லா உயிர்களுமே மயங்கி மகிழ்ந்து இன்புறுகின்றன. செடி கொடிகளும் கூட, இனிய இசையைக் கேட்டு மகிழ்ந்து தழைத்து வளர்கின்றன என்று, தாவர நூலார் ஆராய்ச்சிகள் செய்து கூறுகின்றனர். இனிய இசையைக் கேட்பதன் மூலம், பிணியாளர்கள் பலர் மன அமைதியுற்று, தம் பிணிகள் தீரப் பெறுகின்றனர். இதனை ''இசைக் கலை மருத்துவ முறை'' *(Musico-therapy)* என்று அறிஞர்கள் வழங்குகின்றனர்.

## இசைபாடுபவர்க்கு இறைவன் அருள் :

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற அருளாளர்களெல்லாம், இசைக் கலையின் மூலம் இனிய பாடல்களைப் பாடித் துதித்து, இறைவன் அருளைப் பெறுகின்றனர்.

''விளக்கினாற் பெற்ற பேறு,
மெழுக்கினால் பதிற்றி யாகும்;
துளக்கில் நன் மலர்தொடுத்தால்
தூய விண் ஏறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானம்ஆகும்;
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள் தாம் அருளுமாறே''

என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார். இப்பாடலால் கோயில்களில் பெருக்குதல், மெழுகுதல், பூமாலை தொடுத்துக் கொடுத்தல், திரு விளக்கு ஏற்றுதல் ஆகிய தொண்டுகள் செய்பவர்கள் எல்லோருக்கும் மேலாக, இன்னிசை பாடித் தன்னைத் துதிப்பவர்களுக்கே, இறைவன் எல்லையற்ற அளவில்லாத அருளைச் செய்கின்றான் என்று அறிகின்றோம். திருக்கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது, சாம வேதத்தினை இசையுடன் பாடித் துதித்ததனால், சிவ பெருமானால் மன்னிக்கப் பெற்றது மட்டுமின்றி, அவரால் வாளும் தேரும் முக்கோடி வாழ் நாளும் அளிக்கப்பெற்று உய்ந்த வரலாறு அனைவரும் உணர்ந்தது. இசையின் மீது தாம் கொண்ட எல்லையில்லாப் பெரு விருப்பால், அசுவதரன் கம்பளன் என்னும் இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் தன் காதுகளில் தோடுகளாக அணிந்து கொண்டு, எப்போதும் அவர்களின் இன்னிசையைக் கேட்டு இன்புறுகின்றார் எனப் பெரியோர்கள் கூறுவர். மற்றும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் பொருட்டுத் திருஆலவாய்ச் சோமசுந்தரப் பெருமான் விறகுத் தலையனாக வந்தபொழுது, சாதாரி என்னும் பண்ணைப் பாடினார் என்று திருவிளையாடற் புராணம் கூறும். ''கொல்லியாம் பண் உகந்தார் குறுக்கைவீரட்டனாரே'' என்றும்; ''வேதத்து ஒலி கொண்டு வீணைகேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே'' என்றும்; ''எம் இறை நல் வீணை வாசிக்குமே'' என்றும், திருநாவுக்கரசர் இறைவனின் இசை விருப்பத்தையும் ஈடுபாட்டையும் குறிப்பிட்டிருக்கக் காண்கின்றோம்.

## ஆனாயரின் இசை :

பசு மாடுகள் மேய்ப்பதைத் தொழிலாகக் கொண்ட ஆனாயர் என்னும் நாயனார், காட்டில் கிடந்த மூங்கிலால் வேய்ங்குழல் செய்து, அதில் திருவைந்தெழுத்தை இசையினால் இசைத்து ஓதியே, இறையருள் பெற்றார் என்று பெரிய புராணம் கூறுகின்றது. அவரது புல்லாங்குழல் இசையைக் கேட்டுப் பசுக்கூட்டங்கள், மேய்ந்த புல் வாயில் இருக்கவும், அசையிட மறந்தன; தாயின் மடியில் பாலருந்தச் சென்ற பசுங் கன்றுகள், பாலுண்ணுதலை மறந்து நின்றன ; காட்டு விலங்குகளும் மயிர் சிலிர்த்து மகிழ்ந்து துள்ளின; ஆடும் மயிலினங்கள் அசைவற்று நின்றன. பாம்புகள் மயில்களின் மீது தம்மை மறந்து விழுந்து விளையாடின. அரியும் கரியும், புலியும் மானும், தம் பகைமை மறந்து, அருகணைந்து ஒன்றி நின்றன. இதனை,

''நலிவாரும் மெலிவாரும்
உணர்வு ஒன்றாய் நயத்தலினால்
மலிவாய் வெள்ளெயிற்று அரவம்
மயில்மீது மருண்டுவிழும்;
சலியாத நிலை அரியும்
தடங்கரியும் உடன் சாரும்;

வெளிவந்த திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ் தெய்விகக் கவியாய்ப் பாவிக்கத்தக்கது. இப்பிள்ளைத்தமிழின் பல பாடல்கள், பாவலர் நாவிலும், பாமரர் நாவிலும் இன்றும் உள்ளன. ஆனால் சந்நிதிமுறை நூல் சுமார் 70 ஆண்டுகட்குமுன் இரண்டாம் முறையாக அச்சிடப்பட்டுப் பின் அச்சிடப்படவில்லை. எனவே பிரதிகள் கிடைத்தலரிது. பிள்ளைத்தமிழை மட்டும் இப்போது உரையுடன் பதிப்பித்துள்ளோம்.

கந்தப்பையர் கந்தப்பதேசிகர் என்றும், கந்தப்பமுனிவர் என்றும் அழைக்கப்படுவர். அவரது பிள்ளைத்தமிழ், இலக்கிய இலக்கண நயங்களுடன் பக்திரசம் கூடியது. பருவத்துக்குப் பத்துப் பாட்டுகளாக மொத்தம் 100 பாட்டுக்கள் கொண்டது. விருத்தப்பாவில் பல்வேறு சந்தங்களில் பாடப்பட்டுள்ளன. சொல்லணியும், பொருட்செறிவும், சாத்திரக் கருத்துக்களும் அடங்கியுள்ளன. பாக்கள் இசையுடன் பாடத்தக்கவை. இந்நூலின் கவிநயங்களை ஒரு சிறிதேனும் இங்குச் சுவைத்துப் பார்ப்போம்.

முதலாக வரும் காப்புப் பருவத்தில் கவிஞர், காக்கும் கடவுளாகிய திருமாலை வேண்டிப் பாடுகிறார். ''மணிவண்ணனே, இலக்குமி இலங்கும் மார்பினனே, ஒரு கையில் திகிரியும், மற்றொரு கையில் வெண்சங்கமும் ஏந்தியவனே, கருடன் மேலிருந்து காத்தருள்பவனே, நீர் சூழ்ந்த உலகில் பொழுதுக்கு ஒன்றாக மலரும் செங்குவளை மலர்ச் சுனையையுடைய திருத்தணியில் உறையும் சிவபிரானுக்குப் பிரணவப் பொருளை அறிவுறுத்திய குருநாதனாகிய செவ்வேள் முருகனைக் காப்பீராக! என்கிறார். இப்பாட்டில் முருகனின் குரு தத்துவத்தைச் சிறப்பாகக் கவிஞர் பாடுகிறார். மும்மூர்த்திகள் மூன்று தொழிலைப் புரிந்து காத்தாலும், உயிரின் இருளைப் போக்கி, ஞானத்தைத் தர வல்லவன் முருகன் எனலாம். அருணகிரியார் ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்று வேண்டியதும் இதுவேயாகும்.

செங்கீரைப் பருவம் முதல்பாட்டில், கவி முருகனின் அவதாரத்தை அழகுபடப் பாடுகிறார். தேவர்கள் சூரபதுமனின் துன்பத்தைத் தாங்கமாட்டாமல், பிரம்மாவும் விஷ்ணுவும் சக்தியற்றவர்களாய், சிவபெருமானிடம் முறையிடத் தனது நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஒளி ஆறு பொறிகளாய் வாயுவால் ஏந்த முடியாமல், சரவணப்புல் அடர்ந்த கங்கையில் விட, ஆறு குழந்தைகளாகி, கார்த்திகை மாதர்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டு, உமையம்மையார் தம் கரங்களால் சேர்த்து மார்பில் அணைக்க, ஸ்கந்த மூர்த்தியாய் ஐம்முகச் சிவனார் அறுமுகச்சிவனாகி மூவுலகும் உய்யப் பிரகாசித்தார் முருகன். பிள்ளைத்தமிழில் குழந்தையை நீராட்டி, பாலூட்டிச் சீராட்டுவதை முதலில் பாடுவது பொருத்தம். பாட்டைப் பார்ப்போம்.

''புகழ் பூத்த கார்த்திகை யெனுஞ் செவிலி, மாதர் தண்புனலாட்டி மெய் துடைத்துப் புவியில் வாய் நீருமிழ்ந்தணி விரலினாற் றேய்த்துப் புதுநுதற்றிலகமிட்டு மகிழ் பூத்த பூதித் திருக்காப்பணிந்து, தம் மடிமே விருத்தி யெழில்சேர் மணி முலைப்பாலூட்டி மார்பிணைத்து, உச்சிதனை மோந்து வாய்முத்த மாடி, அகழ் பூத்த சரவணப் பொய்கையில் தொட்டில் மலரணையிற் கிடத்தி யகல, அளி இனம் தாலாட்ட, அலைகயிறதாய் வளியசைப்பத் துயின்றெழுந்து திகழ்பூத்த விளையாடல் பயில் செருத் தணிகையிலிறை செங்கீரையாடியருளே சேனாடர்ச்சனை செய் சேனாபதிக் குரிசில் செங்கீரையாடி யருளே'' என்பது பாட்டு. இப்பாட்டில் விபூதி இடும் சம்பிரதாயம் கூறப்பட்டுள்ளது. சரவணப் பொய்கை தொட்டிலாகவும், தாமரை மலர் மெத்தையாகவும், வளி அதாவது காற்று தாலாட்ட நீர் அலைகள் தொட்டில் கயிறாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன. பஞ்சபூதங்களும் குகப்பெருமானைப் பேணியது என்பது இதன்பொருள். பாட்டின் மகுடம் சிவகுமாரன் தேவர்கட்குச் சேனாதிபதியாகும் சிறப்பை நினைவுபடுத்துகிறது. மற்றொரு பாட்டு சிவபெருமான் உதவும் கனிக்குச் சகமுழுதையும் ஒருநொடியினில் வலம் வருகைதந்த செந்தூரர் என்றும், நிசிசரர் அவிதர வேல் விடு கந்தா என்றும், மந்தாரக் கடிமலர் முடிபுனை சசிமகள் வடுவகிர் கண்பாவு தோளா என்றும், திருமகள் மருக என்றும் கவி பாடுகிறார்.

தாலப் பருவப் பாக்களில் திருத்தணிகையின் வருணனைகள் கொழித்துள்ளன. கல்லார மலர்ச் சுனையில் சுரபி இனங்கள் கறந்த பாலில் செவ்வாழை நழுவி விழக் கிளியினங்கள் உண்டு மகிழ்கின்றன. வில்லேந்திய வேடப்பாவையரும், யாழ் தங்கிய விஞ்சையரும், தவஞ்செய் முனிவரும், தெய்வமடந்தையரும் இறும்பூதுடன் இருக்கிறார்கள். அழகார் மயில் வாகனமேறும் அமுதே நீ கண்வளராய் என்று கவி பாடுகிறார். சப்பாணிப் பருவப் பாட்டுகள் மிகவும் அழகானவை. ''முருகா நீ சப்பாணி கொட்டும் கை, சாதாரணக் கைகள் அல்ல'' அவை தரைக்குளுயர் கும்பமுனி முடிவைத்த செங்கையாகும். மானிடமாய் வந்து குளிர் தணிகை வெற்பினிலிருந்து வள்ளி தருந்தினையினை யிடி மாவை இரந்து ஏற்ற நீளக்கை என்கிறார் கவி. பாட்டைப் பாடிக் காண்போம். ''பருந்திநெடு நிழல் செலும் பான்மையென விஞ்சையர்கள் பயிலுமிலிசைகள் பாடப்பாங்கருறு வேங்கையின் பனிமலர்ச் சினைமேவு பைந்தோகை இட்டுறங்கும் முருந்திநெடு முத்த முறழ் மூரற் கொடிச்சியர்கள் முருகுவாய் வைத்தருந்தி, முருகனெதிர் சாரல் வெறியாட்டயர்த ஞேக்கியே முதைப்புன மிசைப் புனஞ் சூழ் குருந்திநெடு கொன்றைமிசையமர் பசுங்கிளிகள் மகிழ் கூர்ந்து பூவைக்கிசைக்கும் குளிர் தணிகை வெற்பினிலிருந்து மானுட வடிவு கொண்டு புனமெய்தி வள்ளிதருந் தினையினிடி இரந்தேற்கும் நீள் அங்கை கொடு சப்பாணி கொட்டி யருளே'' என்பது பாட்டு. இப்பாட்டின் மோனை அழகை ஊன்றுக.

முத்தப் பருவப் பாட்டுகள் எல்லாப் பிள்ளைத் தமிழ்களிலும் அன்பு ததும்பிக் காணப்படுவது இயல்பே. கந்தப்பையர் முத்தத்தை ஞான வாய்மை என்றே கருதுவர் போலும்,

புலிவாயின் மருங்கு அணையும்
புல்வாய புல்வாயும்''

என்று பெரிய புராணத்தில், தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான், மிகவும் அழகுறப் பாடு கின்றார்.

**அகநானூறு :**

இசைக் கலையின் இயல்பையும் சிறப்பையும் அகநானூறு என்னும் பழைய சங்க கால நூற் பாடல் ஒன்று, பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றது :

குறிஞ்சி நிலத்தில், பரணின் மீதிருந்த ஒரு பெண், இரவில் தினைப்புனத்தைக் காவல் புரி கின்றாள். தினைக் கதிர்களை உண்ணுவதற்கு, மத யானைகள் திரண்டு வருகின்றன. அவ் யானை களைத் தடுக்க, தன்னந் தனியாக உள்ள அவள், எதுவும் செய்ய இயலாது. எனவே, அவள் என்ன செய்வது என்று ஒரு சிறிது சிந்திக்கின் றாள். மலையின் அருவியில் நீராடிய அவள், தன் நனைந்த கூந்தலை விரித்துக் கோதிக் கொண்டே, ஓர் இனிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுகின்றாள். மத யானைகள், அப் பெண்ணின் இசை கேட்டு மயங்கிச் செயலற்று நின்றன ; அவ் யானைகள் தினைக் கதிர்களைப் பற்றி உண்ண வோ, தினைக் கதிர்களை நோக்கி மேலும் முன் வரவோ இல்லை. ஆடாமலும் அசையாமலும், இசையில் மயங்கி நின்ற அவ் யானைகள், தம் மதம் அடங்கி அமைதியுற்று, தாம் நின்ற நிலையிலேயே உறங்கத் தொடங்கி விட்டன. இதனை,

''ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்''

எனவரும் அகநானூற்று வரிகள், உணர்த்து கின்றன. மத யானைகளையும் அடக்கி அமைதி யுறச் செய்யும் இசையின் வல்லமையை, இதன் மூலம் நாம் இனிது அறிகின்றோம்.

**பத்துப்பாட்டு :**

இவ்வாறே பத்துப் பாட்டு என்னும் சங்க நூலிலும், இசையின் பேராற்றல் எழிலுற விளக்கப் பெறுகின்றது. இசைக் கலையில் வல்ல பாணர் ஒருவர், ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருக்கின்றார். அங்கே வழிப்பறி செய்யும் கள்வர்கள் பலர் உண்டு. அவர்கள் இப் பாணர்பால் பொருள் ஏதேனும் இருக்கும்: அவற்றைக் கவரலாம் என்ற எண்ணத்துடன், வில் வேல் வாள் முதலிய கொலைப் படைகளை எடுத்துக் கொண்டு, ஓடி நெருங்கிவருகின்றனர். அந்நிலையில், அப்பாணர் தம் உயிருக்கு என்ன நேருமோ? என்று அஞ்சித் திகைத்து நிற்கின் றார். பிறகு ஒருவாறு தம் மனத்தைத் தேற்றிக் கொள்கின்றார். வழிப்பறிக் கள்வர்களின் கொடிய மனமும் உருகும்படி, பாலைப் பண்ணை அழகுறப் பாடத் தொடங்கினார். அவர் அப் பண்ணைப் பாடப் பாட, கொலை செய்தே பழகிய அக்கொடிய, கள்வர்களின்உள்ளங்களும் உருகின. அவர்கள் தம் கொடிய கொலைக் கருவிகளை, தம்மை யறியாமலே கீழே விடுத் தனர். அவர்களின் கொடிய உள்ளத்திலும், அன்பும் இரக்க உணர்ச்சியும் மேலிட்டன. அவர்கள் திருந்திய உள்ளமும் செயலும் உடை யவர்களாக மாறினர். இச் செய்தியை,

''ஆறலை கள்வர் படைவிட, அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை''

என்ற பத்துப் பாட்டு நூல் வரிகள், பாங்குற உணர்த்துகின்றன. திருந்தாத உள்ளங்களையும் திருத்துவதற்கு, இசைக் கலை பெரிதும் உதவும் என்பது இதனால் தெரிகின்றது. பாலுண் பரு வத்து இளங் குழந்தைகளும், விடுநில மருங்கிற் படுபுல் மேயும் பசுநிரைகளும், படம் எடுத்து ஆடும் பாம்புகளும், பல கலை நூல்கள் பயின்று உணர்ந்த பண்டிதர்களும், யோகியர் ஞானியர் தேவர், பிரமன், திருமால், சிவபிரான் முதலிய கடவுளரும், ஆகிய எல்லோர்க்கும் ஒரு சேர இன்பம் வழங்கி, அவர்கள் அனைவராலும் ஒரு முகமாக விரும்பப் பெறுவது இசைக் கலை எனலாம்.

''பாலுண் குழந்தை யொடுநற் பசுவும்,
பணியும், இனும்
ஞாலத் துயர்பண் டிதரும், நல் யோகியர்
ஞானியரும்,
கோலத் தமரரும், நான்முகன், முக்கணன்,
கோவலனும்,
சாலச் சுகமுற ஓங்கிய நற்கலை சங்கீதமே''
—தனிப்பாடல்

**செகப்பிரியர் :**

இசைக் கலையின் மேன்மையையும் சிறப் பையும், உலகப் பெருங் கவிஞராகிய செகப் பிரியர், புகழ்ந்து போற்றிப் பாராட்டியிருத் தலை, அறிஞர்கள் அனைவரும் உணர்வர்.

† ''இனிய நல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்,
துனிதரு நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
முதற்பல தீங்கே செய்வான் ;
நனிமிகக் கொடியன், அந்தோ
அவனைநாம் நம்பொ ணுதே! ''

**முடிவுரை—வாழ்த்து—நன்றி :**

இத்தகைய இசைக்கலை வளர்க்கும் தொண் டில் ஈடுபட்டுள்ள, காவேரி இந்தியச் சங்கீதக் கலைக் கழகத்தையும், குறிப்பாக இதன் இயக் குநர் திரு எ. என். பரசுராமன், மற்றும் இசை விரிவுரையாளர் திருமதி எஸ். வி. லீலா அவர் களையும், இக்கோடைக்கால இசைப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்ற, ஏழு கலைச் செல்வியர்களையும், போற்றிப் பாராட்டு வதுடன், இவ்விழாவில் கலந்து கொள்ள எனக் கொரு நல்ல வாய்ப்பளித்தமைக்காக என் மன மார்ந்த நன்றியையும் வணக்கங்களையும் தெரி வித்துக் கொள்ளுகின்றேன்.

**

† "The man that hath no music in himself
Nor is not moved with concord of sweet sounds,
Is fit treasons, strategems and spoils !
His mind is as dark as Erebus
Let no such man be trusted. —SHAKESPEARE.

# திருவருட்பாவில் ஒரு திருப்பாடல்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

**முன்னுரை :**

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகளார் பாடியருளிய திருவருட்பாத் தொகுதியில், ''மகாதேவமாலை'' என்னும் செய்யுட்பகுதி ஒன்று உள்ளதனை, அன்பர்கள் அனைவரும் அறிவர். அதன் முதற் பாடலாக விளங்குவது,

கருணைநிறைந்து, அகம்புறமும் துளும்பி வழிந்து,
உயிர்க்கெல்லாம் களைகண் ஆகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய்! சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும்உட்
கசிந்துஉருக்கும் வடிவத் தோயே!

என்னும் அழகிய திருப்பாடல்! ''இறைவன் கருணை நிறைந்தவன்; எல்லாப் பொருள்களின் உள்ளும் புறம்பும் நீக்கமறக் கலந்து நிறைந்திருப்பவன்; உயிர்களின் துன்பங்களையெல்லாம் போக்கியருள்பவன்; உயிர்களுக்கு அறிவை வளர்த்து, அவைகளை இன்பநிலை பெறுமாறு செய்விப்பவன்; அவனுடைய திருவாயினின்றே ஞானப்பொருள் நலங்கள் நிறைந்த வேதங்கள் தோன்றின; அவனுடைய செயலும் இயலும் ஆகிய வடிவமானது, எத்தகைய அறியாமை மிக்கவர்களின் கருங்கல் மனத்தையும்கூடக் கசிந்து உருகுமாறு செய்துவிடும் சிறப்பு உடையது'' என்பது, இப்பாடலின் பொதுவான திரண்ட பொருள்.

**சொற்பொருள் நலங்கள் :**

இனிய சிறந்த சொற்களால், எளிய தெளிவான நடையில், ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் ஆழ்ந்த அநுபவ நுண்பொருட் செறிவு உடையதாகத் திகழ, இத்திருப்பாடல் அமைந்துள்ளது. இறைவன் கருணையையே தனக்குரிய இயல்பாகக் கொண்டவன்; இறைவனே வேதாகமங்களை அருளிச் செய்தவன்; அவன்றன் திருமேனியும், உறுப்புக்களும், கருவிகளும், தொழில்களும் ஆகியன எல்லாம் அருளாலேயே அமைந்தவை; அவனது திருவருளே உயிர்களுக்கெல்லாம் ஆதாரம்; அவனே உயிர்கள்தோறும் உயிர்க்குயிராய்ப் புகுந்து நின்று இயக்குபவன்; இறைவனே ஐந்தொழில்களையும் நிகழ்த்தி, சர்வ சீவ சாட்சியாய் இலங்குகின்றான் என்னும் பற்பல, அரிய சாத்திர நுண்பொருள்கள், இப்பாடலின்கண் ஒருங்கு தொகுத்துச் சுருங்கச் சொல்லப் பெற்றுள்ளன.

இதன்பொருள்நலம் எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும், மொழிக்குமொழி தித்திப்பாக விளங்குகின்றது. இராமலிங்கர் ''அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை'' என்னும் அரிய பொருள் மொழியினை உலகுக்கு அளித்தவராதலின், அவர்தம் பாடல் தொடங்கும்போதே ''கருணை நிறைந்து'' எனத் தொடங்குகின்றது. பெருகிப் பரவுதல் கருணைக்கு இயல்பாகலின் ''துளும்பி வழிந்து'' எனப்பட்டது. அஃது உள்ளே துளும்பி, வெளியே வழிதலின், ''அகம்புறமும் துளும்பி வழிந்து'' என்றார். மறையை அமுதம் என்றும், வாயை மலர் என்றும் உருவகம் செய்த பொருத்தம், சிறப்புடையது. மறையைப் பொருள் நிறைந்தது என்றும், சிதையா ஞானப் பொருள் நிறைந்தது என்றும் விசேடித்தது, போற்றத்தக்கது. இன்பநிலை என்று வாளா கூறாமல், அறியாமை நீங்கி அறிவு பெருகிய வழியே இன்பம் உண்டாகுமாதலின், '' தெருள் நிறைந்த இன்பநிலை '' என்றது நுட்பம் மிக்கது. மனத்தினை மருள்நிறைந்தது என்றும், கருங்கல்-பாறை என்றும், அஃது இறைவனால் கசிதல்-உருகுதல் ஆகிய இருவகை நிலைகளை எய்தியது என்றும் குறிப்பிட்ட திறம், உன்னியுன்னி உவகையுறுதற்கு உரியது. இவற்றையெல்லாம் அவரவரே அன்புடன் நுண்ணிதிற் பல்கால்ஓதி, எண்ணியுணர்ந்து இன்புறக் கடவர். ஆதலின் அவற்றை விடுத்து, இப்பாடற்கண் இறையியல் நூல்கள் (*Philosophy, Theology*) கூறும் இறைமை இலக்கணங்கள் பலவும், ஒருவாற்றால் தொகுத்துணர்த்தப் பட்டுள்ள சிறப்பினை மட்டும், ஈண்டு நாம் சுருக்கமாகக் கண்டு இன்புறுவோம்.

**இருவகை இயல்பு :**

இறைவனின் இயல்பினைப் பொதுவியல்பு (தடத்த லட்சணம்) என்றும், சிறப்பியல்பு (சொரூப லட்சணம்) என்றும், சாத்திரங்கள் இரண்டாகக் கூறும். (1) இத்திருப்பாடலில் ''கருணைநிறைந்து, அகம்புறமும் துளும்பி வழிந்து, உயிர்க்கெல்லாம் களைகண் ஆகித் தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்! சிதையா ஞானப் பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்'' என்பது வரையில், பொதுவியல்பு கூறப் பெற்றது. (2) ''பொய்யனேன்தன் மருள் நிறைந்த மனக் கருங்கற் பாறையும் உட்கசிந்து உருக்கும் வடிவத் தோயே'' என்பதனால் சிறப்பியல்பு விளக்கப் பெற்றது.

முத்தி, முத்தம், முத்து என்ற சொற்களெல்லாம் ஞானவாய்மையையே குறிக்கும். திருஞானசம்பந்தர் நல்லூர்ப் பெருமணத்திற்கு போகையில் எல்லாம் வெண்முத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தார் என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடியுள்ளார். அதுபோல் இதில் 8-ம் பாட்டில் செவ்வேள் அணியும் முத்து வகைகள் எல்லாம் வர்ணிக்கப்பட்டுள்ளன. முத்தம் என்பது தலையளி அல்லது சிவப்பேறு கும். இதை நினைந்தே கவி பாடுகிருர். ''மெய் வாய் மூக்குக் கண் செவியின் வழிபோய் விடயங்களை யருந்தி விரவும் வினையாற் சுழல் பிறவி வேலை கடக்குங் கருத்துடையார் ஐவாய் வேட்கை யவா வொழிந்திட்டு ஆருதாரப் படியேறி யாருேடாறங்குல மீதி லறியு நிமலப் பெருவெளியில் கைவாய் மழுவுங் கறைமிடறுங் கண்ணுர் நுதலும் பிறை முடியுங் கவினத்தோன் றுஞ் சிவனிடத்திற் கலந்த வுமையாளுடன் பிறந்த மொய்வானுறும் மீனுவந் தளித்த முத்தே முத்தந்தருகவே மூலாத்திரியிலெழு ஞானமுளையே முத்தந் தருகவே! என்பது, தேவார திருவாசகச் சாயலைக் கொண்ட பாட்டு. இதன் தத்துவப் பொருளை ஈண்டு விளக்கப்புகின் வளரும். பாடிப்பாடி மகிழ்ந்தால் சாலும்.

வருகைப்பருவப் பாட்டின் மகுடம் ''தணிகைநாயகன் வருகவே, தடாமலப்பிணி எனை அடாது சிற்சுகமருள் சடானனக் குரு வருகவே'' என்பது நமது அருள் வேட்கையைக் குறிக்கும். ஒரு பாட்டில் முருகவேள் தாசரதியாசிரியனுகி உயர்வாழ்வு தருபவன் என்று போற்றப்படுகிருர். அம்புலிப் பருவப் பாக்களில் கவி தம் கற்பனைத் திறமையை முழுதும் காட்டியுள்ளார். சாம பேத தான தண்டம் என்ற நால்வகை உபாயத்தையும் கையாண்டு, சந்திரனைக் குழந்தை வடிவேலனுடன்ஆட வரும்படி கூப்பிடுகிருர். தண்ட உபாயத்தில் சந்திரனுடைய அடாத காரியங்களாகிய குருவின் இல்லாளைப் புணர்தல், உரோகிணி மாதரை நேசித்தல் இவைகளால் கூடிய ரோகமும், கலை க்ஷீணமும் அடைவதைச் சுட்டிக்காட்டி, செவ்வேளின் அவைகட்கு நேர் எதிரான கல்யாண குணங்களைப் பாடி அவர் ''வா'' என்று கூப்பிட, வாய் அம்புயம் நோகுமுன் நீ ஓடிவா, என்று அழைக்கிருர். அப்படி வரின் உனக்குப் பரிசு என்ன தெரியுமா? 'வீடுபெறலாம் அன்பர் பெறு மேன்மை பெறலாம் செங்கதிர் முன் வீறு பெறலாம் எங்குமுழல் வேலைதவிர் வாழ்வு பெறலாம், மாடுபெறலாம் நொந்தொழியா வாய்மை பெறலாம், இன்ப சுகவாரி பெறலாம் வெம்பணியில் வாதை யறலாம். முந்தை முயற்கூடும் அறலாம், பெண் களவிற் கூடு பழி பாவம் தெறலாம், கூனுமறலாம் வந்திடு எனக் கூறுமுன் நீ வந்தனையேல். ஆடுமயில் சூழ் தென் தணிகையாட வருவாய் அம்புலியே, ஆறுமுக னேடிங்கொரு நீயாட வருவாய் அம் புலியே!'' என்பது பாட்டு. இப்பாட்டில் சந்திரனுக்குரிய குறைவுகளும் இழிவுகளும் பேசப்பட்டு, ஆறுமுகனை அடைந்தால் அவை விலகும் என்று பாடுகிருர் கவி. நாமும், பழி பாவம் வாதை குற்றம் உடையவர்கள். முருகனை அடைந்தால் அவை தீரும் என்பது பொருள்.

சிற்றில் பருவப் பாட்டொன்றில் தணிகை நாயகனின் இறைமையின் பூரணத்தைப் புகழ்கிருர் கவி. ''கானத்திறைவா, மலைக்கிறைவா கயிலைக்கிறைவா, கலைக்கிறைவா, கமலத்திறைவன் செருக்கொழித்த கருணைக்கிறைவா, மகத்திறைவா, வானத்திறைவா, மறைக்கிறைவா, மயிலுக்கிறைவா, வருடமிசைமன்னும் இறைவா, செங்கடப்பமாலைக்கிறைவா, மதிக்கிறைவா, மோனத்திறைவா, அயிற்கிறைவா, மொய்ம்பார் கோழிக்கொடிக் கிறைவா, முனிவர்க்கிறைவா, வேதாந்த முத்திக்கிறைவா! என்று கவி போற்றுகிருர். வேதாந்த முத்தி அத்துவிதமுத்தி. அது லோகாயதர் முதலியோர் முத்திகட்கு மேம்பட்டது.

சிறுபறைப் பருவப்பாட்டொன்றில் ''முருகா, தகைத்திடும் பொறிவழி யுகைத்திடு புலனெடு தடைப்படு மனநிறுவாத் தவத்தினை அநுதினமும் செய்யும் முனிவர்கட்கு இருதேவிமார்களுடன் காட்சி கொடுக்க விரும்புகிறவனே அடியேனுக்கும் தினகரனுய் வந்து பறை முழக்கிக் காத்தருள்'' என வேண்டுகிருர் கவி.

கடைசி, சிறுதேர்ப் பருவப் பாட்டொன்றில் யமனின் கோபமான வேல் நம்மீது ஏவப்படு முன் தணிகை மாமலையில் முருகன் காத்தருள வேண்டும் என்று முறையிடுகிருர். மூன்று பாட்டுகளில் திருவடிநிழல் தந்து ஆண்டருள வேண்டுமென்று உயர்ந்த தத்துவநிலையிலிருந்து வேண்டுகிருர். ''காமக் குரோத மிகு லோபமொடு மோகமுங் கருதி மதமாச்சரியமுங் கட்டிப் பிணித்து நிரையத்திலிடும் ஐம்புலக் காதலும் மறந்து தாமுற்றிடும் துறவறத்தினிலே தவருது தழைகானகத்தடைந்து சருகருந்திப் பஞ்சதழலிடை இருந்து நற்றவ மியற்றிடு மாதவர் தோமற்ற சிந்தனைக் கெட்டாத நின் திருத்துணைமலர்ப் பத நீழலிற் றுயரற இருத்தி, எனை ஆண்டருள் செருத்தணி சுடர் கிரிய மர்ந்த முருகா சேமித்த மறை நெறிகளெங்கனும் விளங்கிட சத்திதர சிறு தேருருட்டியருளே என்பது அழகான பாட்டு, திருக்கடைக் காப்பாக ''முருகா, உனது பன்னிருகாதில் தமிழ்க் கடலின் ஒரு தினைத்துணையான இப் பிள்ளைத்தமிழை ஏற்றுக் கொள்வாயாக என்று வேண்டுகிருர் ஆசிரியர். உயர்ந்த வேண்டுகோள். சிவஞானசித்தி தரவேண்டுமென்பது மகுடத்தில் ஒலிக்கப்படுகிறது.

இப்பிள்ளைத்தமிழ்ப் பாக்கள் யாவும் அழகு தமிழில் பத்திச்சுவையுடனும் முத்திநிலை நாட்டத்துடனும் பாடப்பட்டுள்ளன. ஆசிரியர் கந்தப்ப முனிவர் வாக்கு, தாயுமானவர் அருணகிரியார் இவர்களது போல் இனிமையுடையது. கருத்துக்கள் மணிவாசகரது போல் உருக்கமானதாக உள்ளது. சொல்லணியும் பொருட் சுவையும் சேக்கிழார் கம்பர் இவர்கள் போன்றதாய் மேன்மையுடையது. இப்பிரபந்தம் சந்தமிகு பாட்டுகளாகையால் இசையுடன் பாடவல்லது. இத்தகைய செந்தமிழ்ப் பாடல்களைப் புலவர்களும் பாலர்களும், பக்தர்களும், இசைவாணர்களும் பயின்று போற்றிப் பயனடைவார்களாக! இசையரங்கங்களிலும் கோயில்களிலும், பாடப்பெற்றும், தமிழ் மாணவர்களால் பயிலப் பட்டும் இம்முருகன் பிள்ளைத்தமிழ் என்றும் நிலவுக!

**

# திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்

[ திரு. நல். முருகேச முதலியார், B.A. ]

தமிழுலகத்தில் பெரும்புலவர்கள் வகுத்துக் கொண்ட பாவினங்கள் பல. அவைகள், பஞ்ச காவியம் போன்ற பேரிலக்கியங்களும், பல திறப்பட்ட சிற்றிலக்கியங்களும் ஆகும். தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களில், கலம்பகம், கோவை, உலா, பிள்ளைத்தமிழ் முதலியன பிரசித்தம். வழிபடும் தெய்வம் ஒன்றை அல்லது பெரியோன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகவோ தலைவியாகவோ வைத்து ஆசிரியப் பாவில் பாடப்படுவன, பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். தெய்வங்களைக் குழந்தையாகப் பாவித்துப் பாடுவது நம் நாட்டின் எல்லா மொழிகளிலும் உள்ள மரபாகும். முருகனும், கிருஷ்ணனும், அம்பிகையும் குழந்தைத் தெய்வங்களாக மிகவும் பாராட்டுக்குரியவர்கள். பாலப் பருவத்தின் அற்புதங்கள், லீலைகள், பராக்கிரமங்கள், ஞானச் செயல்கள் எல்லாம் யாவர் உள்ளத்தையும் தொடும். நாயகநாயகி பாவத்தைவிட, வாத்சல்ய பாவம் மிகவும் எளிமையானது. எனவே, தாலாட்டு முதல் கவிசாதுர்யமுள்ள பாட்டுக்களும், பிள்ளைப்பருவத்துக்கு ஏற்கும். அமிழ்தெனும் தமிழ் மொழியில் மட்டுமே, பிள்ளைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாக வகுக்கப்பட்டு, ஆண்பால் பிள்ளைத்தமிழ் என்றும், பெண்பால் பிள்ளைத் தமிழ் என்றும் பிரிக்கப்பட்டு இலக்கிய விதிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இப்பாவினம் பாடுவதற்கும் உரியதால் இசைத் தமிழ் எனலாம்.

பிள்ளைத் தமிழின் பருவங்கள், பிள்ளை பிறந்ததும் காப்பிடல் முதல்ஐந்து அகவைக்குள் அடங்கும். அவை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்று பத்துப் பருவங்களாகும். பெண்பாலுக்கு ஈற்றில் கூறப்பட்ட மூன்றுக்கு ஈடாகக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பன இடம்பெறும், சுருங்கச் சொல்லில் இவை தமிழ் நாகரிகத்தில் குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, அறிவு விளக்கம் பெறும் வண்ணம் பராமரிக்கப்பட்டவைகளாகும். குழந்தை தீர்க்காயுளாக இருக்க வேண்டும் என்று எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்திப்பது காப்புப் பருவம். பின்காலை மடக்கித் தலையை அசைப்பது செங்கீரை. தாய் முதலாயினோரின் முகம் தெரிந்து, கை கொட்டிச் சிரிக்க ஆரம்பிப்பது சப்பாணி. தாய் முத்தமிடக் கொஞ்சுவது முத்தம். வாவென்றால் ஓடிவருவது வாரானை. தாய், சந்திரனைக் காட்டி விளையாடச் செய்வது சிறுபறை. மணலிற் கட்டிய சிறுவீடுகளை எற்றித் தள்ளி விளையாடுவது சிற்றில். சிறுதேரை உருட்டி விளையாடுவது சிறுதேர்ப் பருவம். இந்தப் பத்துப் பருவங்களையும் பாடும் போது கவிகள் சொல்லணி, கற்பனை முதலியவைகளை அழகுடன் கையாளுவர்.

பிள்ளைத் தமிழ்ப் பாடல்களைக் கேளாதார் பலர் இரார். முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் முதலியவைகளைப் பாமரர்களும் பாடுவர். கோயில்களிலும் இசையரங்குகளிலும் இவை பாடப் படுகின்றன. முருகனைப் பற்றிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள்தான் அதிகம். காரணம் முருகனது அவதாரம் விசித்திரமானது. அவர் ஐம்முகச் சிவனார் நெற்றிக் கண்ணில் அவதரித்தவர். பால லீலைகளான பிரம்மனைக் குட்டிச் சிறை வைத்தது விநோதம். அம்பாளிடம் வேல் வாங்கி இலட்சத்து ஒன்பது வீரர்களுடன் சூரபன்மாவை எதிர்த்து வென்று, அவனை மயில் வாகனமாகவும், சேவற் கொடியுமாக ஏற்றுக் கொண்டது அருட்சம்மாரம். தேவர்களைச் சிறை விடுத்து இந்திரன் மகளான தேவயானையை மணம் புரிந்ததும், பின் தானாகவே வலிந்து வள்ளியை மணந்ததும், முருகனது முழுப் பூரணத் துவத்தையும் பிரகாசிக்கச் செய்தது மிகவும் அற்புதமான சரிதை. திருத்தணியில் ஞான சக்திதரன் என்னும் நிலையில்தான் இச்சா கிரியா சத்திகளான வள்ளி தெய்வயானை என்னும் இரு தேவிமார்களுடன் அமர்ந்து பக்தர்கட்கு அருள் பாலிப்பதை, எந்தக் கவிஞர் பாடினாலும் அழகாகத்தான் இருக்கும். திருத்தணிகை, முருகனது ஆறுபடைவீடுகளில் ஒன்று என்று கூறப்படினும், அது மூலாத்திரி எனப்படும். அத்தலத்தை முப்போதும் வணங்கி ''முருகா'' என்றாலும் பாட்டேயாகும். முருகனின் புகழ் முழக்கம் திருத்தணியில் விசேடம் என்பது கண்கூடு.

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழை இயற்றிய கந்தப்ப தேசிகர், திருத்தணிகையில் உதித்தவர். அவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். அதே திருத்தணியில் உதித்துப் பின் திருவாவடுதுறையில் விளங்கியவரும், விநாயகபுராணம், தணிகைப் புராணம் முதலியன இயற்றிக் 'கவிராட்சசர்' என்று பெயர் பெற்றவரும் ஆகிய கச்சியப்ப முனிவரின் முதல் மாணவர் கந்தப்ப தேசிகர். ஆசிரியரைப்போல் மாணவரும் பெரும் புலவர். தணிகாசலபுராணம், திருத்தணிகைச் சந்நிதிமுறை இன்னும் பல நூல்களை இயற்றியவர். திருத்தணிகைச் சந்நிதி முறையில் அடங்கிய ஒரு பிரபந்தமே திருத்தணிகைப் பிள்ளைத் தமிழாகும். ஆசிரியரது இருபுத்திரர்களான விசாகப் பெருமாள் ஐயரும், சரவணப் பெருமாள் ஐயரும், பெரும்புலவர்களாக விளங்கினர். கந்தப்பையர் திருப்போரூர்ச் சந்நிதி முறை இயற்றிய சிதம்பர சுவாமிகள் போல் வீர சைவர். அவர் திருத்தணி மலையிலேயே வந்து, சீலத்துடன் முப்போதும் முருகனை வணங்கி, சந்நிதிமுறை பாடினார். பெரும்புலமையும் சிறந்த பத்திமையும் சேர்ந்து

**எண்குணங்கள் :**

இறைவனை எட்டுக் குணங்கள் உடைய வனாக, நூல்கள் கூறும். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் ''எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்னும் திருக்குறளில், அங்ஙனம் குறித்துள்ளார். அவ்வெட்டுக் குணங்களும், இத் திருவருட்பாவில் தொகுத்துச் சுட்டப்பெற்றுள்ளன.

(1) ''உயிர்க் கெல்லாம் களைகண் ஆகி''—தன் வயத்தனாதல்.
(2) ''வடிவத் தோய்''—தூய உடம்பினனாதல்.
(3) ''சிதையா ஞானப் பொருள் நிறைந்த''—இயல்பாகப் பாசங்களின் நீங்குதல்.
(4,5) ''மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்''—இயற்கையுணர்வு, முற்றுணர்வு.
(6) ''கருணை நிறைந்து வழிந்து'' — பேரருள் உடையனாதல்.
(7) ''மனக்கருங்கற் பாறையும் உட்கசிந்து உருக்கும்''—முடிவிலாற்றல் உடையனாதல்.
(8) ''இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்'' வரம்பில்இன்பம் உடையவனாதல்.

**சத்து சித்து ஆனந்தம் :**

இறைவன், சத்து (உண்மை), சித்து (அறிவு), ஆனந்தம் (இன்பம்) என விளங்குகின்றனன் என நம் வேதாகம உபநிடதங்கள் யாவும் முழங்கும். இம் மூவகை இயல்பும் இப்பாடலில் புலப்படுத்தப் பெற்றுள்ளன.

(1) ''சிதையா ஞானப் பொருள்'' என்றது, சத்தாதல்.
(2) ''கருணை நிறைந்து துளும்பி வழிந்து மறையமுதம் பொழிகின்ற மலர் வாயோய்'' என்றது சித்தாதல்.
(3) ''தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்'' என்றது, ஆனந்தமாதல்.

**திருவைந்தெழுத்து :**

திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாக்கரத்தின் சிறப்பு, வேதாகமங்கள் அனைத்தாலும் விரித்தோதப் படுவதாகும். நமசிவய அல்லது சிவயநம என்னும் திருவைந்தெழுத்தில், சிகரம் சிவத்தையும், வகரம் திருவருளையும், யகரம் ஆன்மா என்னும் உயிரையும், நகரம் திரோதானசத்தி எனப்படும் மறைப்பாற்றலையும், மகரம் பாசம் ஆகிய ஆணவ மலத்தையும் குறிக்கும் எனப் பெரியோர்கள் கூறுவர். இத் திருவைந்தெழுத்துப் பற்றிய குறிப்பும், இப் பாடலில் அமைந்துள்ளது.

(1) ''சிதையா ஞானப் பொருள்''—சிகரம், சிவம்.
(2) ''மனக் கருங்கற் பாறையையும் உட்கசிந்து உருக்கும் வடிவத்தோய்''—வகரம், திருவருள்
(3) ''உயிர்க்கெல்லாம்''—யகரம், ஆன்மா.
(4) ''களைகண் ஆகி''—நகரம், திரோதானசத்தி.
(5) ''பொய்யனேன்றன் மருள் நிறைந்த மனம்''—மகரம், பாசம்.

**சிவஞானபோதம் :**

நமது தமிழ்மொழியின்கண் நீதி நூல்களுள் திருக்குறளும், பக்தி நூல்களுள் திருவாசகமும், இலக்கண நூல்களுள் தொல்காப்பியமும் போல, தத்துவநூல்களுள் தலைசிறந்து நிற்பது, சிவஞானபோதம். அது பன்னிரண்டு சூத்திரங்களால் இயன்றது. அவைகள் முறையே பதியுண்மைக்குப் பிரமாணம், பாசம் உண்மைக்குப் பிரமாணம், பசு உண்மைக்குப் பிரமாணம், பசு இலக்கணம், பாச இலக்கணம், பதியிலக்கணம், ஆன்மாவின் சிறப்பியல்பு, ஞானத்தினை யுணரும் முறைமை, ஆன்மசுத்தி, பாசநீக்கம், சிவப்பேறு, அணைந்தோர் தன்மை என்னும் பன்னிரண்டு பொருள்களை விளக்கும். இத்தகைய சிவஞான போதம் என்னும் செந்தமிழ்த் தத்துவஞான நூலின் பன்னிரு சூத்திரப் பொருள்நுட்பக் குறிப்பும்கூட, ஒருவாற்றால் இத்திருவருட்பாப் பாடலில் தொகுத்துச் சுட்டப்பெற்றுள்ளது எனலாம். இப்பாடலில்,

**பன்னிரு சூத்திரங்கள் :**

(1) ''உயிர்க்கெல்லாம் களைகண்'' என்றதனால் உலகங்களைப் படைத்துக் காத்து ஒடுக்கி உயிர்களுக்கு நலம்புரியும் கடவுளாகிய பதியுண்மையும், (2) ''களைகண்ஆகி'' என்றதனால் அவையேயாய்-தானேயாய்-அவையே தானேயாய் நின்று, இறைவனால் இயக்கப்படும் பாச உண்மையும் (3) ''பொய்யனேன்'' என்றதனால் பசுவுண்மையும், (4) ''மருள் நிறைந்த மனக் கருங்கற் பாறை'' என்றதனால் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி முதலிய ஐந்தவத்தைப் படும் பசுவின் இலக்கணமும், (5) ''கருணை நிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்து'' என்றதனால் முதல்வனின் சிற்சத்தியாகிய கருணை, உயிர்களின் உள்ளும் புறம்பும் கலந்து உதவிபுரிதலாகிய பாச இலக்கணமும், (6) ''சிதையா ஞானப் பொருள்'' என்றதனால் பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலும் உணபடாமல் சிவஞானம் ஒன்றால் மட்டும் உணரப் பெறும் பதியின் இலக்கணமும், (7) ''தெருள் நிறைந்த'' என்றதனால் சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் அழுந்தும் சதசத்தாகிய ஆன்மாவின் சிறப்பிலக்கணமும் (8) ''மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய் என்றதனால் ஞானத்தை யுணரும் முறைமையும் (9) ''கண்ணுடையோய்'' என்றதனால் ஊனக் கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடுதலாகிய ஆன்மசுத்தியும், (10) ''வளர்க்கின்ற'' என்றதனால் அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடும் வல்வினை தீர்தல் ஆகிய பாச நீக்கமும், (11) ''இன்ப நிலை'' என்றதனால் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற் காண உள்ளத்தைக் கண்டு காட்டப் பெறுதலாகிய சிவப்பேறும் (12) ''உட்கசிந்து உருக்கும் வடிவத்தோயே'' என்றதனால் சீவன்முத்தர் இயல்பாகிய அணைந்தோர் தன்மையும் சுட்டப்பெற்றிருத்தல் காணலாம்.

**முடிவுரை :**

இன்னோரனைய பலப்பல நுண்ணிய பொருள்களையெல்லாம், தன்னகத்தே பொதிந்து கொண்டு தலைசிறந்து விளங்கும் இப்பாடலைப் போன்ற, எத்தனையோ பல தெய்விக நலப் பாடல்களையுடைய, இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாப் பாடல்களை, நாம் இடையறாது ஓதி ஓதி இறையருள் பெற்று உய்ய முயல்வோமாக!

* *

## ஆதி சங்கரரின்

# கணேச பஞ்சரத்ன ஸ்தோத்ரம்

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A., L.T.,

முதா கராத்த மோதகம் சதா விமுக்திசாதகம்

கலாதராவதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம்

அநாயகைகநாயகம் விநாசிதேபதைத்யகம்

நதாசுபாசுநாசகம் நமாமி தம் விநாயகம். (1)

'மிகுந்த மகிழ்ச்சியோடு கொழுக்கட்டையைக் கையில் ஏந்தியிருப்பவர்; என்றும் முத்தியளிப்பதில் நாட்டம் கொண்டவர்; முடிமணியாகச் சந்திரனை அணிந்திருப்பவர்; மகிழ்ச்சி மிக்க மக்களைக் காப்பவர்; தம்மின் மேலான நாயகர் இல்லாத தனி முதற்றலைவர்; யானையுருக் கொண்ட அரக்கனை அழித்தவர்; வணங்குவோரின் தீவினையை விரைவில் ஒழிப்பவர்; இத்தகைய விநாயகரை வணங்குகிறேன்'.

'மோதகம்' என்ற சொல்' 'மகிழ்ச்சியினை விளைவித்தல்' என்றும் பொருள்படும். மக்கள் இடர் களைந்து மகிழ்ச்சியை விளைவிக்கும் செயலை இனிப்பான மோதகமெனும் கொழுக்கட்டை உணர்த்துவதாகக் கொள்ளலாம். வரமருளும் இடக்கையில் இது இருப்பது பொருத்தமே. 'முத்திநலஞ் சொன்னவனே' என்று விநாயகபுராணம் விளம்பும். 'பால்புரை நீற்றேன்' ஆகிய சிவபெருமானின் மூத்த பிள்ளையாதலால் தந்தைக்குள்ள அடையாளம் பின்னையாருக்கும் ஏற்றிக் கூறப்பட்டது. மேலான நாயகன் தனக்கில்லாமையால் (அ-இன்மை) அநாயகன் என்று இங்கே அழைக்கப்படுகிறார். (வி-இன்மை) விநாயகர் எனினும் பொருந்தும். விநாசித இப தைத்யகம்-அழிக்கப்பட்ட யானையுருக்கொண்ட (இப) அரக்கன் (தைத்யகம்). நத (வணங்கியவர்களின்) அசுப (தீமைகளை) ஆசு (விரைவில்) நாசகம் (அழிப்பவர்). 'விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்' என்று கூறும் மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

நதேதராதிபீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்

நமத்ஸுராரி நிர்ஜரம் நதாதிகாபதுத்தரம்

ஸுரேச்வரம் நிதீச்வரம் கஜேச்வரம் கணேச்வரம்

மஹேச்வரம் தமாச்ரயே பராத்பரம் நிரந்தரம். (2)

இவர் தம்மை வணங்காதவரிடத்தில் அச்சத்தைத் தோற்றுவிப்பவர்; எழுகின்ற ஞாயிறு போல் ஒளிமிக்கவர்; தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்படுபவர்; வணங்குவோரை மிகுந்த ஆபத்திலிருந்தும் தூக்கிவிடுபவர்; தேவர்கோன், செல்வத்திற்கு ஈசன், யானைத் தலைவன், கணநாதன், மகேசுவரன், அப்பாலுக்கு அப்பாலானவன், எங்கும் நிறைந்திருப்பவன் என்றெல்லாம் போற்றப்படும் அவரைப் புகலிடமாகக் கொள்வேன்.

'தேவதாத்மா' என்றும், 'தைத்ய விமர்த்தனன்' (அரக்கரை அழிப்பவன்) என்றும் கணேசபுராணத்திலுள்ள சஹஸ்ரநாமஸ்தோத்ரம் கூறும். 'வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத் துள்ளியோடும் தொடரும் வினைகளே' என்பது ஔவையார் பாடல். சிவப்பிரகாசம் காப்புச் செய்யுளில் 'ஒளியான திருமேனி உடையவர்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் இங்கே கருதத்தக்கது.

சமஸ்தலோகசங்கரம் நிரஸ்ததைத்யகுஞ்சரம்

தரேதரோதரம் வரம் வரேபவக்த்ரமக்ஷரம்

க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்

மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம். (3)

அகில உலகிற்கும் மங்களத்தைச் செயபவர். யானை உருவில் வந்த அரக்கனை அழித்தவர். பெரிய வயிற்றை உடையவர். எல்லோராலும் விரும்பப்படுபவர் (வரம்). பீடுடைய யானையின் தலையை உடையவர். நித்தியர். அருள் புரிபவர். பொறையுடையவர். ஆனந்தத்தைத் தருபவர். புகழை விளைவிப்பவர். வணங்குவோரின் உள்ளத்தைத் தூய்மையுறச் செய்பவர். அத்தகைய ஒளிமிக்க பெருமானை வணங்குகிறேன்.

ஒரு காலத்தில் கயமுகாசுரன் என்ற கொடிய அரக்கன் இருந்தான். அவனை அழிக்க வேண்டித் தேவர்கள் சிவபெருமானை வேண்ட, சிவனும் பார்வதியும் யானை வடிவமான மந்திர உடல்கொண்டு இணைய, யானைமுகத்தோனாகிய விநாயகர் தோன்றினார். விநாயகர் தன்

# திருமாலுக்கு இருமாலை அளித்த பெருமாட்டியார்

(திரு. இராஜகோபால ராமாநுஜதாசன்)

மாதவனும் எம்பெருமானுக்குக் கந்தம் பொலியும் மலர்மாலையும் சூடிக் கொடுத்து, சந்தம் பொலியும் பாமாலையும் பாடிக் கொடுத்ததனால், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய நாச்சியாருக்கு இருமாலை திருமாலுக்களித்த பெருமை வாய்த்தது. வில்லிபுத்தூர் எனும் பதி நூற்றெட்டு வைணவத் தலங்களில், பாண்டி நன்னாட்டுத் தொல்பதிக்கண், எல்லா வளனும் நிரம்பப் பெற்றதாய், வைணவரும் பிறரும் வைகும் பெரும்பதியாகும்.

இருநிதியும் பெருகிய திருவில்லிபுத்தூர் நல்நகர் அந்தணரில், முகுந்தாச்சாரி, அவர்தம் இல்லக்கிழத்தி பதுமையென்பார், மாலின் அன்பர்கட்குக் கருடன் அம்சமாகக் கலி நாற்பத்தேழில் விட்டுணுசித்தர் அவதரித்தார். பெற்றோரும் மற்றோரும் பேணி வளர்த்த இப்பிள்ளைக்கு நூல் விதித்த நியமப்படி, அன்னப்பிராசனம், சவுளம், எழுத்தறிவித்தல், உபநயனம், கல்விப் பயிற்சி முதலியன முட்டின்றி முடித்தனர்.

பாண்டிய மன்னன் வல்லப தேவன் தன் அவையில் பந்தயமாகக் கட்டி வைத்த பொற்கிழியை, வேண்டிய வேதங்களோதித் திருமாலாம் நாராயணனே பரம்பொருள் என்று சாதித்து, எட்டா உயரத்திலிருந்த பொற்கிழி கிட்டிவரத் தாம் அதை அறுத்துக் கொண்டார் விஷ்ணுசித்தர். அதுகண்ட பாண்டிய மன்னன் மனந் தெளிந்து, நம் பட்டர்பிரான் என்று புகழ்ந்து பாராட்டினான். மேலும் பாண்டியன் பட்டர்பிரானைப் பட்டத்துயானையின் மேல் எழுந்தருளச் செய்து, சான்றோரும், நாவலோர் பலரும் ஆழ்வாருடைய திருவடிகளில் வணங்க, நகர்வலம் செய்வித்தான்.

ஆழ்வார், திருநகரை வலம்வரும் சிறப்பைக் காண நாராயணன் இலக்குமியுடன் கருடன்மேல் அமர்ந்து அந்தரத்தில் தோன்றினார். அதுகண்ட ஆழ்வார் பக்திபரவசப் பட்டவராய், எம்பெருமான் இப்படி எல்லோர் முன்னும் காட்சி தந்தருளுகிறாரே, மானுடவர் கண்ணேறுபடுமே என்று பயந்து, ஆழ்வார் யானையின் மணியினையே கைத்தாளமாகத் தட்டிக் கொண்டு, சந்ததம் பல்லாண்டு என்று பல்லாண்டு பாடினார். பின்னர் நம்பட்டர்பிரான் வில்லிபுத்தூர் வடபத்திரசயனரான ரங்கமன்னார் பெருமாளை வழிபட்டு வரும்நாளில் ''ஒருத்திமகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளரும் கண்ணன் என்னும் கிருஷ்ணனை ''வண்ண மாடங்கள் சூழ்திருக்கோட்டியூர் நம்பி பிறந்ததிலிருந்து கண்ணன் கேசவன் திருவிளையாடல்களை'' எல்லாம் அனுபவித்துத் ''திருமொழி'' என்னும் திவ்வியப்பிரபந்தத்தை உலகோர்க்கு உபகரித்தருளினார்.

இங்ஙனம் பட்டர்பிரான் எம்பெருமானுக்கு உவப்பாம் நிலையில் பூமாலைசாத்தும் திருப்பணியை மேற்கொண்டு திருநந்தவனம் அமைத்துத் தொண்டுபூண்டு ஒழுகும் நாளில், வாசுதேவன் வாய்மலர்ந்த நியமத்தால் மண்மகள் ஒரு பெண்மகவாய்ப் பட்டர்பிரான் திருநந்தவனத்துத் திருத்துளவின்கீழ் மகவாய்க் கிடந்தாள். ஆழ்வார் அந்நிலையில் குழந்தையின் வனப்பைக் கண்டு திகைத்தார். அப்போது ஆகாயவாணி ஆழ்வாரை விளித்து ''இக்குழந்தை நாடோறும் நாராயணனுக்குப் பாமாலையோடு நறும்பூமாலை சாத்த உமக்கு மகளாய் வந்தாள் என்ன, ஆழ்வாரும் ஆனந்த மேலிட்டாராய் அக்குழந்தையை இருகைகளாலும் ஏந்தி எடுத்துக் கொண்டுபோய்த் தன் பத்தினி கையில் ஈந்தார். ஆழ்வாரின் தேவியார் குழந்தையின் பேரழகைக் கண்டு உவகையினால் மார்போடணைத்துக் கொண்டார். உடன் சுரந்த முலைப்பாலூட்டி வளர்த்து வந்தாள். ஆழ்வார் வரப்போகும் நிகழ்வை அறிந்து குழந்தைக்குக் கோதையெனப் பெயர் சூட்டினார். கோதையும், தவழ்ந்தும், அமர்ந்தும், நடைபயின்றும், மணிமலர்கள் சூடி, தம் போன்ற சிறுமியருடன் தெருவில் விளையாடி வருவாளாயினாள்.

கோதையார் மற்ற சிறுமியர் போலல்லாது மண்ணினால் கிருஷ்ணன், ருக்மிணி தேவியின் உருவங்கள் செய்து கல்யாணகோலங் கண்டு விளையாடலானாள். அது கண்ட ஆழ்வார் இக்குழந்தை தம்மை ஆளவந்தவள் என்று அவளுக்கு ''ஆண்டாள்'' எனத் திருநாமஞ்சாத்தி, கல்வி நலமெல்லாம் சிறக்கச் செய்தார். நாரணன்தன் சங்கு ஆழியாம் திருவிலச்சினைகளைச் சாத்தி, பஞ்ச சம்ஸ்காரமும் அருளித் திருமந்திர உபதேசமும் செய்தருளினார்.

கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனாலேயே அவ்வசுரனை வீழ்த்தினர் என்பது விநாயக புராண வரலாறு. அவருடைய பெருவயிறு வானம்போல் இருப்பதால், உலகம் தோன்ற வும் இருக்கவும் ஒடுங்கவும், வானம் இடமாக இருப்பதுபோல் இவர் வயிறும் உள்ளது என்பது குறிப்பு.

உமையம்மை ஒருகால் மண்ணுருவில் செய்யப்பட்ட ஒரு குழந்தையை அன்புடன் காத்து வந்தார். அதன்மீது ஒரு சமயம் சனி யின் பார்வை விழத் தலைஅறுபட்டு மறைந்த தென்றும், இதனையறிந்த சிவபெருமான் வேறொரு தலையைக் கொணர்க எனப் பூதகணங் களை ஏவ அவர்கள் ஒரு யானைத் தலையைக் கொணர்ந்தனர் என்றும், அது அவ்வுருவில் பொருத்தப்பெற்று 'இபமுகம்' (யானைமுகத்தன்) என்னும் பெயர் பெற்றதென்றும் சிவபுராணம் கூறும்.' 'தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு நல்ல மனமுண்டாம் மாமல ராள் நோக்குண்டாம்' என்ற மூதுரை ஈண்டு சிந்திக்கத்தக்கது.

அகிஞ்சனார்த்திமார்ஜனம் கிரந்தனேக்திபாஜனம்

புராரிபூர்வநந்தனம் ஸுராரிகர்வசர்வணம்

ப்ரபஞ்சநாதபீஷணம் தனஞ்ஜயாதிபூஷணம்

கபோலதானவாரணம் பஜேபுராண வாரணம். (4)

ஏழை எளியவரின் துயர் துடைப்பவன். சுருதி முதலானவற்றிற்கு விஷயமாக இருப்ப வன். முப்புரம் எரித்தவனின் மூத்தமகன். கயாசுரன் முதலான அரக்கர் கர்வத்தைப் பொடிப்பவன். பிரபஞ்சத்தையே அழிக்கும் உக்கிரமூர்த்தி, தனஞ்சயன் முதலானோருக்கு மேன்மையை உண்டுபண்ணியவன். மதநீர் பெருக்கும் கன்னத்தை உடையவன். இத் தகைய பழம்பெரும் ஆனைமுகத்தனைப் பரவு கின்றேன்.

'சீறுமுகத்து ஊறுமதத்து ஆனைமுகத் தானை நினைத்தால் இடையூறு நீங்குவது' உறுதி என்ற புறப்பொருள் வெண்பா மாலைக் கூற்றும், 'மொழியின் மறைமுதலே' என்ற அதிராவடிகள் வாக்கும், 'கொடிக்கேர் [illegible] தன்னுழைத் தோன்றினனே' என்ற நம்பியாண்டார் நம்பி களின் விநாயகர் திருவிரட்டைமணிமாலை வரி களும், 'வேதாந்த வேத்யம் சதானந்தரூபம் கணேசம் பஜே அஹம்' என்ற ஸ்ரீகணேசாஷ் டகப் பகுதியும், 'விசுவச்ருக்' விசுவபுக், விச் வசம்ஹர்த்தா, விசுவகோபனன், விசுவாநுக்ரா ஹகன் என்பதாகத் தோற்றுவித்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றவர் என்ற மகா சைவதந்திர வாக்கியமும் இங்கே நினைவு கூரத் தக்கன.

நிதாந்தகாந்ததந்தகாந்திம் அந்தகாந்தகாத்மஜம்

அசிந்த்யரூபம் அந்தஹீனம் அந்தராயக்ருந்தனம்

ஹ்ருதந்தரே நிரந்தரம் வசந்தமேவ யோகினும்

தமேகதந்தமேவ தம் விசிந்தயாமி சந்ததம். (5)

மிகவும் வசீகரிக்கக்கூடிய தந்த ஒளியை உடையவரும், காலகாலனின் புதல்வரும், எண்ணுதற்கரிய உருவை உடையவரும், முடி வற்றவரும், இடர்களைக் களைபவரும், யோகிய ரின் உள்ளத்தே இடையறாது இருப்பவரு மான அந்த ஒற்றைக் கொம்பனை எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

'ஒற்றை வெண்தந்த வேழமுகத்தெம்பி ரான்' காலமெனும் கூற்றுவனைக் காலால் உதைத்தருளிய சிவபெருமானின் தனயன். மார்க்கண்டேயனுக்குத் தந்தை அருளியவாறு, தந்தையின் இயல்பைத் தனயனும் பெற்று ளான் என்பது குறிப்பு. 'கோவிற் கொடிய நமன் தமர் கூடாவகை விடுவன்' என்பார் நம்பியாண்டார். அவனது முகம் விலங்கை யும், உடல் மனிதரையும், நான்கு கைகள் தேவரையும் நினைவுறுத்துகின்றன. மேலும் அவனது தன்மையும் ஆற்றலும் அளவிறந்தன. ஆகவே சிந்தைக்கும் எட்டாத நிலையில் இருக் கிறான். ஸ்ரீவித்யாகணேச அஷ்டோத்தரசத நாம ஸ்தோத்திரத்தில் 'மானஸன்' என்பது ஒரு பெயர். 'உள்ளத்திலே வீற்றிருப்பவன்' என்பது பொருள். 'யோககம்யன்', யோகத்தி னால் அடையத்தக்கவன் என்று கூறுகிறது ஸ்ரீகணேசாஷ்டகம்.

மஹாகணேச பஞ்சரத்னம் ஆதரேண யோந்வஹம்

ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதிஸ்மரன் கணேச்வரம்

அரோகதாம் அதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்

ஸமாஹிதாயுர் அஷ்டபூதிம் அப்யுபைதி ஸோசிராத் (6)

(ஐந்து செய்யுட்களைக் கொண்ட) இம் மகாகணேச பஞ்சரத்னத்தை எவனொருவன் தினந்தோறும் விடியற்காலையில் பக்தியுடன் ஓதி இதயத்தில் கணேசுவரனை இருத்துகின் றானோ, அவனுக்கு நோயின்மை, குற்றமின்மை, நூலியற்றும்வன்மை, நன்மக்கட்பேறு, அமைதி யான ஆயுட்காலம், எட்டு ஐசுவரியங்கள் ஆகி யவை விரைவில் கிட்டும்.

'திரு ஆக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்' என்று கபிலதேவர் கூறியது போல, இப்பஞ்சரத்னஸ்தோத்திரத்தை உள் ளன்புடன் ஓதி உணர்வார்க்குக் கிட்டும் இம்மைப் பயனை ஆதிசங்கரர் 'பலசுருதி'யாக இவ்விறுதிப்பாடலில் குறிப்பிடுகிறார். இம்மைப் பயனை நுகரத் தொடங்கியவர் விடாது இந் நூலைப் பயில்வர். அப்போது விநாயகர் அல் லல் களைந்து அருள்வழி காட்டுவார். சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டுவார். சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டுவார். இப்படி படிப்படியாக அழைத்துச் சென்று இவ் வித்தக விநாயகர் தத்துவநிலையைத் தந்து ஆண்டு கொள்வார்.

* *

# 'அகரம்—ஆலயங்கள்'

(திரு. மா. சந்திரமூர்த்தி, எம்.ஏ.)

மதுரையிலிருந்து திருப்பூவணம் செல்லும் சாலையில் 13 கி.மீ. தொலைவில் மணலூர் என்னும் ஊர் உண்டு. இவ்வூருக்கு தெற்கே செல்லும் வண்டிப்பாதையில் மூன்று கி.மீ. தொலைவில் அகரம் என்னும் சிற்றூர் உள்ளது.

## கோயில்கள் :

இவ்வூரில் அருகதேவன் கோயில், மாரியம்மன்கோவில், நாகர்கோயில் ஆகியவை வழிபாட்டில் உள்ளன. இவற்றைத் தவிர முற்றிலும் சிதைந்த சிவன் கோயில் ஒன்றின் அடிச்சுவரை இவ்வூர் வயற்காட்டில் காணலாம். இப் பகுதியில் சிவன் கோயிலுக்குரிய நந்தியின் உருவம் ஒன்றும் காணப்படுகிறது. இதைத் தவிர இடிந்த பெருமாள் கோயிலின் தடயங்கள் சிவ பெருமான் குளக்கரையில் காணப்படுகின்றன.

## முக்குடைநாதர் :

அகரம் வண்டிச்சாலையில் மேற்குத் திசையில் அம்மன் கோவில் திடல் என்ற மேட்டுப் பகுதி உள்ளது. இத்திடலில் அமைந்துள்ள அம்மன் கோயிலின் முன்புறம் முக்குடைநாதரின் உருவம் ஒன்று பலகைக்கல்லிலே செதுக்கப்பட்டுள்ளது. உருவம் கிழக்குத் திசை நோக்கியது. முக்குடைநாதர் தம் இரு உள்ளங்கால்கள் மேனோக்குமாறு பத்மபீடத்தின் மீது யோக நிலையில் அமர்ந்து காட்சி அளிக்கிறார். இரு கைகளும் மடிமேல் தியான முத்திரையில் கொண்டு காட்டப்பட்டுள்ளன. இவ்வுருவம் வீற்றிருக்கும் ஆசனம் பக்கவாட்டில் திண்டு, மகரவாய் அணிசெய்யும் சிம்மாசனம் ஆகும். இவ்வுருவத்தின் தோள்களிலிருந்து தோன்றும் ஜுவாலை வரிசையை உடைய பிரபாவளி, தலையைச் சுற்றி அரைவட்டமாகச் செல்கிறது.

## தற்போதைய நிலை :

இவ்வுருவத்தின் தலைப்பகுதி சிறிது உடைந்துள்ளது, முகம் தேய்ந்துள்ளது. கண், மூக்கு யாவும் மழுங்கி விட்டன. எனினும் முக்குடைநாதரின் முகத்தில் ஒருவித அமைதியும் ஆன்மீகப் பொலிவும் திகழ்வதைக் காணலாம். சற்று விரிந்த மார்பும், அகன்ற தோள்களும், நீள் செவியும், இச்சிலையின் வனப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன. இச்சிலை அமைந்துள்ள கற்பலகை சுமார் 67 செ. மீ. உயரமும், 60 செ. மீ அகலமும் உடையன.

## இயக்கர்கள் :

முக்குடைநாதரின் பக்கவாட்டில் சுமார் 30 செ. மீ உயரமுடைய இரு இயக்கர்களின் உருவங்கள் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன. வலப்புறத்தேயுள்ள வனப்புமிகு இயக்கரின் சிலை இடுப்பிற்கு மேல் உடைந்துள்ளது. மற்றொரு இயக்கரின் முன் கைப் பகுதி மட்டும் உடைந்துள்ளது. இயக்கரின் முடியை அடுக்கின குடங்கள் போன்ற அமைப்புடையகரண்ட மகுடமும், காதில் பத்திரகுண்டலமும், கழுத்தில் மெல்லிய ஆரமும், மார்பில் ஓடும் புரிநூலும், இடையில் ஆடையும், அணிசெய்கின்றன. இயக்கியரின் வலக்கை மடக்கி வரத முத்திரையிலும், இடக்கை நீள்சாமரை ஏந்தியும், அருகதேவனுக்கு தொண்டாற்றும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. மற்ற இடங்களை விட இயக்கரின் உருவங்கள் இங்கு மிகச் சிறியனவாக வடிக்கப்பட்டுள்ளன.

இம்முக்குடைநாதரின் உருவம் பாண்டிய நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காயல், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள பசும்பொன் ஆகிய இடங்களில் உள்ள முக்குடைநாதரின் சிற்பங்களை ஒத்த அமைப்புடையது.

இவ்வுருவத்தின் வடிவ அமைதி, உடல் அமைப்பு முகப்பொலிவு ஆகியவற்றை நோக்கின், கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த பிற்காலப் பாண்டியர் கலை மரபில் அமைந்திருப்பதைக் காணலாம்.

## வழிபாடு :

இம்முக்குடைநாதரின் உருவம் இப்பகுதியில் வாழும் அரிஜன மக்களால் 'முனிச்சாமி' என்ற பெயரில் வணங்கப்பட்டு வருகிறது. இம் முனிச்சாமி சுமார் 72 வீடுகளையுடைய அகரம் மக்களின் ஆழ்ந்த நம்பிக்கைக்கு நிலைக்களமாக விளங்குகிறது. இவ்வாறு சிவகங்கை வட்டத்தில் மல்லாக்கோட்டை அருகில் உள்ள சுத்த

ஆழ்வார், நாடோறும் வண்டுபடா மண மலருடன் நறுந்துழாய் மாலை தொடுத்து நம் பெருமானுக்குச் சாத்தித் தொண்டு பூண்டொழுகி வந்தார். கோதையார் அம் மாலையின் அழகைக்கண்டு ஒருவருக்கும் தெரியாவண்ணம், அம்மாலையைத் தாம் சூடிக்கொண்டு அதன் அழகுவெள்ளத்தில் திளைத்துப் பின் முன்பிருந்த வண்ணமே அம்மாலையை வைப்பாராயினர்.

ஓர்நாள் இச்செயலை நேரில் கண்ட ஆழ்வார், இன்று பெருமானுக்குத் தொங்கலணியும் தொண்டு தடைப்பட்டதே என்று வருந்தியிருந்தார். அன்றிரவு அரங்கன் ஆழ்வாரின் கனவில் தோன்றி ''ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே நமக்கு உவப்பைத் தருகின்றது'' எனத் திருவாய்மலர்ந்தருளினர். அன்றிரவே அவர், கோதையார் கனவிலும் தோன்றி யாம் உனை மணப்போம் என்றருளினர்.

இப்பால் கோதையார் வேதக்கோன் விஷ்ணுசித்தரை நோக்கி, அப்பா! ''எம்பெருமானுடைய நூற்றெட்டுத் திருப்பதிகளிலே பேதையாகிய யான் உணர்தற்காம் பதியினை உரைக்கவேண்டும்'' என்றாள். அனந்தரம் ஆழ்வாரும் மகிழ்வுற்று ''நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களுடைய மகிமைகளையும், அதில் சிறந்த, பேரரங்கம், திருமலை, பெருமாள் கோயில், வானமாமலை, நைமிசாரணியம், பதரிகாச்ரிமம், சாளக்கிராமம், துவாரகை என எட்டுத் திருப்பதிகளையும் எடுத்தியம்பினர். மேலும் அரங்க விமானத்தைப் பற்றி விளக்கம் செய்தார். அரங்க விமானத்தைப் பிரமன் தவஞ்செய்து திருமாலினிடம் பெற்றான். தான் பெற்ற விமானத்தைப் பாஞ்சராத்திர முறைப்படி பூசித்து, பின் இட்சுவாகு மன்னர்க்கு அளித்தான். இட்சுவாகு அயோத்தியில் கொண்டு போய்ச் சேர்த்தான். இராகவன் அதை விபீடணர்க்கு அளித்தான். விபீடணன் அதைக் காவிரியின் இடையில் வைக்க, அடியார்கள் சேவித்துய்யும்வண்ணம் அங்கேயே அமைவதாயிற்று என்று கோதையாருக்குப் பட்டர்பிரான் பகர்ந்தருளினர். கோதையாரும் திருவரங்கத் தெய்வத்தையே தன் பதியாக உரிமைபூண்டு பாடியும் பரவியும் வரலானாள்.

பின் கோதையார் எழில் மிகுந்த மங்கைப் பருவம் அடைந்தார். ஆழ்வாரும் அதுகண்டு தக்க வரதனைத் தேட முற்பட்டார். கோதையார் ஆழ்வாரை நோக்கி, ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன், மாலிருஞ்சோலை எம்மாயன் அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான் முகத்தன்றி விழியேன்'' என்று தம் திருவாக்காலே சொல்லினர். ஆழ்வாரும் ஆண்டாளை நோக்கிக் கோதையே! ''ஆயர் பெண்டிர் பாவை நோன்பு இயற்றிக் கருவானத் திருமேனிக் கண்ணனையே கணவனாக அடைந்தனர்'' என்று கூறியருளினர். அனந்தரம் கோதையாரும் ஸ்ரீவில்லிபுத்தூரே ஆயர்பாடியாகவும், தம் தோழியர்களே ஆயர் சிறுமியராகவும் பாவித்து, ''மார்கழித் திங்கள் தொடங்கி, நாட்காலே நீராடி மையிடுதலும், மலரணிதலும் செய்யாமல், வங்கக்கடல் கடைந்த மாதவனையே மணாளனாக அடைய வேண்டுமென்று, ஆறைந்து பாசுரங்கள் பாடிப் பாவை நோன்பியற்றி, பக்திப் பரவசத்தினளாய்ப் பரமனைப் பரவி வழிபட்டாள். பின்னுங் கோதையார் தன்னைக் கண்ணனோடு இணக்க வேண்டுமென்று, காமதேவனை விளித்து ''தையொரு திங்களும் தரைவிளக்கித் தண்மண்டலம் இட்டு'' என்று தொடங்கிச் சங்கத்தமிழாலே இனிய பதிகம் ஒன்று பாடினாள். 'நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணனே நரனே! ஆயர் சிறுமியர் ஆகிய எங்கள் சிற்றில் சிதையேல்'' என ஈரைந்து பாசுரங்கள் செப்பினாள். ''கோழி கூவிடுமுன்குடைந்து நீராடப்போந்தோம். எங்கள் ஆடைகளையெல்லாம் கைக்கொண்டு குருந்த மரமேறி நிற்கின்ற கோவிந்தா! பிறர் பார்த்திடில் நகைப்பர், எங்கள் ஆடைகளைத் தருவாய்'' என்று கன்னியரோடு கரியபிரான் திருவிளையாட்டை, விழுக் கவிகள் பத்தாலே விளங்க வைத்தாள். ''தெள்ளியார் வணங்கும் தேவன் கண்ணன் வரில் கூடிடு கூடலே'' என்று, நீடிநின்ற நிறை புகழாய்ச்சியர் கூடலைத் திருக்கவிகள் பதினொன்றால் தெளியச் சொன்னாள்.

அடுத்து மன்னுபுகழ் மாதவனை மனத்திற் கொண்டாள். மாதவன் வாராமையினாலே, பூங்குயிலைப் புயல்வண்ணன்பால் தூதுவிடுத்து: இன்கவிகள் பத்தோடொன்று பேசினாள். நாரணன் பக்கமே நனி விழையுங் கோதையார் பாஞ்சசந்நியத்தை விளித்து ''பத்மநாபன் தன் வாய்ச் சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன்'' என்று ''கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ'' என்று தொடங்கி வண்கவிகள் ஈரைந்து வழங்கினாள். மேலும் வேங்கடவனையே கருதிக் கருத்தழிந்த கோதையார் மேகங்களைத் தூது விடுத்துத் தன் அவலநிலையை அவனுக்குச் சாற்றுமாறு ''விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!'' என்று ஒரு பதிகம் பாடியருளினாள். பின் கோதையார், திருமாலிருஞ்சோலை மலையப்பன், தன்னை அணுகுவாராயின் அவருக்குத் தொண்டுசெய்து அடிவணங்குவன் என்று ''சிந்துரச் செம்பொன்'' எனத் தொடங்கி ஒரு பதிகம் செய்தாள்.

சோலைமலைப் பெருமான் மாலைப்பொழுதளவும் வாராமை கண்ட நாச்சியார் ''கார்க்கோடல் பூக்காள்! கோவை மணாட்டி; முல்லைப் பிராட்டியே! பாடுங்குயில்காள்! மழையே! மழையே! கடலே! கடலே!'' என விளித்துத் தன்பால் அல்லல் செய்யாது குடமாடு கூத்தன் கோவிந்தனோடு தன்னைச் சேர்க்கும்படி திருப்பாசுரங்கள் நாலிரண்டோடிரண்டு சொன்னாள்.

மேலும் திருமாலவனிடத்தே ஆராக் காதன்மை பூண்டு தன் தோழியரை விளித்து ''என்நோய் இது ஆர்க்கும் அறிவரிது. கார்க்கடல் வண்ணன் கண்ணன் என்பான் கை கண்ட யோகம் தடவத்தீரும் ஆகவே அப்பெருமான் இருக்கும் இடத்தே என்னைக் கொண்டு போய்ச் சேருங்கள் என்று செஞ்சொல் பாசுரம், பத்துப் பாடினாள்.

மல்லியிலும் சமண உருவங்கள் 'முனிச்சாமி' என்ற பெயரில் வணங்கப்பட்டு வருகிறது. மணலூரரைச் சார்ந்த பண்டாரத்தம்மன் என்ற 75 வயது மூதாட்டியே, இன்றும் இத்தெய்வத் திற்குப் பூசைசெய்து வருகிறுர்.

## கிராமதேவதைக் கோயில் :

அகரம் சாலேயில் மேற்குப் பகுதியில் மாரி யம்மன் கோயில் அமைந்துள்ளது. கோயில் வடக்கு நோக்கியது, மூலக்கோயிலின் உறுப்பு கள் யாவும் திருப்பணியால் மறைந்து விட் டன. செங்கல்லாலும், சுதையாலும் எடுக்கப் பட்டுள்ள இக் கோயிலின் கட்டுமானம் கி.பி. 19-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தது. ஆனல் கருவறையில் வழிபாட்டில் உள்ள சிலேமட்டும் புராதனச் சிறப்பு உடையது.

## நிசும்பசூதனி :

வழிபாட்டில் உள்ள இவ்வுருவம் மாரியம் மன் எனக் கிராம மக்களால் அழைக்கப்படு கிறது. ஆனல் இது நிசும்பசூதனியின் உருவமா கும். இத்தேவியின் மடித்த வலதுகால் செவ்வகப் பீடத்தின் மீது ஊன்றியும், தொங்கவிட்ட இடது கால் கொடிய அரக்கனின் தலேமீதும் காட்டப் பட்டுள்ளது.

சூலம், உடுக்கை, கத்தி, கிடுகு, மணி, மண்டையோடு முதலிய ஆயுதங்கள் எண் கரங் களில் ஏந்தி எழிலுருவாய் வீற்றிருக்கும் தாய் இங்குக் கல்லிலே வடிக்கப்பட்டுள்ளாள். தாயின் தலேயை ஜுவாலா மகுடமும், வலது காதில் பிரேதகுண்டலமும், இடது காதில் பத்திர குண்டலமும் அணி செய்ய, மார்பிலே அரவமும், இடையிலே கச்சமும் அணிந்து காட்சி அளிக் கிருள். இவ்வுருவம் 1.5 மீட்டர் உயரமும் 70 செ.மீ. அகலமும் உடையது. அழகிய இவ் வுருவத்தின் வலது முன்கைப்பகுதியும், வலது முழங்கால் பகுதியும் உடைந்துவிட்டன.

## சிலேயின் காலம் :

இச்சிலே பாண்டிய நாட்டில் குலசேகரன் கோட்டை, உத்தங்குடி, பதினெட்டாம் குடி, வள்ளியூர், நென்மேலி ஆகிய ஊர்களிலுள்ள நிசும்பசூதனி சிலேகளே ஒப்ப அமைந்துள்ளது. இச்சிலேயின் சிற்ப அமைதி பிற்காலப் பாண்டியர் பாணியை வெளிப்படுத்தி நிற்கிறது. இச்சிலே கி.பி. 12, 13-ஆம் நூற்ருண்டைச் சார்ந்த பாண்டியர் பணி எனக்கொள்ளலாம்.

## நாகர்கோயில் :

பாம்பைத் தெய்வமென வழிபடுவது இந்திய மக்களின் தொன்மையான மரபுகளில் ஒன்ரு கும். தமிழ்நாட்டில் ஊர்தோறும் அரசமரத்தடி களிலும், ஆற்றங்கரைகளின் மேலும், இதற் குரிய சிலேகளேயும் கோயில்களேயும் காணலாம். இத்தகைய வழிபாடு பெருவழக்காக உள்ள பண்டைய கோயில்களில் அணேப்பட்டி, கொத் தப்புள்ளி, நாகர்கோயில் ஆகிய ஊர்களில் இன்றும் காணலாம். இவை பாம்பாளம்மன் கோயில், புத்துக்கோயில், நாகர்கோயில் என்ற பெயரில் உள்ளன. இத்தகைய கோயில்களில் அகரமும் ஒன்று. இங்கு மூக்குடைநாதரின் அருகில் மூன்று நாகர் சிலேகள் வழிபாட்டில் உள்ளன.

## நாகர் வழிபாடு :

அகரம் பகுதி மக்கள் நாகரின் முன், பாலும் பழமும் வைத்துப் பூசை செய்வார்கள். விழா நாட்களில் ஊர்ப் பெண்கள் நாகரின் முன் நின்று பாடி மகிழ்வர். அதுபோது அதன் அங்க அழகு வர்ணித்துப் பாடப்படுகிறது. மணி பிரம்புப் போல வால்; பச்சரிசிப்போலப் பல்; சின்னமுத் துப் போலக்கண் என்று நாகத்தின் உடலுறுப்பு கள் உருவகிக்கப்படுகின்றன. அது அல்லி இலே யில் அடைகாத்தலும், தாமரை இலேயின்மேல் தங்கியிருக்கும் இயல்பும் உடையவை எனக் கூறப்படுகின்றன. அப்பாடலேக் காண்போம்.

புற்றுப் புற்று நாகரே,
பூமி இடம் கொண்டவரே,
கொட்டி இலேயிலே
குடியிருக்கும் நாகரே,
தாமரை இலேயிலே
தங்கியிருக்கும் நாகரே,
மணிப் பிரம்பு போலே
சிறு சொளகு போலே
படமெடுக்கும் நாகரே,
சின்ன முத்துப்போலே
கண்ணழகு நாகரே,
பச்சரிசி போல
பல்லழகு நாகரே,
அல்லி இலேயிலே
அடையிருக்கும் நாகரே,
பள்ளன் மகன் பள்ளன்
தேவேந்திரப் பள்ளன்,
கொட்டு முழக்கத்துடன்
குளத்தருகே வாரான்
சிறு சொளகு படமெடுத்து
வழிவிடு நாகரே!

அடியாக வைத்து நான்கடிகளான் இச்செய்யுள் யாக்கப்பட்டிருத்தலின், இந்நூலும் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக நான்கு இயல்களாக வகுக்கப்பெற்றமை தெளியலாம். (5) இச் செய்யுளில் 'மலைவில்லார்' என்னும் தொடர் 'மலை+வில்லார்' எனக் கொள்ளப்படுவதேயன்றி, 'மலைவு+இல்லார்' எனவும் பிரித்துணர நிற்கும் திறனால், இந்நூலின் மூன்றாம் சூத்திரமும், நான்காம் சூத்திரமும் தம்முள் தொடர்புடையனவாய் 'இதுவும் அது' என மாட்டெறிய நிற்கும் தன்மை புலனாகும். (6) அன்றியும், இச் செய்யுளிற் 'கல்லால் நிழல்மலை' என இடமும், 'அருளிய' எனச் செய்கையும், 'இணைமலர்' எனத் திருவடியும், 'புனைவர்' எனப் பேறும் உணர்த்தப் பெற்றிருத்தலால், இந்நூலின் நான்கு இயல்களும் முறையே, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் என்பனவற்றை உணர்த்துதல் கொள்ளப்படும்.

ஆசிரியர் பாண்டிப் பெருமாள் என்பவர் இயற்றிய விருத்தியுரையிற் காணப் பெறாமல், ஆசிரியர் சிவஞானசுவாமிகள் அவர்களால் மட்டுமே திறந்தெரிந்து விளக்கப்பெற்றுள்ள, இன்னோரன்ன சிறந்த நுண்பொருட் குறிப்புக்களுக்கு இடனாக யாக்கப்பெற்ற இம் மங்கல வாழ்த்துப் பாடல் ஒன்றே, சிவஞான போதத்தின் அருமை பெருமைகளை விளக்கப் போதியதாகும்.

### அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்;—தம்மை
யுணரார், உணரார் உடங்கியைந்து, தம்மிற்
புணராமை, கேளாம் புறன்.

தம்மை-தம்மியல்பினை
உணர்ந்து-அறிந்து
தமையுடைய-தம்மையுடையவனாகிய
தன்-ஆண்டவனின் (இயல்பை)
உணர்வார்-உணர்கின்ற சான்றோர்கள்.
எம்மை-எம்மைப் போன்றவர்களை
உடைமை-அடிமையாக உடையவராதலால்
எமையிகழார்-எம்மைப் பாராட்டுவதன்றி இகழ மாட்டார்கள்.
தம்மையுணரார்-தாம் ஒருபொருள் உண்டென்றும், தம் இயல்பு இன்னது என்றும் அறியாத பிற சமயத்தவர்கள்,
உணரார்-தம்மையும், தலைவன் இயல்பையும் அறியார்.
உடங்கு இயைந்து-(அவர்கள்) ஒருங்கே கூடிக்கொண்டு
தம்மிற் புணராமை-தங்களுக்குள்ளே சேராமல் முரண்படுதலால்,
புறன் கேளாம்-(அவர்களின்) புறங்கூற்றுமொழியை யாம் ஒரு பொருளாகக் கொள்ளோம்.

இதுபோன்ற ''அவையடக்கச் செய்யுள்'' ஒன்றனை, வேறு பிற எந்தத் தமிழ் நூலிலும் காண்டல் அரிது. இங்ஙனம் தனிப் புதியதொரு முறையில், 'அவையடக்கம்' கூறிய சிறப்பு, ஆசிரியர் மெய்கண்டார்க்கே யுரியதாகும். இச் செய்யுளில் தம்மினும் மேம்பட்ட தக்காரைப் போற்றும் பணிவும், தகவிலார் தம்மையெல்லாம் புறக்கணிக்கும் பெருமிதமும், ஒருங்கே இயைந்து விளங்குகின்றன. ஈண்டுப் ''புறன்'' என்றது, புறங்கூற்று மொழியையும், புறச் சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும் மொழியையும் இரட்டுற மொழிதலாற் குறித்து நின்றது. ஆசிரியர் மெய்கண்டார் இங்ஙனம் அவையடக்கம் கூறிய சிறப்பை யுணர்ந்தே, அவரைப் பின்னுள்ளோர் ''தவர் அடி புனைந்த தலைமையோன்'' எனப் புகழ்ந்து போற்றிமகிழ் வாராயினர் போலும். இத்தொடர்க்குத் 'தவத்தோருடைய அடியைப் புனைந்த அன்பிற் பெரியோன்' என்றும், 'தவத்தோராலே தன்னுடைய அடிமையைப் புனையப்பட்ட அறிவிற் பெரியோன்' என்றும் பொருள் கொண்டனர் இலக்கணக் கொத்துரை இயற்றிய சுவாமிநாத தேசிகர்.

### 1. பொதுவியல்பு - பிரமாணவியல் - பதியுண்மை

அவன்அவள் அதுவெனும் அவை, மூவினைமையில்,
தோற்றிய திதியே; ஒடுங்கிமலத் துளதாம்;
அந்தம்ஆதி என்மனார் புலவர்

அவன் அவள் அதுஎனும்-அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் சுட்டிக் கூறப்படுகின்ற
அவை-தொகுதியாகிய உலகம்,
மூவினைமையில்-தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையினால்,
தோற்றிய-ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டதாய
திதியே-உள்பொருளே யாகும்.
மலத்து-(அவ்வுலகம்) ஆணவ மலத்தினால்
ஒடுங்கி-(தான்) ஒடுங்குதற்கு இடமாகிய கடவுள் இடத்தினின்று,
உளதுஆம்-(மீண்டும்) தோன்றுவது ஆகும்.(இங்ஙனமாகலின்)
அந்தம்-அந்தத்தைச் செய்யும் கடவுளே,
ஆதி-முதற் கடவுள்
என்மனார் புலவர்-என்று கூறுவர் அளவைநூல் உணர்ந்தோர்

[திதி-உள்பொருள்
ஒடுங்கி-ஒடுங்குவதற்கு இடமாக உள்ள கடவுள்: பெயர்ச்சொல்.
அந்தம்-சங்காரம், அழித்தற்றொழில்; சங்கார காரணன். அந்தத்தைச் செய்யும் கடவுளை 'அந்தம்' என்றது 'உபசாரம்' அல்லது 'ஏற்றுரை' என்னும் முறையாகும்.]

**கருத்து:**—உலகம் முத்தொழில் உடையது; ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள். உலகம் ஆணவ மலம் பரிபாகம் ஆதற் பொருட்டு மாயையினின்று தோன்றி, கன்ம மலம் பரிபாகம் ஆதற்பொருட்டு மாயைக்கு நிலைக்களன் ஆகிய இறைவன்பால் ஒடுங்கி நிற்கும். உலகை ஒடுங்கச் செய்யும் 'சர்வ சங்கார காரணன்' எவனோ, அவனே உலகிற்கு முதற் கடவுள்; ஏனையோர் முதல்வர் அல்லர். (1)

### 2. பாச உண்மை

அவையே தானே யாய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

அவையேயாய்-(முதல்வன்) உயிர்களோடு உயிராய்க் கலப்பினால் ஒன்றாகியும்,
தானேயாய்-(பொருட்டன்மையால்) உயிர்களினின்று தான் வேறாகியும்
அவையே தானேயாய்-(உயிருக்கு உயிராதற்றன்மையால்) அவ்வுயிர்களே தானேயாக உடனாகியும்,
ஆணையின்-தனது சிற்சித்தியால் (வரும்),
இருவினையின்-நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளால்,
போக்கு வரவு புரிய-(உயிர்கள்) இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம்
நீக்கம் இன்றி-(ஆணையாகிய சிற்சத்தியினின்று) பிரிப்பு இல்லாமல்
அன்றே-தொன்று தொட்டே
நிற்கும்-(சமவேதம்ஆக) நிற்பன்.

'அவையே தானேயாய்' என்பது இரட்டுற மொழிதல். ஆதலின் அத்தொடர், 'அவையேயாய்' 'தானேயாய்' 'அவையே தானேயாய்' எனத் தனித் தனியே பிரித்தும் கூட்டியும் மூன்று வகையாகப் பொருள்கொள்ளப்படும்.

சமவேதம்-பிரிப்பின்றி இணைந்து நிற்கும் தன்மை.

கோதையார், தன் அவலம் தீரக் கண்ண னென்னுங் கருந் தெய்வத்தின் அணி பொருள்கள் கொண்டு வந்து, தன் அல்லல் தீர்க்கும்படி பாசுரங்கள் பத்து சொன்னாள். பரந்தாமனாகிய கண்ணனைப் பிருந்தாவனத்த கண்டேன் என்று பதிகம் ஒன்று பாடினாள். பின் மாதவனும் மாயவன் ''வாரணம் ஆயிரஞ் சூழவந்து'' தம்மை மணஞ்செய்து கொண்ட தாகக் கண்ட கனவைத் தன் தோழிக்குப் பாசுரம் பதினொன்றாகக் கூறினாள். மாயவனை முயங்கி மகிழ்ந்த கோதையார், தன் கனவு நீங்கி நினைவிழந்து நிலத்தில் சாய்ந்தாள். அந் நிலையில் கோதையாரின் மனநிலையை யறிந்த பட்டர்பிரான், கோதையாரைச் சிவிகையில் ஏற்றி, அந்நகரத்தாருடன் திருக்குருகூருக்குச் சென்றனர். ஆங்கு திருக்குருகூர்ப் பட்டர்கள் பட்டர்பிரான் வருகையை யறிந்து பரிவுடன் வரவேற்றனர். எல்லோரும் நம்மாழ்வாரை வணங்கி ஆசிபெற்றனர். நம்மாழ்வார் தம் சீடரான மதுரகவி ஆழ்வாரையும் பாண்டிய மன்னனையும் விளித்து, கோதையாரின் சுயம் வரத்திற்காக அழகியமண்டபமும், அதில் நூற்றி எட்டுத் தவிசுகளும் அமைக்கும்படி பணித்தருளினார். அவ்வாறே நூற்றி எட்டுத் திருப்பதி எம்பெருமான்களும் எழுந்தருளுவதற் கேற்ற சுயம்வர மண்டபமும், காண்போருக் குரிய மண்டபமும் மிகவும் அழகாகப் பொன் னாலும் மணியாலும் சிறக்கச் செய்து முடித்த னர்.

இப்பால் திருக்குருகூர் நகரமக்கள் பந்த லிட்டு வாழை கமுகுகளுடன் தெருவணிந்து நகரை அலங்கரித்தனர். பின்னர் நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களையும், கோதையின் சுயம்வரத்திற்கு எழுந்தருள வேண் டும் என்று திருமண ஓலை தியானத்தினால் அனுப்பினார். அவ்வண்ணமே, பொன்னரங்கன் பொன்னி நல்நீராடி, பூம்பட்டும் பொற்கலை யும் உடுத்து, திருமண்தரித்து, சங்கு சக்ர பஞ்சாயுதபாணியாய், திருக்குருகூருக்கு எழுந்த ருளினார். அப்படியே மற்றைய எம்பெருமான் களும் எழுந்தருளினார்கள். மதுரகவியும் மற்றை யோரும் பூரணகும்பம், பொற்கலசங்கள் புறம் பெங்கும் வைத்து, எழுந்தருளிய பெருமான் களையெல்லாம் அடிபணிந்து முகமலர்ந்து அன் புடன் வரவேற்றார்கள். பெருமான்கள் எல் லோரையும் சுயம்வர மண்டபத்தில் பொற்ற விசுகளில் இருக்கச் செய்து திருவாராதனம் செய்தார்கள்.

பின்னர், தோழியர்கள் கோதையாருக்கு மணக்கோலஞ் செய்து, கையில் மணமாலையினைக் கொடுத்து, சுயம்வர மண்டபத்துக்கு அழைத்து வந்தனர். அங்கு எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்களையும் அவர்களுடைய நாமதேய வரலாறுகளையும் அறிய இயலாதவளாய் நின் றாள் கோதையார். உடனே நம்மாழ்வார் அனுக்கிரகை என்ற தோழியை அழைத்து, எம் பெருமான்களுடைய பெருமைகளையெல்லாம் நாச்சியாருக்குக் கூறும்படி பணித்தருளினார். அங்ஙனமே அனுக்கிரகை என்பாள் அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமான்களையெல்ல அடிபணிந்தாள்.

தலைவியாகிய சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை விளித்து, ''கோதையே! இதோ வீற்றிருக்கும் பெருமான் தமிழகத்தில் வட வெல்லையாம் வேங்கடத்தில் வீற்றிருப்பவன். பரிக்காலும் தேர்க்காலும் இடாநிற்கும் சூரியன் திகைக்கும்படியான சப்த கிரியான். தன்ன டைந்தார்க்கெல்லாம் வேண்டும் தனமெலாந் தந்து காப்பவன். இறைப்பொழுதும் அகல கில்லா அலர்மேல் மங்கை யுறைமார்பன். இங் குள்ள பெருமான்களில் இவனே பெரும் பணக் காரன். உனக்கு விருப்பமிருப்பின் இவனுக்கு மணமாலை சூட்டுவாயாக'' என்றாள். கேட்டதும் கோதையார் அப்பால் சென்றாள்.

பின்னர்த் தோழியானவள் கோதைக்கு. ''இதோ வீற்றிருப்பவர் கச்சிவெஃகாவிலே நச்சி யிருப்பவர். சொன்னவண்ணம் செய்பவர். உனது சிறிய தந்தையாம் திருமழிசையாழ்வார் இப்பெருமானை நோக்கிப் பூங்கச்சி மணிவண்ணா வுன் 'பாம்புப் படுக்கையைச் சுருட்டிக்கொள்' என்றும், பின்னர் 'பைந்நாகப் பாய்படுத்துக் கொள்' என்றும் சொல்லியவண்ணம் செய்தவர். நீயும் சொன்னபடியே செய்வான் இவன். மனமிருந்தால் மாலைசூட்டுக'' என்றாள். கோதை அவண் நீங்கிச் சென்றாள்.

தோழி மறுபடியும் ''இதோபார் கோதாய்! ஈண்டு இருப்பவன் திருக்கோவலூர்த்தெய்வ நாயகன். முன்னிரவு நேரத்தில், பேய், பூதன்: பொய்கையார் நின்றிருந்த ஓர் இடைகழியில் இடம் போதாதபடி நெருக்கி நின்றவன். அந் நேரம் பொய்கையாரும், பூதத்தாழ்வாரும் வையமும், அன்புமாம் தகளியில் விளக்கேற்றி இரு பக்கம் காட்ட, பேயாழ்வார் திருக்கண்டேன் என்று சொல்லத் தன் பொன்மேனி தரிசனம் தந்த பெம்மானிவன். விருப்பமிருப்பின் உன் கை மாலையை இவன் கழுத்திலிடுவாயாக'' என்றாள். கோதையும் அப்பால் சென்றாள்.

அதுகண்ட தோழி அடுத்து ''இதோ இருப்பவன், மதிள் சூழ்கோயில் மாலிருஞ் சோலை மால்அலங்காரன், இவனுக்காவது மாலை சூட்டுக'' என்றாள். கோதையும் எட்டி நின்றாள்.

மேலும் தோழியானவள் கோதையே! ''இதோ நான்கு பெருமாள்களைப்பார். வானமா மலையப்பன், திருவைகுந்தன், வளமார்கச்சி வரதன், ஆய்ப்பாடி ஐயனைப்பார். இதோ திருவனந்தபுரம் பதுமநாபன். திருமேனி அழ கைப்பார். இவன் சாளக்கிராமமுடைய நம்பி, இவன் திருப்பிரிதிதேவன். இப்படியே திருத்தண் கால், திருமெய்யம், கண்ணபுரத்து எம்பெரு மான்கள், இங்கே வீற்றிருக்கின்றனர். இவன் திருக்குடந்தை மாயக்கூத்தன், இவன் அழ குடைய மணவாளன். இங்கேபார் உறையூர்த் தெய்வம். இவன் துவரை மன்னன் என்றெல் லாம் காட்டினாள்.

மறுபடியும், கண்ணங்குடி, திருவிடந்தை, கண்டியூர், திருச்சேறை, தஞ்சை, நறையூர், கண்ணமங்கைப் பெருமான்கள் பெருமைகளை எல்லாம் பேசினாள். கோதையோ இவர்களையெல்லாம் கடந்து சென்றாள். பின்னர்த்தோழி, ''இதோ இங்கே பாராய் கோதாய்! இவன் திருவயோத்தி தசரதராசகுமாரன். இராமச்சந்திரமூர்த்தி. இவன் கால்விரல் பட்டாலே கல்லும் பெண்ணுருவாகும். பேரழகன். கம்பராமாயணத்தில் இவன் திருமேனி அழகைக் கம்பர் கூறக் கேட்டிருப்பாய். இங்கே நீ நேர்நின்று அவன் திருமேனி அழகை முழுவதும் ரசிப்பாயாக. மேலும் இவன் ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்றும், தாய் சொல் கடவாதும், ஈரேழாண்டு வனவாசம் செய்தவன். ஏகபத்தினி விரதன். நீ அவனை விரும்பினாலும் உன்னை அவன் பத்தினியாகக் கைக்கொள்ளான்'' என்றாள்.

கடைசியாக, தோழி கோதையை நோக்கி, ''இதோபார் கோதாய். இவன் திருவரங்கம் பெரியகோயிலில், சப்த மதிள்கள் சூழ, அரவணையில் குடதிசைமுடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி, தென்திசை இலங்கை நோக்கி இருப்பவன். நின்னையும் நோக்குகின்றான். உனக்காகவே இங்கு எழுந்தருளியுள்ளான்'' என்றாள். உடனே கோதையார் ஆனந்த மேலீட்டால் தன் கையிலுள்ள மலர் மாலையை அரங்கத்தரவணையான் கழுத்தில் சேர்த்தாள். அப்போது மங்கல வாத்தியங்கள் முழங்கின. தேவர்களெல்லாம் பூமாரி பொழிந்தனர்.

ஆங்கிருந்து கோதையாரும், அரங்கத்தரவணையானும், மற்றையோரும் நம்மாழ்வார் திருமாளிகைக்கு எழுந்தருளினர். அவண் நவரத்தினமிழைத்த மணமேடையில், பரிசுடப்பந்தர்க்கீழ், நவரத்தினங்களிழைத்த பொன்னாசனத்தில் அரங்கநாதனை அமரச் செய்து, அவன் தன் வலப்புறத்தே கோதையை இருக்கச் செய்தனர். பட்டர்பிரானும் அவர் தம் மனைவியாரும் மணமேடைக்கு வந்தனர். மங்கல வாத்தியங்கள், தேவதுந்துபி, தண்ணுமை முழங்க, கோதையை அரங்கன் கரத்தளித்துத் தாரைவார்த்துக் கொடுத்தனர். அரங்கனும் கோதைமணிமிடற்றில் மங்கல நாண் சூட்டினான். பின் பொன்னரங்கன் கோதையை அம்மி மிதிக்கச் செய்து, அருந்ததித் தெய்வத்தைக் காட்டித் தீவலம் வந்து, நாச்சியார் திருக்கரம் பற்றினான். இத்திருமணம் காண வந்திருந்த எல்லோருக்கும் பாண்டியமன்னன் சுவையுண்ண, சுவைக்கு ஆறுவகை சமைத்து, ஐந்துநாட்கள் வரை அளித்தனன். வெற்றிலைப் பாக்குடன் தேங்கனி மாங்கனி கதலிக் கனிகளெல்லாம் வந்த விருந்தினர் அனைவருக்கும் அளித்தனர். பின் அரங்கநாதன் திருமணத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம் அருளாசி வழங்கினான். பின்னர்க் கோதையாருடன் திருவரங்கத்துக்குத் திரும்பினான்.

வரும் வழியில் அரங்கன் ''கோதாய்! அதோபார், நின் எழில் ஒவ்வா மயில் கூட்டங்கள், உன் அழகையே விரும்பி நிற்கின்றன. அதோ நறுமணமும் எழில்நகையுங்கொண்ட வனமங்கை உன்னைப்பார்த்து, பார் மகளே வா என்று அழைப்பது போன்ற காட்சியைக் காண்பாயாக. அதோ! ஏழுகடலையும் உண்ட குறுமுனிவன் வதியும் பொதியமலையின் தமிழ் மணத்தைச் சுவைப்பாயாக! இங்கே பார் சந்திரன் அம்மலையின் உச்சியில் குடைபோல் நிற்கிறான். அம்மலையினின்று ஓடிவரும் நீர் அருவிகளைப் பார். அரசன் கொலுவீற்றிருப்பது போல், சோலைமலைக் காட்சியினைக் காண்பாய் என்று வழிநெடுக வளஞ் சிறந்த காவிரி நீர்பாயும் மருத நிலக் காட்சிகளைக் காட்டிக் கொண்டே வந்து, கடைசியாகத் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்து இருவரும் ஐக்கியமாயினர்.

'ஆணையின்' என்பது 'இருவினையின்' என்பதனோடும், 'நீக்கமின்றி' என்பதனோடும் இயைந்து சிங்க நோக்காக நின்றது.

முதல்வன், கலப்பினால் உடலின் உயிர் போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல வேறாகியும், உயிர்க்குயிராதற்றன்மையால் கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனாகியும் நிற்பான் என்பது கருத்து.

சங்கற்பத்தால் சிருட்டிக்கின்ற இறைவன் உலகிற்கு நிமித்தகாரணன் ஆதலால், அவனுக்குத் துணைக்காரணம் சிற்சத்தியென்றும், இருவினைகள் அச்சிற்சத்தியின் வழித்தாய துணைக்காரணம் ஆகும் என்றும் கூறினார். முன் சூத்திரத்தில் ''மலத்துளதாம்'' என ஆணவ மலம் உண்மை உணர்த்தினார். இங்கு ''இருவினையின்'' என்பதால் கன்ம மலம் உண்மை கூறினார். இருவினைக்குப் பற்றுக்கோடு மாயையே ஆதலால், மாயா மலம் உண்மையும் ஈண்டுக் கூறியதாயிற்று. குடத்துக்கு மண் போல, மாயை உலகிற்கு முதற் காரணம் ஆகும். இவ்வாற்றால், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் ஆகிய பாசத்தின் உண்மை, இந்நூற்பாவால் உணர்த்தப்பெற்றது. (2)

## 3. பசுவுண்மை

உளதுஇலது என்றலின், எனதுடல் என்றலின்,
ஐம்புலன்-ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின், உணர்த்த வுணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

ஆன்மா-உயிரானது,

''இலது என்றலின் உளது''—சூனிய ஆன்மவாதி ஆன்மா என ஒன்று இல்லை என்பன். இல்லை என்று அறியும் அறிவு ஒன்று உண்டு அல்லவா? அதுவே ஆன்மாவாம். ஆதலின் இல்லை என்பதனாலேயே ஆன்மா உண்டு.

''எனது உடல் என்றலின் உளது''-உலகத்தார் தம்மின் வேறாகிய பொருள்களை ''என்பதி என்மனை'' என்று கூறுவதுபோல், என்கை என்கால் என்னுடம்பு என்றும் வேறாகவே, கூறுவதால், தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்றுண்டு.

''ஐம்புலன் அறிதலின் உளது''-ஐம்பொறிகள் ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை அறிவது உண்மையேனும்: ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையறிவதுகூடுமே யன்றி, ஒரு பொறியே எல்லாவற்றையும் அறிவதில்லை. இவ்வைம்பொறி புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஆன்மா, அவற்றைத் தனித்தனி அறியும் ஐம் பொறிகளுக்கு வேறாக உள்ளது.

''ஒடுக்கம் அறிதலின் உளது''-ஐம்பொறிகளும் ஒடுங்கி நின்ற கனவு நிலையில் நிகழ்ந்து காரியங்களை அறிகின்றதொன்றுளதாதலின், கனவில் இயங்கும் சூக்கும தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்றுண்டு.

''கண்படில் உண்டிவினையின்மையின் உளது''-(உறக்கம் விழிப்பு என்னும் இருநிலையிலும் பிராணவாயு ஒரு தன்மையாக இயங்கிக் கொண்டு இருப்பினும்) உறக்கத்தின்கண் இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் உடம்புக்கு இல்லாமையினால், (விழிப்பு நிலையில் உண்டியும் வினையும் உண்மைக்கும், உறக்க நிலையில் அவை இன்மைக்கும் காரணமாகப்பிராண வாயுவின் வேறாக) ஆன்மா என்பது ஒன்று உண்டு.

''உணர்த்த உணர்தலின் உளது''-கருவிகளோடு கூடியவிடத்தும் தன்தன்மை இது என்று உணராது, உணர்த்த உணருகின்ற சிற்றறிவுடைய ஆன்மாவைப்போல், மறந்து மறந்து அறிதலில்லாமல், பிரமம் எனப்படும் முதல்வன் அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடையவனாதலால், பிரமம் ஆன்மா ஆகாது. ஆன்மா பிரமமாகிய முதல்வனுக்கு வேறானதே ஆகும். பிரமத்தின் வேறாக ஆன்மா உண்டு.

''மாயா இயந்திர தனுவினுள் உளது''-மாயையின் காரியங்களால் கட்டப்பட்டு அசைகின்ற சூத்திரப் பாவை போலும் உடம்பினிடத்தேஅதனினின்று வேறாகத் தனியேஆன்மாஎன்பதொரு பொருள் உண்டு. (உடம்பில் உள்ள கருவிகளின் சேர்க்கையே ஆன்மா என்னும் கொள்கை தவறானதாகும். ஏனெனில், அக் கருவிகள் ஒன்றன் காரியங்களாய்த் தோற்றக் கேடுகளையுடைய அழியும் பொருள்களாகும்; ஆன்மாவோ என்றும் அழிவில்லாதது).

இச்சூத்திரத்தின் இறுதியில் உள்ள 'ஆன்மா' என்பதும், முதலில் உள்ள 'உளது' என்பதும் சேர்ந்து 'ஆன்மா உளது' எனப் பொருள் கொள்ளக் கிடப்பதால், இது 'பூட்டுவிற் பொருள்கோள்' எனப்படும்.

ஒடுக்கம்-ஐம்பொறிகள் ஒடுங்கி நிற்கும் கனவு நிலை.
கண்படுதல்-உறங்குதல்.
உண்டி-இன்ப துன்ப நுகர்ச்சி.
வினை-உடம்பின் தொழிற்பாடு.

இதன்கண் சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, பிரமான்மவாதி, சமூகான்மவாதி, என்னும் எழுவரையும் மறுத்து, உடலின் வேறாக உடலுக்குள் உயிர் என்பதொரு பொருள் உண்டு எனப், பசு உண்மைக்குப் பிரமாணம் காட்டப்பெற்றது. (3)

## பொது அதிகாரம் :

### 4. இலக்கணவியல் (பசு இலக்கணம்)

அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று, அவை
சந்தித்தது; ஆன்மாச் சகசமலத் துணராது;
அமைச்சரசு ஏய்ப்பநின்று, அஞ்சவத் தைத்தே.

ஆன்மா-உயிரானது.
அந்தக்கரணம் அவற்றின்-மனம்புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கு அகக் கருவிகளுள்.
ஒன்று அன்று-ஒன்றுஆகாது. (ஆயினும்)
சகச மலத்து-ஆணவமலத்தினால்,
உணராது-(தனக்கு) உணர்வு இல்லாமையினால்,
அமைச்சு அரசு ஏய்ப்ப-அமைச்சரோடு கூடிய அரசன்போல,
அவை-அவ்வந்தக் கரணங்களோடு,
சந்தித்தது நின்று-கூடியதாக நிற்றலான்,
அஞ்சு அவத்தைத்து-நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப் படக்கம் என்னும் ஐந்து அவத்தைகளை யுடையதாகும்.

'ஒன்றன்று' என்புழி 'ஆயினும்' என்பது வருவிக்க.

சகசமலம்-ஆணவமலம்; நெல்லுக்கு உமி போல உயிருக்கு உடனாகத் தோன்றியமலம் என்பது பொருள்.

சக ஜம்-உடனாகத் தோன்றியது.

உணராது-உணராமையினால் (காரணப் பொருள்).

சந்தித்தது-கூடியது.

சந்தித் (த)து நின்று-சந்தித்து நின்று; வினைஎச்சமுற்று.

''சந்தித்து நின்று அஞ்சு அவத்தைத்து'' என முடியும்.

ஐந்தவத்தைகளை முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் எனவும் கூறுவர். உயிர் அரசன்போல்வது; அந்தக் கரணங்கள் அமைச்சர்கள் போல்வன.

ஆன்மாவுக்கு இலக்கணம், அந்தக் கரணங்களோடு கூடிநின்று ஐந்து அவத்தைப்படுதல். இஃது உயிர்க்குத் தடத்த இலக்கணம் எனப் படும் பொது இயல்பு.

# சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்

[திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

## முன்னுரை :

'சிவஞானபோதம்', நமது அருமைச் செந்தமிழ் மொழியிலுள்ள தலைசிறந்த நூல்கள் பலவற்றில் ஒன்று. இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதி நூல்களில் திருக்குறளும், காப்பிய நூல்களிற் சிலப்பதிகாரமும், யோக அனுபவ நுட்பங்களை உணர்த்துதலில் திருமந்திரமும், வரலாற்று உண்மைகளை வளம் பெறப்பாடுதலிற் பெரியபுராணமும், கற்பனைத் திறன் செறிந்த கவிதை நலத்திற் கம்ப ராமாயணமும் பிறவும் தந்நிகரற்றுச் சிறந்து திகழ்தல்போல, நம் அருமைச் செந்தமிழ் மொழியின் கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது சிவஞானபோதம் ஆகும்.

## சுருக்கம் :

தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், 'குறள்' என்னும் தன் பெயருக் கேற்ப மிகச் சுருங்கிய நூல் எனப்போற்றப் படுவது அனைவரும் அறிந்ததொன்று, அத் திருக்குறளினும் மிகமிகச் சுருங்கிய தொன்றாகச் சிவஞானபோதம் அமைந்திருப்பது 'நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பிறந்தன்றே' எனத்தக்க நிலையில் உள்ளது. 40 வரிகளில், 216 சொற்களில், 624 எழுத்துக்களில் சிவஞான போதம் அடங்கிவிட்டிருக்கின்றது. ஆதலின், உலகிலேயே மிகமிகச் சுருங்கிய நூல்-ஆனால் மிக மிகச் சிறந்து விரிந்த பெருநூல்-சிவஞான போதம் ஒன்றே, என நாம் துணிந்து சொல்லலாம்.

## எளிய தெளிவுரை

இலக்கண நூல் அறிவு-இலக்கியப்புலமை-தருக்கநெறிப் பயிற்சி-திருமுறைகளிற் செறிந்த உணர்வு-பல்வேறு சமய நூல்களின் ஆராய்ச்சி-இறையருள் நலம் முதலியன பலவும், சிவஞான போதச் செம்பொருட்டெளிவுக்கு இன்றியமையாதனவாக உள்ளன. 'பேணுபல் கலைகள் என்னும் பெருகு சோபானம் ஏறிய' பின்னரே, சிவஞானபோதச் செம்பொருட் சிகரக் காட்சி நம்மனோர்க்குக் கைகூடுவதாக உள்ளது.

சிவஞான போதம் ''நூலாருள் நூல் வல்லார்'' நுணுகி ஆராய்ந்து கற்றுணர்தற்குரிய நூல். இலக்கணம் இலக்கியம் தருக்கம் திருமுறை முதலிய பல நூல்களையும் பயின்று உணர்ந்து கைவந்த பின்னரே, அதனைக் கற்றுணர்தல் எளிதின் இயலும். எனினும், சிவஞானபோதம் கற்கவிரும்பும் ஆர்வலர்களுக்கு ஓரளவேனும் பயன்படும் நிலையில், பின்வரும் எளிய தெளிவுரை ஒன்று இங்குத் தரப் பெறுகின்றது.

### மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

கல்ஆல் நிழல்-கல்லால மரத்தின் நிழலினிடத்தே (எழுந்தருளியிருந்து),
0 மலைவு-நாலுணர்வினால் எழும் ஐயத்தினை
0 இல்லார்-இல்லையாகச் செய்த சிவபெருமான்
0 அருளிய-நமக்குக் கொடுத்தருளிய
பொல்லார்-பொல்லாப் பிள்ளையாருடைய
இணைமலர்-இரண்டு திருவடிகளாகிய தாமரைகளை
நல்லார்-மெய்யன்பர்கள்
புனைவர்-தங்கள் தலைமீது தரித்துக் கொள்வார்கள்.

[மலைவில்லார்-மேரு மலையை வில்லாகவுடையஇறைவன்.
அருளிய-அருளுதற் பொருட்டு என்றும் பொருள் கொள்ளலாம்.]

கருத்து :—சிவஞான போதம் பலவகைகளில் தனிச் சிறப்பியல்புடைய நூல். சிறப்பாகக் குறிக்கலுறின், தமிழ் நூல்களுள் முதன் முதல் மங்கல வாழ்த்துக் கூறுவதாக அமைந்தது சிவஞான போதமேயாகும். நூலினுட் கூறப்பெறும் பொருட் பாகுபாடுகளைக் குறிப்பால் தன்னகத்தே அடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் என்பர். இனையதொரு மங்கல வாழ்த்துப் பாடல், சிவஞானபோதத்திற் காணப்படுதல்போல, முன்னைய தமிழ் நூல்களில் எதன்கண்ணும் காணப்படவில்லை. இதன்கண் சிவஞானபோத நூலின்கண் விளக்கப்பெறும் பொருட் பாகுபாடுகள் அனைத்தும் குறிப்பாற் புலப்படுத்தப் பெற்றிருத்தல் காணலாம்.

(1) சிவஞானபோதம் சுருங்கிய நூலாதல் புலப்பட இச்செய்யுள் மிகக்குறுகிய 'வஞ்சித்துறை' யின் இயன்றுளது. (2) இந்நூல் 12 சூத்திரங்களால் இயன்றுண்மை தோன்ற, இப்பாடல் 12 சொற்களால் அமைவதாயிற்று. (3) இச்செய்யுளகத்துள்ள 'அருளிய' 'புனைவர்' என்னும் இரண்டு வினைச் சொற்களால், இந்நூல் 'பொது' என்றும், 'உண்மை' என்றும் இரண்டு அதிகாரங்களை உடையதாதல் சுட்டப்பட்டது. (4) மும்மூன்று சொற்கள் ஒவ்வோர்

ஒரு பொருளின் உண்மையை எடுத்துக் காட்டி விளக்க வேண்டுமாயின், பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டாலும் எடுத்துக் காட்ட வேண்டுமாதலால், ''பிரமாண இயல்'' எனப்படும் முதல் மூன்று சூத்திரங்களால், பதி பாசம் பசு ஆகிய முப்பொருள்களின் உண்மையைப் பிரமாணத்தால் முறையே எடுத்துக் காட்டினூர்.

இங்கு ''இலக்கண இயல்'' எனப்படும் பின் மூன்று சூத்திரங்களில் எதிர்நிரல்நிறையாக வைத்து, முப்பொருள்களின் உண்மையை இலக்கணத்தால் எடுத்துக் காட்டுகின்றூர். 'மாட்டேறு' என்னும் இலக்கண முறையால், இச்சூத்திரம் மூன்றும் சூத்திரத்தோடு தொடர்புடையதாய், ஆன்ம (பசு) இலக்கணம் உணர்த்திற்று. *(4)*

## 5. பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா; ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்,
காந்தங் கண்ட பசாசத் தவையே.

விளம்பிய-முற்கூறிய
உள்ளத்து-உயிரால்
மெய்வாய் கண்மூக்கு-மெய் வாய் கண்மூக்கு(செவி) என்பன,
அளந்து அறிந்து(ம்)-தத்தம் விடயங்களை இது இன்னதென்று அளவிட்டு அறிந்தும்.
அறியா-அங்ஙனம் அறியும் தம்மையும், தம்மைச் செலுத்திநிற்கும் உயிரையும் அறியமாட்டா.
ஆங்குஅவைபோல-அங்கே அவ்வைம்பொறிகளைப் போல,
தாம்-உயிர்கள்
தம் உணர்வின் தமி-தமது உணர்விற்கு முதலாகிய இறைவனின்,
அருள்-திரோதான சத்தியால்
அளந்து அறிந்தும்-வினைப்பயன்களை அறிந்து நுகர்ந்தும்.
(அறியா)-தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறிய மாட்டா;
காந்தம் கண்ட பசாசத்தவை-காந்தத்தை எதிர்ப்பட்ட இரும்பு போலத் தொழிற்படும்.

காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் முன்னிலையளவில் தொழிற்படுதல் போல, (கருவிகளான் அன்றி நினைப்பளவாற் செலுத்தி நிற்கும்) இறைவனது முன்னிலையில், உயிர்கள் ஐந்தவத்தைகளினின்று வினைப் பயன்களை அறிந்து நுகரும்.

இரும்பானது காந்தத்தை எதிர்ப்பட்ட அளவில் தொழிற்படினும், காந்தமானது ஒரு செயலும் அற்றுத் தன்னியல்பில் நிற்கும். அது போல, உயிர்கள் இறைவனுல் இயக்கப்படினும், இறைவன் அசைவற்று நிற்பன். (ஆதலான் உயிர்களைத் தொழிற்படுத்துதல்பற்றி இறைவன் திரிபு எய்துதல் இல்லை என்பது குறிப்பெச்சம்)

'செவி' என்பது சொல்லெச்சம்
அறிந்தறியா-அறிந்தும் அறியா.
பசாசம்-இரும்பு.
தமி-முதல்வன்; கடவுள்.
அருள்-திரோதானசத்தி.
இச்சூத்திரம் எடுத்துக்காட்டுவமையணி.

பொருள்களை அறிதற்கண் முதல்வன் உடன்நின்று செலுத்துவனுயின், பொருள்களோடு ஒப்ப முதல்வனையும் உயிர்கள் அறிதல் வேண்டுமே? என்னும் ஐயம் நீக்குதற்கு, 'அளந்தறிந்து' என்றெழியாது 'அறியா' என்றும் கூறினூர்.

இது, முதல்வனது திருவருள் உயிர்களின் அறிவிற் கலந்து மறைந்து நின்று உபகரிக்கும் உபகாரத்தைக் கூறுகின்றது. மறைந்து நின்று உபகரிக்கும் முதல்வனது சத்தி, மறைப்புச்சத்தி அல்லது திரோதானசத்தி எனப்படும். திரோதான சத்தியால்தான், மல மாயை கன்மம் என்னும் பாசங்கள் காரியப்படும்.

திரோதான சத்தியின் இலக்கணம் கூறியமையால், இவ்வைந்தாம் சூத்திரம் பாசத்தின் இலக்கணம் கூறியதாகக் கொள்ளப்படும். *(5)*

## 6. பதி இலக்கணம்

உணர்உரு அசத்து எனின், உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என,
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே.

உணர்உருஎனின்-கடவுள் ஆகிய முதற்பொருள் நம் கருவி கரணங்களால் உணரப்படும் பொருள் என்றூல்,
அசத்து-அழிபொருளாகிய அசத்து ஆகும்;
உணராதுஎனின்-(எவ்வாற்ரூலும்) உணரப்படாத பொருள் என்றூல்,
இன்மையின்-(என்றும் எங்கும்) இல்லாத சூனியப் பொருளாகிவிடும்; ஆதலின்,
இருதிறன் அல்லது-இவ்விரண்டு கூறுபாடும் அன்றி,
இரண்டுவகையின்-(பாசஞான பசுஞானங்களான்) ஒருவகையில் அறியப்படாமையும், (சிவஞானம் ஒன்றூனே) ஒருவகையில் அறியப்படுதலும் ஆகிய இரண்டு வகையானும்.
சிவசத்துஆம்என-சித்துச்சத்து ஆகியபொருள் என்று,
மன்னுலகு-மெய்யுணர்வில் நிலைபெற்றுயர்ந்தோர்,
இசைக்கும்-கூறுவார்கள்.

'உலகு' என்பது திருவருளே கண்ணுகக் கொண்டு இறைவனைக் கண்டு இன்புற்று நிற்கும் உயர்ந்தோரைக் குறிக்கும். சத்து-நிலைபேறு உடைய உள்பொருள். அசத்து-நிலைமாறிச் செல்லும்அழிபொருள். சிவசத்து-சித்துச்சத்து; அறிவாகிய உள்பொருள்.

இறைவன் பாசஞான பசுஞானங்களான் அறியப்படான். சிவஞானம் ஒன்றூல் மட்டுமே அறியப்படுவான். இறைவன் பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமையிற் சிவம் ஆதலும், பதிஞானம் ஆகிய சிவஞானம் கொண்டு அறியப்படுதலாற் சத்து ஆதலும் உணர்த்துதற்குச் 'சிவசத்து' என்றூர். இவ்வாற்றூற் சித்தாதலும் சத்தாதலும் உடையவனுய் நிற்றல், முதல்வனுக்கு இலக்கணம் எனப் பதிப்பொருள் இலக்கணம் உணர்த்தியவாறு.

# சிறப்பு அதிகாரம் :

## 7. சாதன இயல் :

### ஆன்மாவின் சிறப்பிலக்கணம்

(சாதகன் இயல்பு)

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே யறியாது; அசத்து இலது அறியாது;
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

# ஆழ்வார்களின் இறுதி நினைவுகள்

பேராசிரியர் திரு. கு. மதுரை முதலியார்

திருமாலின் கல்யாண குணக் கடலில் எப்பொழுதும் ஆழ்ந்து விளங்கிய ஆழ்வார்கள், தங்கள் இழிந்த மனநிலையையும், உயர்ந்த உள்ளக் கிடக்கையையும், உள்ளது உள்ளவாறே ஊனையும் உருக்கும் தீந்தமிழ்க் கவிதைகளால் வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றைக் கண்டு கழி பேருவகை யடையலாம்.

திருமங்கை மன்னர் தம் வாழ்நாட்கள் பல வீழ் நாட்களாயினமை பற்றி மிக வருந்துகின்றார்.

'ஆவியே யமுதே யெனநினைந் துருகி
அவரவர் பணைமுலை துணையாப்
பாவியேன் உணராது எத்தனை பகலும்
பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்
தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுதென்
நாவினு லுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.'

மக்களிற் பெரும்பான்மையோர் செல்வத்திற் சிறந்து விளங்குகின்ற பொழுது, கட்குடியால் மயங்கிப் பேசும் ஒருவனைப்போல், பிறர் துன்பத்தைச் சிறிதும் எண்ணாமல் பல பல பேசித் திரிவதை நாம் காண்கின்றோம். அது மாத்திரமின்றி வினைப் பயனை ஒவ்வொரு நாளும் அனுபவித்தே திரவேண்டும் என்பதையும் நினையாமல் மயங்கியிருப்பதையும் காணலாம். திருமங்கையாழ்வாரும் 'அவ்வண்ணம் இருந்த நீசன் நான்' என்று தம்மையே மிக இழிவாகக் கூறிக் கொள்கின்றார்.

இறைவனை அடியோடு மறந்து வாழும் மாக்களைத் திருமங்கை மன்னர் நோக்கி மிக இரங்கி,

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம்''

என்று கூறுவது உள்ளத்தை உருக்குகின்றது.

'அவனருளால்தான் அவனடி வணங்க முடியும்' என்றெண்ணிய தொண்டரடிப் பொடியாழ்வார், திருவரங்கனை யல்லது மற்றைப் பொருளை அறியாதவராய், அவனது பேரன்பை நினைந்து,

'சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுள் பட்டழுந்து வேனைப்
போதரே யென்று சொல்லிப்
புந்தியுள் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகனூர் அரங்க மன்றே'

என்று பாடினார். மேலும் இவ்வாழ்வார் தம் உடலுக்கே கரைந்து நைந்து நாட்களைக் கழித்தமை பற்றி மிக வருந்துகின்றார். 'புட்களுக்கு இரையாகும் தம் உடலாகிய புறஞ் சுவரை அழகு செய்வதால் வரும் பயன் ஒன்றுமில்லையாகையால், திருவரங்கர்க்கு ஆளாகாமல் வீணாக நாட்களைக் கழிக்கின்றனரே' என மக்களை நோக்கி வருந்துவதைக் காண்க.

'பெண்டிரால் சுகங்க ளுய்ப்பான்
பெரியதோர் இடும்பை பூண்டு
உண்டிராக் கிடக்கும் போது
உடலுக்கே கரைந்து நைந்து,
தண்துழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி யாடித்
தொண்டுபூண் டமுத முண்ணாத்
தொழும்பர் சோறுகக் குமாறே'

'மறம் சுவர் மதிலெடுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு
புறம்சுவர் ஓட்டை மாடம்
புரளும்போ தறிய மாட்டீர்!
அறம்சுவ ராகி நின்ற
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே
புறஞ்சுவர் கோலஞ் செய்து
புள்கௌவக் கிடக்கின் றீரே'

பொய்கையாழ்வார் தம் இறுதி நிலையைப் பற்றிச் சிறிதும் அஞ்சாது பேசும் திறன், பெரிதும் பாராட்டற்குரியது. மன மொழி மெய் யென்னும் முக்கரணங்களும் இறைவன்பால்

சத்துஎதிர்-சத்தாகிய சிவத்தின்முன்.
யாவையும்-அசத்தாகிய உலகப் பொருள்கள் எல்லாம்,
சூனியம்-(விளங்கித் தோன்றுத) பாழேயாகும்.
ஆதலின்-அதனுல்.
சத்துஅறியாது-சத்தாகிய சிவம் உலகத்தை அறிந்து அனுபவியாது.
அசத்து-அசத்தாகிய உலகப் பொருள்கள்.
இலது ஆகலின்-அறிவில்லாதவை ஆதலால்.
அறியா-சிவத்தை யறிந்து அனுபவிக்க மாட்டா,
இரண்டுஅலா ஆன்மா-சத்தும் அசத்தும்ஆகியஇரண்டும்அல்லாமல் 'சதசத்து' என உள்ள உயிரானது.
இருதிறன்-சத்தாகிய சிவம், அசத்தாகிய உலகம் ஆகிய இரண்டையும்,
அறிவுஉளது-அறியுந்தன்மை யுடையது.

சத்தோடியைந்து சத்தாகியும், அசத்தோடு கூடி அசத்தாகியும், சார்ந்ததன் வண்ணமாய் நின்று, சத்தாகிய சிவமும் அசத்தாகிய உலகமும் ஆகிய இரண்டினையும் அறிந்து வரும் தன்மையுடையதாக இருப்பதால், ஆன்மாவைச் 'சதசத்து' என்று சான்ருேர் கூறுவராயினர். இதனை, ''சத்து அசத்து அறிவது ஆன்மா; தான் சத்துமன்று, அசத்துமன்று; நித்தமாய்ச் சதசத்து ஆகி நின்றிடும் இரண்டின் பாலும்'' என்று அருணந்தி சிவனுரும், ''அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையாற் சதசத்து ஆமே'' என்று உமாபதி சிவனுரும் விளக்கினர்.

''இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'' என்றதனுல், ஆன்மாவின் சிறப்பிலக்கணம் கூறப்பெற்றது. 'இரு திறன் அறிவு உளது' என்னும் இத்தொடரானது 'இருதிறனையும் அறியும் அறிவுளது' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும்; 'இருதிறனுல் விளங்கிய அறிவுளது' என மூன்றும் வேற்றுமைத் தொகையாகவும்; 'இருதிறனிலும் உள்ள அறிவுளது' என ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும் பொருள்படும். (7)

## 8. ஞானத்தினை உணரும் முறைமை

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

தம்முதல்-(தனக்குள் நின்று இதுவரையும் அறிவித்து வந்த) பரம்பொருள்
தவத்தினில்-(உயிரானது தான்முன்னே செய்துவைத்த) புண்ணிய விசேடத்தால்,
குருவுமாய்-குருவடிவாகவும் எழுந்தருளிவந்து (சிவதீக்கை செய்து)
ஐம்புலவேடரின் வளர்ந்து-(அரசகுமாரன் ஆகிய நீ) ஐம்பொறிகள் ஆகிய வேடர்களுடன் சேர்ந்து பழகி வளர்ந்ததனுல்,
அயர்ந்தனை-(அரசன் மகனென்னும் நின் பெருந்தகைமையை) அறியாமல் மயங்கித் துன்புற்ருய்.
எனஉணர்த்த-என்று அறிவிக்க,
விட்டு-(அவ்வளவிலேயே) ஆன்மா, ஐம்பொறிகளை விட்டு நீங்கி,
அன்னியம் இன்மையின்-முதல்வனுக்கு வேருகியபொருளாக இல்லாமையினுல் (பிரிப்பின்றி நிற்கும் தன்மையில் நிலைபெற்று).
அரன்கழல் செலும்-ஆன்மா, அம்முதல்வனது திருவடிகளை அணைந்து நிற்கும்.

இச்சூத்திரம் ஏகதேச உருவகம். சிவஞான சித்தியாரின்கண் ''மன்னவன்றன் மகன் வேடர் இடத்தே தங்கி....'' எனவரும் பாடலில் இதனையே முற்றுருவகமாக விரித்தோதி, அருணந்தி சிவம் அழகுற விளக்கியுள்ளார்.

இச்சூத்திரத்தால், உத்தமகுணமுடைய ஆன்மாக்களுக்கு இறைவன் மானுடச் சட்டை தாங்கி வந்து குருவாய் நின்று, அவை புலன்களின்வழி மயங்கி நின்ற தன்மையினையும், அவை சிவானந்தப் பெருஞ் செல்வந் துய்த்தற்குரிய சித்துப்பொருள் என்பதனையும் உணர்த்தி யருள்வான் என்றும், அவ்விதம் உணர்த்தியவழி ஆன்மாக்கள் உலக முகப்படாமல் நீங்கி ஆண்டவனின் திருவடியை அணையும் என்றும் கூறப்பட்டது. திருவருள் பெறுவதற்குக் குருவருள் மிகவும் இன்றியமையாத தொன்று என்பது, இந்நூற் பாவினுல் உணர்த்தப் பெற்றது. (8)

## 9. ஆன்மசுத்தி (சாதிக்கும் முறைமை)

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழல்ஆம் பதி; விதி எண்ணும் அஞ்செழுத்தே.

ஊனக்கண்-குறைந்த அறிவாகிய பசு அறிவினுலும்,
பாசம்-பாச அறிவினுலும்.
உணராப் பதியை-உணரப்படாத முதல்வனை,
ஞானக்கண்ணினில்-அவனது திருவடிஞானம் என்னும் அறிவினுல்,
சிந்தை-உன் உள்ளத்தினிடத்தே.
நாடி-ஆராய்ந்து அறிவாயாக!
உராத்துனைத் தேர்த்து என-பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த் தேர்போன்று கழியும் இயல்பிற்று என்று அறிந்து,
பாசம்-(நிலம்முதல் நாதம் முடிவாகச் சொல்லப் பெறும்) பாசக் கூட்டத்தை.
ஒருவ-நீங்குதலால்,
பதி-பதிஞானமானது.
தண்நிழல்ஆம்-(பிறவித்துன்பமாகிய வெப்பத்துக்குக்) குளிர்ந்த நிழலாய், வெளிப்பட்டு விளங்கும்.
(அப் பதிஞானக்காட்சி இடையருது நிகழ்ந்து வருதற் பொருட்டு)
அஞ்செழுத்து-திருவைந்தெழுத்தானது.
விதிஎண்ணும்-விதிப்படி அறிந்து கணிக்கப்படும்.

ஊனம்-குறைவு.

கண்-அறிவு.

ஊனக்கண்-குறைந்த அறிவு ஆகிய பசு (உயிர்) அறிவு.

பாசம்-பாச அறிவு.

நாடி-நாடுக; ஆராய்ந்தறிக: இகர ஈற்று முன்னிலை ஏவல்.

உராத் துனைத்தேர்-ஒருவனுல் ஊரப்படாத வேகத்தையுடைதேர்; பேய்த்தேர் (*Mirage*)

உராவுதல்-பரந்து திரிதல்.

துனை-வேகம்.

உராத்துனை-பரந்து திரிதற்கண் மிக்க வேகம்; ஏழாம் வேற்றுமைத்தொகை.

எண்ணும்-அறிவாற் கணிக்கப்படும்; 'எண்ணுங்கள்' என ஏவல் வினையாகவும் பொருள் கொள்ளலாம்.

திருவைந்தெழுத்து மந்திரத்தில், சி சிவத்தினையும், வ அருளையும், ய உயிரையும், ந திரோதானசத்தி என்னும் மறைப்பு ஆற்றலையும், ம ஆணவம் முதலிய மலங்களையும் குறிக்கும் என்பர்.

தம் முதல்வன், குருவுமாகப் போந்து உணர்த்திய திருவைந் தெழுத்தினைச் சிந்தனை செய்துணர்ந்து கணிக்கும் முறையினால், ஐம்புல வேடர்களோடு கலந்து பழகி வளர்ந்த குற்றம் நீங்கி, உயிர் தன்னைத் தூய்மைசெய்து கொள்ளும் நெறியினையுணர்த்துவதனால், இச்சூத்திரம் ஆன்மசுத்தியினை உணர்த்திற்று.

## 10. பாச நீக்கம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

அவன்-(ஞானக் கண்ணிற் சிந்தை நாடப்பெற்ற) அவ்விறைவன், (பொருட்டன்மையால் வேறேயாயினும், வேறு காணப்படாமல் யானே கண்டேன் என்னும்படி).

தானே ஆகிய-உயிரே ஆகி நின்ற,

அந்நெறி-அந்தப் பெத்தநிலை போல,

ஏகன் ஆகி-உயிரானது தான் என வேறுகாணப்படாமல் அவ்விறைவனே யாகும்படி ஒற்றுமைப்பட்டு அடங்கி.

இறைபணிநிற்க-இறைவனுக்குரிய தொண்டுகளைச் செய்து அவற்றில் வழுவாது ஒழுகின்.

மலமாயை தன்னொடு-(பாசங்கள் நீங்கிய நிலையிலும், வாசனையால் வந்து தாக்குகின்ற) ஆணவம் மாயை ஆகியவற்றுடன்.

வல்வினை-வலிய கன்ம மலமும்,

இன்று-இல்லையாகிப் பற்றறக் கழியும்.

[அவன்-இறைவன், தான்-உயிர்.

நெறி-போல; உவமவுருபு; இடைச்சொல்.

அந்நெறி-அதுபோல.

ஏகன்ஆகி-ஒற்றுமைப்பட்டு.

இறைபணிநிற்றல் - இறைவனுக்குத் தொண்டு செய்து வழுவாது ஒழுகுதல்.

நிற்றல்-ஒழுகுதல்.]

ஈண்டு ''ஏகன் ஆகி இறைபணி நிற்றல்'' என்று குறிக்கப்பட்டதனை,

''அவன் இவனாய் நின்றமுறை ஏகன் ஆகி
அரன் பணியின் நின்றிடவும் அகலும் குற்றம்''

''ஒக்கஉறைந் திவர்அவனை, அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச்சிவன்தோற்றம் ஒன்றுமே காண்பர்'

என அருணந்தி சிவாசாரியரும்,

'ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி, மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?'

எனத் தாயுமானவரும், விளக்கியிருத்தல் காண்க. பாசங்கள் நீங்கிய நிலையிலும், உயிரை வாசனாமலம் வந்து தாக்கும் என்பதனை,

''போதம் மேலாகப் பண்டே
புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்,
மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும்
மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம்
நுண்துளி துவற்றும் மாதோ''

எனச் சிவஞானசுவாமிகள் காஞ்சிப் புராணச் செய்யுளிற் குறிப்பிடுதல் இங்கு அறிதற்கு உரியது.

ஏழாஞ் சூத்திரத்தால் சாதிக்கும் பொருளின் இயல்பும், எட்டாஞ் சூத்திரத்தால் சாதனமும், ஒன்பதாஞ் சூத்திரத்தால் சாதிக்கும் உபாயமும் உணர்த்தியவர், இப் பத்தாம் சூத்திரத்தால் அச்சாதனத்தாலாகிய பயனின் தன்மையை வகுத்துக் கூறலுற்றார். அப்பயனாவது, பாசநீக்கமும், சிவப்பேறும் என இருவகைப் படும். இப்பத்தாம் சூத்திரம், அவ்விரண்டனுள் 'பாசநீக்கம்' கூறியதாகும். *(10)*

## 11. சிவப்பேறு

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

காணும் கண்ணுக்கு-உயிர் காட்டக்காண்பதாகிய கண்ணுக்கு.

(காணக்) காட்டிக் காணும் (உளம்போல்-பிரிப்பின்றி உடங்கு இயைந்து நின்று) உருவத்தைக் காணும்படி காட்டித், தான் காண்கின்ற உயிரைப் போல.

(காணும்) உள்ளத்தை-அறிவிக்க அறிவதாகிய உயிருக்கு.

காணக் காட்டி (அரன்) காண்டலின்-(பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று) நுகர் பொருள்களை அறியும்படி அறிவித்து, முதல்வன் தான் அறிந்து வருவதால்.

அயரா அன்பின்-(அவ்வாறு முதல்வன் செய்துவரும் பேருதவியினை) மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பினால்.

அரன்கழல் செலும்-(உயிர்கள்) அம் முதல்வனின் திருவடியாகிய சிவானந்த அனுபூதியைத் தலைப்படும்.

உளம்-உயிர். அயராமை-மறவாமை.

அரன்-உயிர்களின் பாசத்தை அரிப்பவன்.

பிரிப்பின்றி உடங்கியைந்து நிற்றல்-அத்துவிதமாய் இயைந்து நின்று உதவி செய்து வருதல்.

1. 'கண்டு காட்டலின்' என்னும் தொடரைக் 'காட்டிக்காண்டலின்' என மாற்றிப் பொருள் கொள்க. சிவஞான சித்தியாரின்கண்,

''காயம்ஒழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை உடையன்; கண்ணுக்கு
ஏயும்உயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசன் உயிர்க்குக் காட்டிக்கண் டிடுவன்''

என அருணந்தி சிவாசாரியர் இப்பொருளைத் தெளிவுற விரித்து விளக்கியிருத்தல் காண்க.

ஈடுபடும் பேறுபெற்ற பெரியோர்கள் எதற்கு அஞ்சவேண்டும். 'என்னுகில் என்னே யெனக்கு' என்று இப்பெரியோர் கூறும் வெண்பாவைப் படித்து மகிழ்வோம் :

''நாடிலும் நின்னடியே நாடுவன், நாடோறும்
பாடிலும் நிற்புகழே பாடுவன்,-சூடிலும்
பொன்னுழி யேந்திஞன் பொன்னடியே சூடுவேற்கு,
என்னுகி லென்னே யெனக்கு''.

பூதத்தாழ்வார் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்கின்ருர்; தாமே ஏழ் பிறப்பும் தவம் செய்த நல்ல பெருந்தமிழ் மகஞர் என்று பேசுகின்ருர் ; இவ்வளவு பெருமைக்கும் உரிய காரணத்தையும் தெரிவிக்கின்ருர் ; அக்காரணம் என்றும் வாடாத் தமிழ் மாலையைத் திருமாலின் திருவடிக்குச் சூட்டும் பேற்றினைத் தாம் பெற்றமையே என்று பாடுகின்ருர் :

யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்
பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்-யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

பேயாழ்வார் வாழும் வகையறிந்த பெரியார். கல்வியால் அறிவும், அறிவால் வாழும் வகையும், அறியாத மர்ந்தர் கல்லாதவரினும் கடையரே ; எல்லாம் வல்ல இறைவனது அடிகளை மறவாத மாண்புடையவர்களே இவ்வுலகில் வாழ்வாங்கு வாழும் வகையறிந்த பெரியோர்கள். இக்கருத்தைப் பேயாழ்வாரது திருப்பாடலில் காண்க.

'வாழும் வகையறிந்தேன் மைபோல் நெடுவரை
வாய்
தாழும் அருவிபோல் தார்கிடப்பச்—சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் எங்கள்
பெருமான் அடிசேரப் பெற்று'

'மலையிடையும் நெருப்பிடையும் நின்றும், மாண்புனல் குளித்தும் தவநிலையை மேற்கொள்ள வேண்டா' என இவ்வாழ்வார் கூறுவதைக் கீழே காணலாம் :

''பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா—விருப்
புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க்
கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து''

'ஐம்புலன்களை அடக்குவது அருமை. அதே போன்று ஆசை என்னும் தொடக்கினை அறுத்தலும் அருமை. இவ்வருஞ் செயல்களில் வெற்றி கண்டு நெறியின் நின்ற என்னை விடக் கருதி நீயென் செயினும் நின்னலால் ஒரு கண்ணிலேன்' என்று திருமழிசை யாழ்வார் தம் திருச்சந்த விருத்தத்தில் கூறுகின்ருர்.

''அடக்கரும் புலன்களைந் தடக்கி
ஆசை யாம் அவை
தொடக்கறுத்து வந்து நின்
தொழிற்கண் நின்ற என்னைநீ
விடக்கருதி மெய் செயாது
மிக்கொ ராசை யாக்கிலும்
கடற்கிடந்த நின்னலால் ஓர்
கண்ணிலேன் எம் அண்ணலே''

இவ்வாழ்வாரே, கூற்றமும் கொடுவினையும் சாரா வகையறிந்த தன்மையையும், தேவாதி தேவனுகவும்; கற்றவையும் கற்பவையுமாகவும் காரணனுகவும் நிற்பவன் நாரணனே யென்பதையும் நான்முகன் திருவந்தாதியில் நவில்கின்ருர் :

''கூற்றமும் சாரா, கொடுவினையும் சாரா, தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்-ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக் கிடக்கும் உள்ளத் தெனக்கு''

''இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை—இனியறிந்
தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரியை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்''

மக்களின் துன்பத்தைப் போக்கி, அன்பினைக் காட்டி, உயர் நிலையில் அவர்களை நிறுத்துபவர் தாய் தந்தையரே, அவ்வண்ணம் எனக்கு உதவி புரிந்து, ஆயிரம் பேரினையும் சுடர் கொள் சுடராழியினையும் கொண்டு விளங்கும் திருமாலை என் திருவுள்ளத்தில் வைத்துள்ளேன். ஆகையால் எனக்கு இனி இவ்வுலகில் 'யாதாகில் யாதே' என்ற கருத்தை நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய பெரிய திருவந்தாதியில் காணலாம் :

'அடர்பொன் முடியானை ஆயிரம் பேரானைச்
சுடர்கொள் சுடராழி யானை-இடர்கடியும்
மாதா பிதாவாக வைத்தேன் எனதுள்ளே
யாதாகில் யாதே இனி'

நம்மாழ்வாரின் உற்ருரும் உறவினரும் உயிர்த் துணையும் கார்கலந்த மேனிக் கண்ணனே என்பதை அவரது திருவந்தாதியில் காணலாம்.

'உரைக்கிலோர் சுற்றத்தார் உற்ருரென் ருரே?
இரைக்கும் கடற்கிடந்த எந்தாய்-உரைப்பெல்லாம்
நின்னன்றி மற்றிலேன் கண்டாய் எனதுயிர்க்கோர்
சொல்நன்றி யாகும் துணை'.

மக்களுக்கு இறுதிக் காலம் வருவதற்கு முன்னர் எது செய்தால், பிறவிப் பெருங் கடலைக் கடந்து, பிறவாப் பெரு நிலையைப் பெறலாம் என்பதைச் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் தந்தையாராகிய பெரியாழ்வார் திருமொழியில் காணலாம்.

'சோர்வினுல் பொருள் வைத்த துண்டாகில்
சொல்லு சொல்லென்று சுற்றும்இருந்து
ஆர்வினவிலும் வாய் திறவாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்
மார்வமென்பதோர் கோயிலமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வமென்பதோர் பூ இட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலுமாமே'. **

2. உள்ளத்தை - உள்ளத்திற்கு, உயிருக்கு. (உருபு மயக்கம்).

3. 'காணும் கண்ணுக்கு' என்பதிலுள்ள அடைமொழியைக் 'காணும் உள்ளத்திற்கு' எனவும் இயைத்துப் பொருள் கொள்க.

4. '(அரன்) கண்டு காட்டலின்' என்பதிலுள்ள கண்டு என்னும் வினையைக் 'காட்டும் உளம்போல்' என்பதனோடும் இயைத்துக் 'காட்டிக் காணும் உளம்போல்' என மாற்றிப் பொருள் கொள்க.

5. 'காண உள்ளத்திற்கு' என்பதனைக் 'காணக் கண்ணுக்கு' எனவும் கூட்டிக் கொள்க.

6. அறிவு இச்சை செயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் அரன்கழல் செல்லுதலும், முறையே காரண காரியங்களாய் ஒருங்கு நிகழும் என்பார் 'அயரா அன்பின் அரன் கழல் செல்லும்' என்றார்.

மேற் சூத்திரத்துள் கூறியபடி ஏகனாகி இறைபணி நிற்கும் உயிர், முதல்வன் பெத்த நிலையினும் முத்திநிலையினும் அத்துவிதமாய் நின்று உபகாரஞ் செய்து நிற்கும் உரிமையை நோக்குமாயின், நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அவ்வுயிர்க்கு, இறைவனாகிய அருட்பொருளைத் தலைப்படும் இச்சையானது அடங்காமல் மீதூரும். அவ்வழி அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அனுபவிக்கும் என்று, முத்தான்மாவின் அறிவு இச்சை செயல்கள் மூன்றும் சிவத்தை விடயித்து நிற்கும் விதத்தையுணர்த்தி, அதீத நிலையின் இயல்பினைக் கூறியவாறாயிற்று.

இரண்டாம் சூத்திரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட அத்துவிதம் என்னும் இறையுயிரியற் புணர்ப்பின் இயல்பு, ஐந்தாம் சூத்திரத்தில் மேலும் விளக்கப்பட்டு, இச்சூத்திரத்தில் முழுதாக விளக்கம் செய்யப்பட்டது என்று உணர்க. இச்சூத்திரம் சிவப்பேறு கூடுதலாகிய சிறந்த பயனை உணர்த்தியது.

எட்டாஞ் சூத்திரம் கேட்டலையும், ஒன்பதாம் சூத்திரம் சிந்தித்தலையும், பத்தாம் சூத்திரம் தெளிதலையும் குறிக்கும். இப்பதினொன்றும் சூத்திரம் 'நிட்டையின் இயல்பு' உணர்த்தியது எனவும் கூறலாம். (11)

## 12. அணைந்தோர் தன்மை

(சீவன் முத்தர் இயல்பு)

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு, மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

செம்மலர்-சிவந்த தாமரை மலர் போன்ற,

நோன்தாள்-(அன்பரைத்) தாங்குகின்ற திருவடிகளை.

சேரல்ஒட்டா-சேரவிடாமல் தடுக்கின்ற.

அ-அத்தகைய (கொடிய) இயல்பினையுடைய.

மலம்-(ஆணவம் கன்மம் மாயை என்னும்) மலங்களின்அழுக்கினை

கழீஇ-(ஞான நீரால்) கழுவி.

அன்பரொடு-மெய்ஞ்ஞானிகள் ஆகிய அடியார்களுடன்.

மரீஇ-கலந்து கூடி.

மால்அற-(மலங்களின்) மயக்கம் நீங்க,

நேயம் மலிந்தவர் வேடமும்-அன்புமிக்கவர்களாகிய அடியார்களின் சிவ வேடத்தையும்.

ஆலயம் தானும்-சிவாலயத்தையும்.

அரன்என-முதல்வன் என்றே கண்டு.

தொழும்-(சீவன் முத்தன்) வழிபடுவான்.

1. மேற் பதினொன்றாம் சூத்திரத்துள், சீவன் முத்தராவர் நீங்காத அன்பொடு ஆண்டவனின் திருவடியில் அறிவு இச்சை செயல்களைச் செலுத்துபவர் என்று கூறியவர், அந்தச் சீவன் முத்தர்க்கே அறிவு இச்சை செயல்கள் ஒருகால் புறத்துச் செல்லுமாயின், அவை செல்லுகின்ற இடம் இவையென்பதனை இச்சூத்திரத்தில் உணர்த்துகின்றார்.

2. மேலும், இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் வாக்கிற்கும், மனத்திற்கும் அப்பாற்பட்ட இறைவனைப் பத்தியினால் உணர்வின்கண் வழிபட்டு வந்தது போலல்லாமல், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டும்படியாகவும் தெளியக் கண்டு வழிபடும் விதம் இது வென்று அறிவுறுத்தப்படுகின்றது. நேயம்மலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும்.

3. 'அம்மலம் கழீஇ' என்றதனால் சீவன் முத்தர்க்குப் புறத்தே அறிவு நிகழும் இடமும், 'அன்பரொடு மரீஇ' என்றதனால் இச்சை நிகழும் இடமும், 'தொழும்' என்றதனால் செயல் நிகழும் இடமும் உணர்த்தப்பட்டன.

4. 'தொழுக' என்னாது 'தொழும்' எனக் கூறியதனால், இஃது அணைந்தோர் தன்மை உணர்த்திற்று என்பது பெறப்படும்.

5. சீவன் முத்தர் என்பவர்கள், சீவிக்கும் பொழுதே பாசத்தினின்று விடுபட்டோர்; பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர்; 'சிவமே கண்டிருப்போர்'.

6. மலங்களைதலும், அன்பரொடு மருவுதலும், சிவவேடத்தையும் சிவாலயத்தையும் அரன் எனக்கண்டு தொழுதலும், சீவன் முத்தர்களுக்கு உரிய இயல்பு. இவ்வியல்பினைச் சீவன் முத்தர்களாக விளங்கியிருந்த அறுபான் மும்மை நாயன்மார் முதலாயினார் வரலாறுகளில் வைத்து உணர்ந்து கொள்ளலாம். (12)

**(சிவஞானபோதத் தெளிவுரை முற்றிற்று)**

செய்தல் கடமையாதலின் ''வெய்யோன் ஆகம் அணி செய்வது ஓர் கண்ணாடி வடிவாகும்'' என்றார். சந்திரன் கொடைத் திறனில் அம்பிகைக்குத் தோற்று, தானும் ஒரு கண்ணாடியின் வடிவாகி நின்றான் என்பார் ''மோக மதிதானும் அதுவாகி'' என்றார். 'அது' என்றது கண்ணாடியை. அம்பிகையின் முகம் தாமரை போலும் என்பார் ''உன் முகஞ்சேர் கோகனதம்'' என்றார். கோகனதம்—தாமரை. கண்ணாடி வடிவு கொண்ட சந்திரனில், அம்பிகையின் முகமாகிய தாமரை தோன்ற, அதனைச் சந்திரன் தனது இதய தாமரை என்று சொல்லி மகிழ்கின்றான் என்பது ''உன்முகஞ்சேர் கோகனதம், என் இதய கோகனதம் என்னும்'' என்று கூறப்பெற்றது. என்னும்—என்று சொல்வான்.

சூரியன் அம்பிகையின் பாதத்தினது சுடருக்கு அஞ்சுதல் கூறவே, சந்திரன் அம்பிகையினது பாதத்தின் கொடைக்கு அஞ்சுகின்றான் என்பது அருத்தாபத்தியால் பெறப்படும். இதற்குக் காரணம், முகம் வேறுபடாது இருத்தலாகும். அஃதாவது அம்பிகையின் முகம் சந்திரனைப் போன்ற ஒண்மையும் தண்மையும் உடையதாகத் திகழ்தல். தேவி முகமலர்ந்து ஈதலை எண்ணி, பாதத்தினது கொடைக்கு அஞ்சிய சந்திரன், தான் கொடையினால் பாதத்துக்கு ஒப்புமை உடையவன் ஆக வேண்டிக், கண்ணாடி வடிவெடுத்து, அம்பிகையின் முகத்தாமரை தன்னிடத்தே நிழலிட்டுத் தோன்ற, எதிரே நின்று அதனைத் தன் இதய தாமரை என்று சொல்லி மகிழ்கின்றான் என்பது கருத்து. இச்செய்யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

## (93) களி தழைக்க அருள் தாயே :

அம்பிகை உலக உயிர்களுக்கெல்லாம் அருள் நிறைந்த தாயாக விளங்குகின்றாள். தன்னுடைய அன்பர்கள் தன்பால் இரந்து வேண்டும் அளவைக் காட்டிலும், இரட்டிப்பு மடங்கு நலங்களை, அவர்களுக்கு அவளது திருவடிகள் அளித்தருள்கின்றன. ஆதலின் அத்திருவடிகளைக் கற்பக மரம் என்று சொல்லலாம். கற்பக மரத்தில் பூங்கொத்துக்கள் நிறைந்து அழகுற ஒளிரும்; இன்பமாகிய தேன்நிறைந்து பிலிற்றும். அதன்கண் சென்று என்னுடைய இருதயம் ஆகிய வண்டானது படிந்து மூழ்கித் திளைக்கும். அங்ஙனம் படிந்து மூழ்குதலால் விளையும் புளகமும் அழியாத களிப்பும் மேன்மேல் மிகுதியாக வளர்ந்தோங்கும்படி அம்பிகை அருள்புரிவாளாக.

அன்பினர் இரப்பதின் இரட்டி அருள்செய்யும்
நின்பத தரு, துணர் நிறைந்து, ஒளிர்வனப்பாம்
இன்பமுறு தேன்முழுகும் என்இதய வண்டின்
தன்புளகம் மெய்க்களி தழைக்க அருள், தாயே!

அம்பிகையின் அருளியல்பினை வியந்து வியந்து, ''அன்பினர் இரப்பதின் இரட்டி அருள் செய்யும் பதம்'' என்றார். அன்பினர் —பக்தர்கள். இரப்பதின்—கேட்பதைவிட. இரட்டி—இருமடங்கு. அருள் செய்யும்—கொடுக்கும். நினைந்து விரும்புவனவற்றை யெல்லாம் தருதலால் அம்பிகையின் பாதங்களைப் 'பததரு' என்றார். பதம்—திருவடி. தரு—கற்பக மரம். பததரு—திருவடியாகிய கற்பகமரம். துணர்—பூங்கொத்து. ஒளிர்தல்—விளங்குதல். வனப்பு—அழகு. திருவடியின் அழகைத் ''துணர் நிறைந்த ஒளி வனப்பு'' எனப் புகழ்ந்தார். ''A thing of beauty is a joy for ever'' என்றபடி அழகு ஆனந்தம் தருவதாகலின், அதனை ''வனப்பாம் இன்பம் உறு தேன்'' என்றார். உறுதல்—மிகுதல். அழகைத் தேன் எனவே, அதில் ஈடுபட்டு இடையறாது மகிழும் மனத்தினைத் ''தேன் முழுகும் இதய வண்டு'' என்று உருவகம் செய்தார். திருவடியின் வனப்பை இடையறாது நினைத்து மனத்தில் தியானித்தால் உண்மையான சிறந்த களிப்பு மேன்மேலும் பெருகும் ஆதலின் ''புளக மெய்க் களி தழைக்க அருள், தாயே'' என்றார். புளகம்—மகிழ்ச்சியால் மெய்ம் மயிர் சிலிர்த்தல். மெய்—உடம்பு, உண்மை. களி—களிப்பு, ஆனந்தம். தழைக்க—மேன்மேல் பெருக. இச்செய்யுள் இயைபு உருவகம் என்னும் அணியும், ஆர்வமொழி என்னும் அணியும் அமைந்ததாகும். மேல் வந்த பாடல்கள் பத்தும் அம்பிகையின் பாதங்களைப் புகழ்ந்து போற்றின.

## (94) மலர்ப்பதம் மனத்தெழுதி வைத்தேன்:

எல்லாப் பொருளுக்கும் ஆதியாகிய பரமன் சிவபெருமான். அவனுடைய இனிய அருளே ஒருங்கு திரண்டு சிவந்த வடிவம் கொண்டு அம்பிகை எனத் திகழ்கின்றது. அத்தகைய அம்பிகையின் இருள் பொருந்திய கூந்தலையும், ஒளிபொருந்திய நகையினையும், குழைவுற்ற மேனியினையும், ஒன்றோடொன்று நெருங்கும் முலையினையும், சிறிதாகிய இடையினையும், பெரிய நிதம்பத்தினையும், மலர் போன்ற பாதத்தினையும் மறந்து விடாமல், யான் என் மனத்தின்கண் எழுதி வைத்துத் தொழுகின்றேன். அதனால் அம்பிகை என்னைக் காத்தருள்வாள்.

ஓதிஇருள், மூரல்ஒளி, உற்ற குழைவு ஆகம்,
மோதுமுலை, அற்பஇடை, முற்றும்உன் நிதம்பம்,
ஆதிபரன் இன்னருள் திரண்டுஅருணம் ஆகும்
மாது!நின் மலர்ப்பதம் மனத்தெழுதி வைத்தேன்!

அம்பிகை இறைவனுடைய திருவருளேயாய் விளங்குபவள், அவளது வடிவம் சிவந்த நிறம் கொண்டு திகழ்வது என்பார் ''ஆதிபரனின் அருள் திரண்டு அருணமாகும் மாது'' என்றார். அருணம்-சிவப்பு. 'பரனின் அருள்' என்பதைப் 'பரன் இன்னருள்' எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இச்செய்யுள் அம்பிகையின் திருவுருவ நலங்களைச் சிறப்புற எடுத்துக் கூறித் துதிக்கின்றது. ஓதி-கூந்தல்; 'ஓதி இருள்' என்பது இருள் ஓதி என மாற்றிப் பொருள் கொள்ளப்பெறும். மூரல்—புன்முறுவல். ஒளி—அழகு. ஆகம்—உடம்பு, திருமேனி. மோதுதல்—ஒன்றோடொன்று நெருங்குதல். முற்றுதல்—பெருத்தல். நிதம்பம்—அல்குல். இச்செய்யுள் ஆர்வமொழி என்னும் அணியாகும்.

# மதுரகவி ஆழ்வார்

திரு. உ. வே. டி. இராமசுவாமி ஐயங்கார், பி.ஏ.பி.எல்.

-சென்னை.

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில்
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி
ஆறிய நல்லன்புடனே குருகூர் நம்பிக்கு
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து
மாறனையல்லால் என்றும் மறந்தும் தேவு
மற்றறியேன் எனும் மதுரகவியே! நீ முன்
கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பு அதனில் பாட்டுக்
குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே.

—தேசிகப் பிரபந்தம்.

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில் சித்திரையிற் சித்திரை நாள் வந்து தோன்றியவர் மதுரகவி ஆழ்வார். ஆழ்வார்களில் பெருமாள் பற்றியே நூற்றுக்கணக்கான பாசுரங்கள் பாடியோர் நிற்க, பதினொரு பாசுரங்கள் மட்டுமே, அவையும் நம்மாழ்வார் பற்றி மட்டுமே, பாடிய இம்மதுர கவிகளுக்கு மதிப்பு அதிகம். செந்திறத்த தமிழோசையில் முதிர்ந்த பயிற்சி யடைந்து ''மதுர கவி'' என்று காரணப் பெயர் பெற்று இன்பப் பாக்களை ஆயிரக்கணக்கில் பாடவல்ல இவர், மாறன் பணித்த மறை ஆயிரத்தை, அவர் அருளியவாறு பட்டோலை கொண்டு, அதற்கு முன்னும் பின்னும், 'வேதத்திற்குப் பிரணவம் போல்' அநுசந்திக்கப்படுவதற்காக ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பதினொன்றே பாக்கள் அடங்கிய ஒரு சிறு நூலை மட்டும் இயற்றியருளினர்.

வட நாட்டில் அயோத்தியில் எழுந்தருளியிருந்த மதுர கவிகள், தென் திசையில் தோன்றிய ஒரு சோதியைக் கண்டு அதைப் பின்தொடர்ந்து திருநகரியை அடைந்து, அங்கே புளிய மரத்தடியில் பகவத் அனுபவம் செய்து கொண்டிருந்த ஆழ்வாரைச் சேவித்தனராம். இந்த விசித்திர சம்பவத்தால்தான், இன்று திருவாய் மொழியும், அதன் மூலமாய்த் திருமகள் கேள்வன் திருவருளும், உலகத்தில் நடையாடி, நம்மனைவரையும் வாழ்வித்து வருகின்றன. நம்மாழ்வார் பகவானைத் தம் திருவுள்ளத்தாலே அநுபவித்து அதனால் ஏற்பட்ட பிரீதியால் அனுபவித்தபடியே பேசிவருங்கால், அருகேயிருந்து அவ்வனுபவத்தை எள்ளளவும் தவற விடாது நமக்கு அளித்து உய்வித்தவர் நம் மதுர கவிகள். இந்தப் பேருபகாரம் ஒன்றே போதும், இவரை நாம் என்றும் வழிபட்டு வணங்கிப் போற்றுவதற்கு.

ஆனால் மதுர கவிகள், நம் சம்பிரதாயத்திற்குச் செய்த வேறொரு மகோபகாரம் உண்டு. இராமாயணத்தில் சத்துருக்கனன் எந்த நிட்டையை அனுட்டித்தாரோ அந்த நிட்டையை மதுர கவி உலகோருக்கு உபதேசித்துள்ளார். பெருமான் இட்ட கட்டளையைப் பிரிவு நேரிட்ட போதிலும் பொறுத்துக் கொண்டு நடத்தியவர் பரதன். பெருமாள் திறத்தில் இலட்சுமணனும் பரதனும் இருந்த விதங்களை ஒருங்கே சேர்த்து, பரதன் திறத்தில் அனுட்டித்துப் போந்தவர் சத்துருக்கனன். மீதி மூவர் கதைகளால் நிரம்பிய இராமாயணம் சத்துருக்கனனுக்கென்று தனித்து மிகச் சில சொற்களையே கூறியிருக்கிறது. அந்த நிட்டையை, மிகுந்த சுவையாயும் பொருள் நிறைந்தவையாயுமுள்ள பாசுரங்களால் உபதேசம் செய்து, அந்த மதத்தை எல்லோருக்கும் சம்மதமாம்படி காட்டித் தந்ததே, நம் மதுர கவிகள் செய்த பேருதவியாகும்.

விசிட்டாத்வைத தத்துவத்தை நன்குணர்ந்தோர் எல்லாம் தமது ஆத்மாவுக்கு சர்வேச்வரன் அந்தராத்மா என்று அனுபவ பரியந்தமாய் அறிவார்கள். அதிலும் சிலர், ''உண்ணுஞ் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'' அதாவது ''வாசுதேவ சர்வம்'' என்று விசுவாசம் மிகுந்து நிற்பார்கள். இவ்வாறு உளங்கனிந்து நிற்கும் மகாத்மாக்களை எம்பெருமான் மிகவும் கிடைத்தற்கு அரியவர்கள் என்று கொண்டாடி, அவர்கள் தனக்கு ஆத்மாவென்று சொல்லிக் கொள்வது வழக்கம். இப்படி நமக்கெல்லாம் ஆத்மாவாய் விளங்கும் பரமாத்மாவுக்கே அந்தராத்மா என்னும் நிலையைப்பெற்ற மகாபுருஷர்களைப் பின்பற்றுவது தான், சத்துருக்கனனும் மதுர கவிகளும், நமக்# காட்டியுள்ள புருஷார்த்தத்தின் எல்லை நிலம். இந்தப் பொருளை ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தின் பரம சூட்சுமமான ரகசியமாகப் பரிபாலித்து, அதனுடைய அனுட்டானத்தினால் அனைவரும் நன்மை பெறுவது இனி எளிதென்றே கூற வேண்டும்.

பகவத் விஷயத்தில் வியாமோகம் அடைந்து நின்றோருக்கு ''வேங்கடப் பொற்குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்'' எத்தனை இன்பந்தர வல்லனவோ, அத்தனை இன்பமும், அவ்வடியார்கள் திறத்து அவ்வடியாரடியார்களுக்கு ஏற்படுவதுண்டு. இந்த விஷயத்தை நம் மதுர கவிகள் இயற்றியருளிய பிரபந்தம் நன்கு வெளியாக்குகின்றது. ஒவ்வொரு பாசுரத்தில் ஒவ்வொரு அனுபவத்தைப் பேசித், தாம் ஆழ்வாருடைய பூரண கடாட்சத்திற்குப் பாத்திரராய் அவருடைய அனுக்கிரகத்தால் பகவத அனுபவத்திற்கு உரியராய் விளங்குவதை ஆராமையுடன் நினைந்து மகிழ்கின்றார்.

பாகவத காஷ்டை என்று பெயர் பூண்டு நிற்கும் இந்த மனோநிலை, ஒரு பெரிய படுகுழியினின்று தப்ப வேண்டும், பாகவதர்களுடைய பெருமையைப் பேசுமிடத்தும், எண்ணுமிடத்தும் பகவத் சம்பந்தமாய் அபசாரமும், அபகர்ஷமும் ஏற்படாதிருத்தல் வேண்டும். பகவத் சம்பந்தம் பெற்றமையால் ஏற்றம் அடைந்தவர்களை வழிபட்டு, அந்த பகவத் சம்பந்தத்தைக் குறை கூறுவது எத்தனை மதியீனம். அதிசயோக்திகளும் அதிவாதங்களும் (மிகைபடக் கூறும் இயல்பு) பெருமைப்படுத்துவதில் நோக்கமுள்ளனவேயன்றி, இதர விஷயத்தில் தாழ்ச்சியை ஏறிட முன் வந்தவைகளல்ல என்பதை மறவாதிருத்தல் வேண்டும். வால்மீகி சத்துருக்கனனை ''தோஷமற்ற சத்துருக்கனன்'' என்று கூறிய விடத்து ''தோஷம் அற்றமையாவது இராம பக்தியாகிய தோஷம் தீண்டாதிருத்தலே'' என்று பொருள் படுத்துவாருமுண்டு. இதுதான் மேலே சொன்ன நஹிநிந்தா நியாயம். இப்படி அயோத்தியா காண்டத்தின் முதல் சுலோகத்தைப் பொருள்படுத்தும் அவர், அதே காண்டத்தின் 89-வது சர்க்கத்தின் மூன்றாவது சுலோகத்தில் 'ஜாகர்மி, நாஹம்ஸ்வபிமி தமேவார்யம்விசிந்தயந்'' (நான் தூங்கவில்லை, நீர் வந்திக்கும் மகா புருஷனையே சிந்தித்து விழித்தே யிருக்கிறேன்) என்று தம்மை எழுப்பிய பரதனுக்கு உத்தரம்அளித்த சத்துருக்கனன் வாக்கியத்தைப் படித்திலர் போலும்! என்று சொல்ல முடியுமா? இராம பக்தியைத் தோஷமாக மதிப்பவர் தமக்குக் கைங்கர்யம் செய்வது, பரதன் திருவுள்ளத்திற்கு உகப்பாயிராது என்றும் அறிவர். ஆகையால் இராமபக்தியைப் பழிப்பது கருத்தன்று, பரத பக்தியைப் பாராட்டுவதில் நோக்கு.

''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் நூலில் பகவதனுபவமும், பாகவத அனுபவமும் ஒருங்கே திரண்டு கிடப்பதால், படிப்பவர் உள்ளம் கவரப்படும் வழியில், பாசுரங்கள் அமைந்துள்ளன. நம்மாழ்வாருடைய பெயர் நாவிலூறாத அமிழ்தூறச் செய்யுமியல்பினதென்று தொடங்கி, தனக்குத் தனித் தேவராய் நிற்கும் ஆழ்வாரைத் தாம் அடிபணிந்தமை பற்றித் தனக்கு முன்பிருந்த பாப நிலையெல்லாம் கழிந்து, பிறர் பொருள் தாரம் என்றிவற்றில் நம்பிக்கை விட்டு, வேதத்தினுட் பொருள் தன்னுள் நிற்கப் பாடித், தனக்குச் சர்வவித பந்துவாய் நிற்கும் ஆழ்வாருடைய மிகுந்த அருளால், தனக்கு இன்று தொட்டு எழுமையிலும் ஆழ்வார் புகழ் ஏத்த அருள் பெற்றது மன்றி, ஆழ்வாருக்கு அடிமை பூண்டதின் பயனாய்த்தான், தேவாதி ராஜனை திருமகள் கேள்வனின் கரிய கோலத் திருவுருவைக் காணப்பெற்றதையும் பேசிக் களிக்கிறார், இந்தப் பிரபந்தத்தில்.

எம்பெருமானை எப்படி உபாயமாயும் புருஷார்த்தமாயும் கருதுவது முறையோ, அது போல் அவனடியாரையும் இரண்டு வழியிலும் முக்கியர்களாய்க் கருதுவது தருமம். நம்மாழ்வார், தமது ஒரு திருவாய்மொழியில் அவர்களை உபாயமான ஆசார்யர்களாயும், வேறு ஒரு திருவாய் மொழியில் அவர்களையே புருஷார்த்த ரூபமான பாகவதர்களாயும், பேசி அனுபவிக்கிறார். ''பயிலும் சுடரொளி'' (மூன்றாம் பத்து 7-ஆம் திருவாய்மொழி)யில், கண்ணனை உள்ளத்துக் கொள்ளுமவரைத் தம்மைச் சலிப்பின்றி யாண்டு சன்ம சன்மாந்தரம் காக்கும் தனிமக்களாய்ப் புகழ்ந்து, அவர்களுடைய உபாயத்வத்தைக் காட்டுகிறார். ''நெடுமாற்கு அடிமை'' (எட்டாம் பத்து, பத்தாம் திருவாய் மொழி) யில் தனிமாத் தெய்வத் தளிரடிக் கீழ்ப் புகுதலின்றி அவனடியார் நனிமாக் கலவியின்பமே நாளும் வாய்க்க நங்கட்கே, என்று தமது இஷ்டத்தை வெளியிட்டு, பாகவதோத்தமர்களுடைய கடாட்சம் முக்தியாகிற ஒரு மகோற்சவ தினத்திற்கு நல்விடிவாயும் நற்பகலாயும் நிற்பது என்று விளக்குகின்றார். இந்த அம்சத்தை மதுரகவிகள் நன்கு துலக்கியுள்ளார். ''பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்ளும்'' ஆசாரிய சிரேட்டரான நம்மாழ்வாரே ''அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்'' என்றும், ''தேவு மற்றறியேன்'' என்றும் சொல்ல வல்ல சடகோப நம்பியாயுமுள்ளார் என்று, உபாயத்வ உபேயத்வ சுவரூபங்கள் இரண்டிலும் வைத்து அநுபவிக்கிறார்.

இப்படித் தமது உபதேசத்தாலும், அநுஷ்டானத்தாலும் திருமால் அடியார்கள் மிக்க உயர்வாக மதித்திருக்கும் பாகவத பாரதந்திரியத்தை நிலைகொள்ளச் செய்த, மதுரகவிகள் பெருமை சொற் கடந்தது. பகவத் விஷயமாய்ப் பாடிய ஆழ்வார்களுக்கெல்லாம் அளிக்கப் படாத 'மதுரகவி' என்னும் பட்டம், பாகவத சம்பந்தத்தைப் பெரிதும் புகழ்ந்த இவ்வாழ்வார் ஒருவருக்குமே அளிக்கப்பட்டது என்றால், ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் உத்தமக் கொள்கைகளும், இவ்வாழ்வாரின் மகிமையும் ஒருவாறு உணரப்படலாம். ஏனைய ஆழ்வார்கள் அனைவருக்குமாக ஒரு பாசுரம் ''பொய்கை முனி பூதத்தார்'' என்று தொடங்கிப் பாடிய வேதாந்த தேசிகர், மதுரகவிகளுக்குத் தனித்தொரு பாசுரம் ''இன்பத்தில்'' என்று தொடங்கி அருளிச் செய்திருக்கிறார். இது வைஷ்ணவ சித்தாந்தத்தை முற்றும் உணர்ந்த ஆசாரிய சிரேஷ்டர் கற்பிக்கும் முறை. மற்றைய ஆழ்வார்கள் அருளிய பிரபந்தங்களுடைய பயிற்சியால் தெளியாத மறைநிலங்கள் தெளிந்த பின்னர், எல்லா வகையாலும் பகவத் அனுபவத்திற்குப் பின்வாங்காது அதை அதிசயிக்கும் பாகவத பாரதந்திரியமே வடிவெடுத்து வந்தது போன்ற ''துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே'', ''அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு'' எம்பெருமான் இணையடியை எளிதில் எய்தியதால்தான், மதுரகவிகள் மூதரிய மாஞானியாகிறார்.

## (95) எளிதோ? உனது செல்வம்! அம்மே:

கலைகளை விட்டு நீங்கி, வட்டங் கொண்டிருக்கும் சந்திரன், மரகதச் செப்புப்போல விளங்குகின்றான். அவனது பதினாறு கலைகளும், அதன் நடுவே இருக்கின்ற களங்கமும், முறையே மிக்க வெண்மை நிறம் உடைய கருப்பூரத் துண்டத்துடன், கத்தூரியும் கலந்திருப்பது போல விளங்குகின்றது. சந்திரனிடத்தில் தேய்கின்ற கலைகள் பின்பு வளரும் தன்மை, அம்பிகை பாக்கும் வெற்றிலையும் அருந்த அருந்த, அவைகள் குறையுந்தோறும் கருப்பூரத்தையும் கத்தூரியையும், நான்முகன் கொண்டு வந்து நிரப்புதலைப் போல உள்ளது. இங்ஙனமாயின் அம்பிகையின், செல்வச் சிறப்பும் செழிப்பும் எளியனவாகுமோ?

> தூயமதி மரகதச் செப்பு ஒளிர்கலையும்,
> களங்கமும்நேர் சொல்லும் காலைக்,
> காயும் அதிதவள கருப்பூர சகலத்
> தொடு, கத்தூரி போலும்;
> நீ அருந்த அருந்த அவைகுறைதொறும்,
> அவ்விரண்டும் அயன் நிறைத்தல் போலும்!
> தேயும்அது வளரும்அது திங்கள்!
> எளிதோ உனது செல்வம்? அம்மே!

இச்செய்யுள் அம்பிகையின் செல்வச் சிறப்பைப் புகழ்ந்து போற்றுகின்றது. சந்திரன் கருப்பூரத் துண்டம் போலவும், அதன்பால் உள்ள களங்கம் கத்தூரி போலவும் விளங்குகின்றது என்பது கருத்து. கருப்பூரம் வெண்மை நிறம் உடையதும், கத்தூரி கருநிறம் உடையதும் ஆதல் பற்றி, அவற்றை முறையே சந்திரனுக்கும், களங்கத்திற்கும் ஒப்புமைப்படுத்திக் கூறினர். செல்வர்கள் நுகரும் நுகர்ச்சிப் பொருள்களை, அவைகள் குறையுந்தொறும், அவர்தம் ஏவலர்கள் நிரப்பிக் கொண்டே இருப்பர். சந்திரனின் கலைகளும் களங்கமும் முறையே குறைந்தும் நிறைந்தும் வருதல், அம்பிகை வெற்றிலை பாக்கு அருந்துங்கால் குறைந்து வரும் கருப்பூரம் கத்தூரி என்பனவற்றை, அம்பிகையின் ஏவலனாகிய நான்முகன் மீண்டும் மீண்டும் கொண்டு வந்து நிரப்புதல் போல உள்ளது என்று, ஆசிரியர் தற்குறிப்பேற்றமாகக் குறிப்பிட்டார். எளிதோ? என்னும் வினா ஓகாரம் எதிர்மறை; எளிதன்று என்பது கருத்து. இச் செய்யுளில் பலவயிற் போலி உவமை என்னும் அணியும், உதாத்தம் என்னும் வீறுகோள் அணியும் அமைந்துள்ளன.

## (96) யாவர் உனைக் கண்டு எய்துவர்:

தேவியின் இல்லம், சிவபெருமான் உறைகின்ற அந்தப்புரமாகத் திகழ்கின்றது. மகளிர் வாழும் அந்தப்புரத்தில் அவர்தம் கணவர் மட்டுமே செல்லுதற்குரியர். ஆதலின் சிவபெருமான் உறையும் அம்பிகையின் அந்தப்புரத்தை, எவரும் அணுகிக் காண்டல் அரிது. எனவே முனிவரும் தேவரும் முதலானோர், அம்பிகையைக் காணவேண்டுமென்று விருப்பம் கொண்டு, அம்பிகையின் இல்லத்து வாயிலில் நெடுங்காலம் காத்திருந்து இளைக்கின்றனர். நெடுங்காலம் காத்திருந்தும் அம்பிகையைக் காண இயலாமையால், அவளது வாயிலில் காவல் புரிந்து கொண்டிருக்கும் அணிமா முதலிய சித்திகளுக்குரிய தேவதைகளால், தத்தம் மனத்திற் கருதிய சித்திகளை மட்டும் பெற்றுக் கொண்டு, அவர்கள் மீண்டும் செல்கின்றனர்.

> தேவி! உன் இல்லம் சிவன்உறை
> அந்தப்புரம் ஆனால்,
> யாவர்உனைக் கண்டு எய்துவர்?
> இமையோர் முதலானோர்,
> ஆவல்கொடு எய்த்து, உன் வாயிலில்
> அணிமாதிக ளாலே
> மேவிய சித்திப் பேறொடு
> மீள்வார் ஆனாரே!

சிவம் சக்தியைப் பிரியாமல், அதனுடன் கலந்திருந்து உறைந்து வருதல் பற்றி, ''தேவி! உன் இல்லம் சிவன் உறை அந்தப்புரம்'' என்றார். அம்பிகையை எளிதில் எவரும் காண்டல் இயலாது என்பார், ''யாவர் உனைக் கண்டு எய்துவர்?'' என்றார். தேவியைக் காண்டல் இயலாவிடினும், காண்பதற்குரிய ஆவலும் முயற்சியும் மேற்கொள்ளுதல் கடமை என்பார், ''இமையோர் முதலானோர் ஆவல்கொடு எய்த்து'' என்றார். கொடு—கொண்டு; இடைக்குறை. ஆவல் — விருப்பம். எய்த்து — இளைத்து, வருந்தி. அம்பிகையை அன்புடன் வழிபடுவோர், ''எண்ணிலியாகிய சித்திகள் வந்து எனை எய்துவதாகாதே'' என மணிவாசகர் பாடுதல்போல, பெறுதற்கரிய சித்திகளையெல்லாம் எளிதில் எய்தப் பெறுவர். சித்திகளுக்குரிய தேவதைகள், அம்பிகையின் வாயிலில் ஏவல் பூண்டு காவல் புரிந்து நிற்கும் என்பார் ''உன் வாயிலில் அணிமாதிகளாலே மேவிய சித்திப் பேறொடு, மீள்வார் ஆனாரே'' என்றார். பேறு—பெறுதல். சித்திப்பேறு—சித்திகளைப் பெறுதல். மீள்தல்—திரும்புதல். தேவர்களும் அம்பிகையைக் காணாது திரும்புவர் என்பது, யான் உன்னைக் காண்பதற்கு எத்தகைய பெருந்தவம் செய்தேன் என்னும் வியப்பியல் விம்மிதக் குறிப்பைப் புலப்படுத்தும். இச்செய்யுளில் உதாத்தம் என்னும் அணியும், கருத்தா ஏது என்னும் அணியும் அமைந்துள்ளன. இந்த இரண்டு செய்யுள்களும் அம்பிகையின் செல்வச் சிறப்பைப் புகழ்ந்தன.

## (97) இறையொடு நின்னைப் பணிவோம்:

அம்பிகை, மயன் என்னும் தெய்வத் தச்சன் செய்யும் பாவையைப் போன்ற பேரழகுடையவள். அயன் அரி அரன் மகேசுவரன் என்னும் நால்வரும், கட்டிலினுடைய நான்கு முடிகளால் தாங்கப்படும் மஞ்சத்தின் வடிவாகத் திகழ்கின்றனர். அம் மஞ்சத்தின்மீது அமர்ந்துள்ள சதாசிவரின் படிக நிறம்போன்ற ஒளி, அதற்குத் திரையாகத் திகழ்கின்றது. அத்திரையின்மேல் அம்பிகையின் சிவந்த நிறம் பதிந்து பாய்ந்த நிழல், சதாசிவரும் தேவியுமாகிய இருவரும் அனுபவிக்கும் இன்பத்தின் வடிவமாக விளங்குகின்றது. இவ்வாறு மனத்




—(முற்றொடர்ச்சி)

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## (90) அற்புத நடைத்தொழில் :

அம்பிகை மடஅன்னம் போன்ற நடையை உடையவள். அந்நடையின் அழகு, காண்போர்க்கெல்லாம் அதிசயத்தை விளைவிக்கும். அம்பிகையின் நடையழகைக் கண்டு வியந்து, இள அன்னங்களும் அதன் இலக்கணத்தைக் கற்க விழையும். அவ் அன்னங்களுக்கு, அம்பிகையினது நடையின் பேதத்தை இப்படி என்று விளக்கிக் கூறுவது போல, தோடு அவிழ்ந்த மலர்போன்ற அம்பிகையின் பாதங்கள், பொன்னாலும் மணியாலும் செய்த தமது பரிபுரத்தினுடைய ஓசையினால் விளக்கும். அவ்வாறு அன்னங்களுக்கு அம்பிகையின் நடையழகையும் இலக்கணத்தையும் உறுதிப்பட அதிர்த்து எடுத்துச் சொல்லும் சொற்களே, அம்பிகையின் பரிபுர ஓசை போலும்.

நாடிஉனது அற்புத நடைத்தொழில் படிக்கும்
பேடைமட அன்னமொடு பேதநடை கூறும்
ஆடக மணிப்பரி புரத்து அரவம், அம்மே!
ஏடவிழ் மலர்ப்பதம் இரைக்கும்மறை போலும்!

அம்பிகையின் நடையழகை வியந்து ''அற்புத நடைத்தொழில்'' என்றார். மகளிரின் நடையை அன்னநடைக்கு ஒப்பிடுதல் கவிதை மரபு. ஆனால் இங்கே அன்னங்கள் அம்பிகையின் நடையழகைப் படித்துப் பயின்று பழகிக் கொள்ளுகின்றன என்னும் குறிப்பில், ''நாடி உனது அற்புத நடைத்தொழில் படிக்கும்பேடை மட அன்னம்'' என்றார். பேடை அன்னம் — பெண் அன்னம் ; மட அன்னம்—இளமை வாய்ந்த அன்னம். ஆடகம்—பொன். மணி—மாணிக்கம். பரிபுரம்—சிலம்பு. சிலம்புகள் இயல்பாக ஒலிக்கவும், அதனை அவைகள் அன்னங்களுக்கு அம்பிகையின் அற்புத நடைத்தொழிலின் பேத நடையைக் கூறும் என்றது, தற்குறிப்பேற்றம். அம்பிகையின் திருவடிகளை ''ஏடவிழ் மலர்ப்பதம்'' என்றும், அவளது பாதச் சிலம்புகளை ''ஆடக மணிப் பரிபுரம்'' என்றும் புகழ்ந்தார். ''இரைக்கும் அறை'' என்பது, உறுதிப்பட அதிர்த்துச் சொல்லும் சொல். இதனை ''இரைக்கும் மறை'' எனப் பிரித்தும் பொருள் கொள்ளுதல் கூடும். மறை—வேதங்கள். அம்பிகையின் கால்களில் வேதங்களே பரிபுரம் என்னும் சிலம்புகளாக உள்ளன என்பர் பெரியோர். அம்பிகையின் நடையழகை ''மாதர் மடப் பிடியும் மடஅன்னமும் அன்னதோர் நடையுடை மலைமகள்'' எனத் திருஞானசம்பந்தரும் விதந்து புகழ்ந்திருத்தல் இங்கு நினைந்து இன்புறத்தகும். இச்செய்யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

## (91) வெய்யோனும் மதியும் :

அம்பிகை மயில் போன்ற சாயல் உடையவள். அவளுடைய பாதங்கள் மலர் போன்றவை. அப்பாதத்தின் சிவந்த ஒளிக்குச் சூரியனும் நாணி அஞ்சுகின்றான். அதனால் அவன் அம்பிகையின் வடிவத்தினது சிவப்பு நிறத்தைப் பெற்று, அம்பிகை தன்னுடைய வடிவத்தைச் சரிபார்த்து அழகு செய்து கொள்வதற்கு ஓர் கண்ணாடியின் வடிவாகின்றான். அம்பிகையின் பாதங்கள் அன்பர்களுக்கு வேண்டுவன எல்லாம் அளிக்கும் சிறப்புடையவை. அச்சிறப்பிற்கு நாணி அஞ்சி மோகத்தையுடைய சந்திரன் தானும், அக்கண்ணாடியின் வடிவாகி நிற்கின்றான். அப்போது அதன்கண், அம்பிகையின் முகமாகிய தாமரை நிழலிடுகின்றது. அங்ஙனம் நிழலிடும் அம்பிகையின் முகமாகிய தாமரையைச் சந்திரன் என் இதயமாகிய தாமரை என்று சொல்லி மகிழ்கின்றான்.

தோகை! நின் மலர்ப்பதச் சுடர்க்குஉடையும்
வெய்யோன்
ஆகம் அணி செய்வதுஓர் கணடி வடிவாகும்;
மோகமதி தானும் அது வாகி, உன் முகம்சேர்
கோகனதம் என்இதய கோகனதம் என்னும் !

சிவந்த ஒளியுடைமையால் சூரியனும், உலகுயிர்களுக்கு அமுத தாரைகள் வழங்கும் கொடைச் சிறப்பினால் சந்திரனும், உயர்ச்சி உடையவராவர். அத்தகைய உயர்ச்சி உடையோரும், அம்பிகையின் முன்னர்த் தம் உயர்ச்சி குன்றி நிற்க, அம்பிகையின் சிறப்பே மேலோங்கி நிற்கின்றது என்பது இப்பாடலின் கருத்து. ஒளியின் மிகுதியால் உயர்ந்த சூரியனும், அம்பிகையின் திருவடிப் பேரொளிக்கு முன் நிற்கலாற்றாது அஞ்சித் தோற்கின்றான் என்பது ''தோகை! நின் மலர்ப்பதச் சுடர்க்கு உடையும் வெய்யோன்'' என்பதனால் குறிக்கப்பெற்றது. தோகை—மயில். சுடர்—ஒளி. உடைதல்—அஞ்சித் தோற்றல். வெய்யோன்—சூரியன். தோற்றவர்கள் வென்றோர்க்குப் பணிவிடை

தால் பாவித்து, அம்பிகையை அவளுடன் பிரியாது ஒன்றித்து உடனிருக்கும் சதாசிவருடன் யாம் என்றும் போற்றிப் பணிவோம்.

மூவர் மகேசன் முடிகொளும்
மஞ்சத்து எழிலாயும்,
மேவிய படிகத் தனதுஒளி
வெளிசூழ் திரையாயும்,
ஒவறு செங்கேழ் விம்பமது
இன்பத்து உருவாயும்,
பாவைநின் அகலா இறையொடு
நின்னைப் பணிவோமே!

அம்பிகையின் பேரழகு கருதி, அவளைப் "பாவை" எனப் புகழ்ந்தார். மஞ்சம்—கட்டிலின்மீது அமைந்த படுக்கை. அம்பிகையினது கட்டிலின் நான்கு முடிகள் கொண்ட மஞ்சமாக, அயன் அரி அரன் மகேசுவரன் என்னும் நால்வரும் அமைந்து விளங்குவர் என்பார், "மூவர், மகேசன் முடிகொளும் மஞ்சத்து எழில்" என்றார். கட்டிலின் மஞ்சத்தைச் சுற்றி வெண்மையான திரைவிடப் பெறுதல் இயல்பு. அதற்கு ஏற்ப அமைந்த வெண்மைத் திரையாகச் சதாசிவரின் படிக நிறம் போலும் ஒளி விளங்கியது என்பார். "மேவிய படிகத் தனது ஒளி வெளி சூழ் திரையாய்" என்றார். படிகம்—பளிங்கு, கண்ணடி. 'தனது ஒளி' என்றது சதாசிவரின் திருமேனி ஒளியை. அநுக்கிரகம் என்னும் அருள்புரிதற் றொழிலுக்கு உரிய சதாசிவமூர்த்தி, படிகம் போன்ற வெண்ணிறம் உடையவர் என்று நூல்கள் கூறும். ஆதலின் அவரது படிக நிற ஒளியை, வெண்மை நிறத் திரையாக உருவகம் செய்தது, மிக்க பொருத்தம் ஆகும். வெண்ணிறத்தின் மீது ஏனைய பன்னிறங்களும் எளிது இனிது பதிந்து விளங்கும். ஆதலின், சதாசிவரின் வெண்மை நிறமாகிய திரையின்மேல், தேவியினது சிவப்பு நிறம் நிழலிட்டு, அவ்விருவரும் இணைந்து இயைந்து நுகர்ந்த இன்பத் திறனை உணர்த்துவதாயிற்று என்பார் "ஒ அறு செழ்கேழ் விம்பமது இன்பத்து உருவாய்" என்றார். ஒஅறு—ஒழிவு அற்ற, நீங்குதல் இல்லாத. செங்கேழ்—சிவந்த நிறம். விம்பம்—பிம்பம், பிரதிபலிப்பு, நிழல். இன்பத்தின் நிறம் சிவப்பாதலால், சிவப்பு நிறம் சிவமும் சக்தியும் சேர்ந்து நுகர்ந்த இன்பச் சிறப்பை உணர்த்துவதாகக் குறிப்பிட்டார். சக்தியும் சிவமும் என்றும் பிரியாமல் சேர்ந்தே இருக்கும் என்பார் "நின் அகலா இறை" என்றார். இறை—சிவம். "அகலகில்லேன் இறையும் என்றே அலர்மேல் மங்கை உறைமார்பா" எனவரும் திருவாய்மொழிச் செய்யுட் பகுதியும், இங்கு நினைத்து இன்புறற்பாலது. சத்தியையும் சிவத்தையும் தனித் தனியே வழிபடாமல், இருவரையும் ஒருங்கிணைத்துப் பணிதலே முறைமையாதலின், "நின் அகலா இறையொடு நின்னைப் பணிவோம்" என்றார். இச்செய்யுள் நாள்தொறும் நினைத்து வழிபடுங்கால், அம்பிகையை எங்ஙனம் நினைத்து வழிபடுதல் வேண்டுமென்று விளக்கி, அம்முறையை உணர்த்தியது.

## (98) நின்முதல்வர் அல்லதில்லை :

அம்பிகை மலையரையனுக்கு மகளாகத் தோன்றியவள். அவளுக்குப் பிறர்க்கு இல்லாத பெருஞ் சிறப்புகள் பல உண்டு. கலைமகள் கல்விக்குரிய எல்லாரிடத்திலும் இருப்பாள். அங்ஙனமே திருமகளும் செல்வத்துக்குரிய எல்லாரிடத்தும் இருப்பாள். எனவே கலைமகளும் திருமகளுமாகிய இருவரும், ஒரு வகையிற் பொது மகள் போன்று இழிந்தவரே யாவர். அம்பிகை அத்தகையவளல்லள், மிகச் சிறந்த குலமகள். சோலைகளில் இருக்கும் குரவ மரங்களை மகளிர் தழுவி அணைத்து மகிழ்வர். மகளிர் தழுவுதலால், குரவ மரங்கள் மகிழ்ந்து மலரும் என நூல்கள் கூறும். மகளிர்க்குரிய இவ்வியல்பான முறையிற்கூட, அம்பிகை குரவ மரத்தினைத் தழுவி அணைப்பதில்லை. அங்ஙனம் குரவ மரமும் தழுவப் பெறாத அம்பிகையின் திருமுலைகள், தாம் குழையும்படி புணர்வது, அம்பிகையின் கணவராகிய சிவபெருமானின் திருமேனியைத் தவிர வேறு எதனையும் அன்று ; ஆதலின் வேதங்கள் அனைத்தும் மலைமகளாகிய அம்பிகையையே கற்புடைய குலமகள் என்று கூறிப் பெரிதும் புகழ்ந்து போற்றித் துதிக்கும்.

கலைமகளும் பொதுமடந்தை,
கமலையும் மற்று அவளே;
மலைமகள் நீ கற்புடைய
வனிதை எனப்பகரும்
குலமறைகள்; எதிர்கொடுநின்
குரவினையும் அணையா
முலைகுழையப் புணர்வது, நின்
முதல்வர்அலது, இலையால்!

இச் செய்யுள் "பெண்ணின் நல்லாள் ஆகிய பெருந்தவக் கொழுந்து" என்று போற்றப்பெறும், அம்பிகையின் கற்பு மேம்பாட்டினைப் பொற்புறப் புகழ்ந்து போற்றுகின்றது. பாதிரி முதலாகிய மரங்கள் பத்தனுள், குரவ மரம், நன் மகளிர் அணைய, மலரொடு கூடிய கிளைகள் வளைந்து நிற்கும் என்பர் ஆதலின், சிறப்புண்மை தோன்றக் "குரவினையும் அணையா முலை" என்று விதந்தார். நின் குரவினையும்—நீயே அன்புடன் வளர்த்த குரவ மரத்தினையும் கூட. அம்பிகையைக் 'கற்புடைய வனிதை நீயே' என்றதனால், அவளே உலகம் அனைத்திற்கும் தாய் என்பதும் புலப்படுத்தப் பெற்றது. குலம்—கூட்டம். குலமறைகள்—வேதக்கூட்டங்கள். சிறந்த வேதங்கள்.

## (99) மூலபரை யாமளை :

இறைவன் எல்லாவற்றிற்கும் மூலமான முதல்வன் ஆவன். ஆதலின் அவன் 'ஆதிபரன்' எனச் சிறந்தெடுத்துப் போற்றப்படுவான். அவனுடைய இயல்பும் சிறப்பும் நம் அறிவிற்கு எட்டாமல் அப்பாற்பட்டவை. அத்தகைய ஆதிபரனின் அருளாற்றல் ஆகிய சக்தி 'ஆதிபராசக்தி' என்றும், 'யாமளை' என்றும் போற்றப்பெறும். ஆதிபரா சக்தியும் யாமளையும் ஆகிய அம்பிகையின் மாயையினால், வேதங்களைக் கற்று வல்லவர்கள், அயனுடைய நாவில் கலைமகள் என்றும், திருமாலின் மார்பில் திருமகள் என்றும், சிவபிரானின் இடப்பாகத்தில் உமாதேவியார் என்றும், அம்பிகை விளங்குவதாகச் சொல்லுவர்.

வேதியர்கள் அயன்நாவில்
விஞ்சைமகள் என்றும்,
சீதரன்றன் மணிமார்பில்
செழுங்கமலை என்றும்,
நாதர்இடத்து அரிவை என்றும்
நாட்டுவர்; எண் அடங்கா
ஆதிபரன் மூலபரை
யாமளை! உன் மயக்கால்!

கலைமகள் திருமகள் மலைமகள் ஆகிய மூவருமே, அம்பிகையின் கூறுகளாவர் என்பது இப்பாடலின் கருத்து. விஞ்சை மகள் — கலைமகள். விஞ்சை—வித்தை, கல்வி. சீதரன் —திருமகளை மார்பில் தரித்திருப்பவன், சீநிவாசன். சி—ஸ்ரீ, திருமகள். தரன்—தரித்திருப்பவன். கமலை—திருமகள், இலக்குமி. நாதர்—சிவபெருமான், உருத்திரன். 'அரிவை' என்னும் பொதுச் சொல், ஈண்டுக் குறிப்பினால் மலைமகளை உணர்த்திற்று. ''ஆதிபரன்'' என்று சிவபெருமானையும், ''மூலபரை'', ''யாமளை'' என்று அம்பிகையையும் போற்றிப் பாராட்டினார். ''உன் மயக்கால் நாட்டுவர்'' எனவே, அம்மயக்கம் நீங்கி ஆராய்ந்து தெளிவாராயின், உன்னையன்றி வேறு ஒருவரும் இல்லை என்பார் என்பது உணர்த்தப் பெற்றது. இச்செய்யுள் சக்தி வடிவங்கள் எல்லாம் தேவியின் வடிவே என்பதனை வற்புறுத்தியது.

## (100) இம்மேனி தம்மேனி :

அம்பிகை எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகின்றாள். அவளது திருமேனியில் இருந்தே அணிமா முதலிய சித்திகள் வெளிப்படுகின்றன. சித்திகள் பலவும் வெளிப்பட்டுத் தொழுது நிற்க, எக்காலமும் அழிவற்று இலங்கும் சிறப்புடையது, அம்பிகையின் திருமேனி. அதனைத் தம்முடைய மேனி எனத் தெளியும் தெளிவு பெற்று மனத்தால் பாவித்துத் தியானிப்பவர்கள், எக்காலத்தும் அழிவின்றி நிலைபெற்று விளங்குவார்கள். அவர்கள் சிறந்த மேனியையுடைய உருத்திரனின் வாழ்வும் பதவியும்கூட, பேரூழிக் காலத்தில் சிதைந்து அழியும் தகையன என்று தெளிந்து, அதனையும் ஒரு பொருட்படுத்த மாட்டார்கள். பேரூழி நெருப்பும் அவர்களின் முன்னே வந்து தீபமாக நின்று உதவி புரியும்.

அம்மே! நின் மெய்ப்பிரிவாம்
அணிமாதி தொழும் அழியா
இம்மேனி, தம் மேனி
எனத் தெளிந்து பாவிப்பார்,
செம்மேனி அரன்வாழ்வும்
சிதைவது எனப் புறக்கணித்து,
வெம்மேனி ஊழிஅனல்
தீபம் இட விளங்குவார்

அம்பிகையின் திருமேனிச்சிறப்பை உணர்த்துவார் ''நின் மெய்ப்பிரிவாம் அணிமாதி தொழும் அழியா இம்மேனி'' என்றார். அம்பிகையை யோக பாவனையால் தியானித்து வழிபடுவோரின் இயல்பு இஃது என்பார், ''இம்மேனி தம்மேனி எனத் தெளிந்து பாவிப்பார்'' என்றார். அத்தகைய யோக பாவனையாளர்களின் பெருமாட்சிமை இஃது என்பார், ''செம்மேனி அரன்வாழ்வும், சிதைவது எனப் புறக்கணிப்பார்'' என்றும், ''வெம்மேனி ஊழி அனல் தீபமிட விளங்குவார்'' என்றும், சிறப்பித்துக் குறிப்பிட்டார். ''அரன்வாழ்வும்'' என்பதில் உம்மை சிறப்பு. 'அரன்' என்னும் சொல் இங்கு உருத்திரனைக் குறித்தது. சிதைவது—அழிவது. புறக்கணித்தல்—தாழ்வாகக் கருதி விலக்குதல். ஊழி—பிரளயம். அனல் —நெருப்பு. தீபம்—விளக்கு. அம்பிகையை வழிபடுவோர் ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைபெற்றுய்வார் என்பது ''வெம்மேனி ஊழி அனல், தீப இட விளங்குவார்'' என்பதனால் உணர்த்தப்பெற்றது.

## (100) தாமாக உனை நினைவோர் தவம்:

பெறுதற்கரிய அரும்பொருளாகத் திகழ்பவள் அம்பிகை. அவளைத் தாமாக நினைத்து வழிபடுதல் ஒரு பெருந்தவம். அத்தவம் செய்து முற்றுப் பெற்றவர், சாரூபம் என்னும் முத்தி எய்தி, அம்பிகையின் வடிவமே தம்முடைய வடிவமாக ஆகப் பெறுவர். அதனால் அம்பிகையின் பெண் வடிவம் பெற்ற அவர்கள், தம்முடைய தனங்கள் முதிரப்பெறுவர். அம்பிகையைப் போன்று மிக்க மோகம் விளைவிக்கும் புன்முறுவல் உடையவராவர். அவர்தம் புன்முறுவல் சிவபெருமானுடைய மனத்தைக் கவரும். அவர்களின் கடைக்கண்களிலிருந்து காமன் முதலிய தேவர்கள் பலரும் உதிப்பர். அவர்களின் உடம்பு கடம்ப மலர் போலும் நிறமுடையதாகும். இவ்வாறு உன்னைப் போன்று உன் வடிவம் பெற்ற உன் அடியார்களை எல்லாம், சிவபெருமான் தனித் தனியே நீதானோ? என்று கருதி ஐயங் கொள்வார். அதனால் அவர்கள் அச்சிவபெருமானுக்கு ஆசையால் வரும் மயக்கத்தைக் கொடுப்பார்கள்.

தாமாக உனைநினைவோர்
தவம்இறுகத், தனம்இறுகி,
மாமோகப் புன்முறுவல்
மனம்கவரக், கடைவிழியால்
காமாதி பலர் உதிப்பக்,
கடம்பு அலர்க்கேழ் உறச், சிவன்நீ-
யாம்ஆம் என்று அயிர்ப்ப, மயல்
அளிப்பராம் அரும்பொருளே!

அம்பிகையின் அருளால் அவளது அடியார்கள், சாரூபம் ஆகிய முக்தி நிலையினைப் பெறுவர் என்பது, இச்செய்யுளில் கூறப்பெறுகின்றது. ''தாமாக உனை நினைவோர்'' என்று, யோக பாவனையில் அம்பிகையை வழிபடுவோரின் இயல்பு கூறப்பெற்றது. யோக நெறியில் வழிபடுவோர் சாரூப முக்தி பெறுவராதலின், அவர்கள் அம்பிகையைப் போன்ற வடிவமும் செயலும் உடையவராவர் என்பார் ''தவம் இறுகத் தனம் இறுகி, முறுவல் மனம் கவர, கடை விழியால் காமாதி பலர் உதிப்ப, கடம்பு அலர்க் கேழ் உற, நீ யாம் ஆம் என்று சிவன் அயிர்ப்ப மயல் அளிப்பர்'' என்றார். தனம் இறுகி—முலைகள் முதிரப் பெற்று. மாமோகம்—மிக்கஆசைப் பெருக்கம். அலர்க் கேழ்—மலரின் நிறம். அயிர்ப்ப—சந்தேகிக்க. இவ்விரு செய்யுட்களும் அம்பிகையை யோக நெறியால் தியானிப்பவர்கள் அடையும் நலங்களை உணர்த்தின.

''ஓ! என் உழுவலன்பர், உள்ளன்புடைய வள்ளல்; அண்ணுமலை ரெட்டியார் தந்தனுப்பினரா? கடுகளவு அறம் புரிவாரும் மலையளவு விளம்பரம் புரிகின்றார்கள்; இத்துணைச் சிறந்த பொன் முடிப்பை யனுப்பிய அவர் இரகசியமாகத் தந்தனரா?

''இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு''

என்பதற்கிணங்க இதனைப் பெறுவதே முறை'' என்று சிவப்பிரகாசர் பெற்றுக் கொண்டார்.

**குருகாணிக்கை :**

வெள்ளியம்பலவாண முனிவர், சிவப்பிரகாசரை நோக்கி, ''அப்பனே! உனக்கும் உன் இளவல்கட்கும் கல்வி நிறைந்து விட்டது. இனி நீவிர் உமது விருப்பம்போல் சென்று தமிழன்னைக்குப் பணிபுரிக'' என்று கூறி விடை தந்தனர்.

சிவப்பிரகாசர் அண்ணுமலை ரெட்டியார் அனுப்பிய 300 பொன் அடங்கிய பொன்முடிப்பைக் குருநாதன் திருவடியில் வைத்து, ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். அன்ப இது என் தகுதிக்கேற்ற காணிக்கையன்று. நான், பொன் மண், பெண் என்ற மூவாசைகளையுந் துறந்தவன். ஆகவே, நீ எனக்குத் தரும் காணிக்கை யாது என்றால், திருச்செந்தூரில் ஒரு போலிப் புலவன் நம்மை நிந்தனை புரிந்து கொண்டு திரிகின்றான். அவனை வாதில் வென்று அடக்குவதையே நான் உன்பால் பெறும் காணிக்கையாக விரும்புகின்றேன் என்றார்.

உடனே அவருடைய அடிமலர்மீது வணங்கினார். சுவாமீ! திருவருளாகிய வில்லில்: குருவருளாகிய அம்பை எய்து, அவனை அடக்கி வருவேன்'' என்று கூறிப் புறப்பட்டார் சிவப்பிரகாசர்.

**சொற்போர் :**

சிவப்பிரகாசர் தன் துணைவர்களுடன் திருச்சீரலைவாய் என்னுந் திருத்தலத்தையடைந்தார். கருங் கடற்கரையில் அருட்பெருங் கடலாயெழுந்தருளியுள்ள கந்தனைக் கண்குளிரக் கண்டார். பலமுறை பணிந்தார். துதித்தார். பின்னர் தருக்குள்ள அப்புலவனைச் சந்தித்தார். அவனுடைய அடங்காமையைச் சிந்தித்தார். சிந்தித்தார். நீர் யார்? என்றான் புலவன். அடியேன் தமிழ்க்கடல், வெள்ளியம்பல முனிவருடைய திருவடித்தொழும்பன் என்றார் சிவப்பிரகாசர். வெள்ளியம்பலவாணர், என்ற உடனே அப்புலவன் வெகுண்டான். பொருமைக்கனல் பொங்கியது.

இருவருக்கும் திருச்செந்தூரில் சிறப்புடன் விளங்கும் திரிசுதந்தரர்கள்(முக்காணியர்)உள்ள திருச்சபையில் சொற்போர் தொடங்கியது. அறிவு நலமுடைய திரிசுதந்தரரில் ஒருவர் ''நீவிர் சற்று நில்லுங்கள். உங்களுக்கு உள்ளம் ஒட்டவில்லை. ஆதலால் உதடு ஒட்டாமல் பாடுகின்ற நிரோட்டயமக அந்தாதி பாடுங்கள். 30 பாடல்கள் பாட வேண்டும். யார் முதலில் பாடி முடிக்கின்றார்களோ அவர் வென்றவர், பிந்தியவர் தோற்றவர். தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாக வேண்டும்'' என்றனர்.

இருவரும் இதற்கு இசைந்து பாடத் தொடங்கினார்கள். இரண்டு இதழ்களும், ஒன்றோடு ஒன்று பொருந்தாமலும், யமகமாகவும், அந்தாதித் தொடையாகவும் பாடுவது அப்பிரபந்த விதி. இதழகல் யமகவந்தாதி என்றுங் கூறுவர். பாடலில் இதழ் குவியக் கூடாது; ஊ, ஒ, ப, ம, வ, இந்த எழுத்துக்கள் வரக் கூடாது. உடனே சிவப்பிரகாசர் திருவருளை வழுத்தினார். பாடத்தொடங்கினார். அவருடைய திருவாக்கிலிருந்து புற்றீசல்போல ஒன்றன்பின் ஒன்றாகப் பாடல்கள் வந்து கொண்டேயிருந்தன. முப்பதையும் தடையின்றி விரைந்து பாடிவிட்டார்.

போலிப் புலவன் ஒரு பாடல்கூடப் பாட முடியாமல் விழித்தான். திகைத்தான். நாணினான். அவருடைய அருட்புலமையைக் கண்டு அதிசயித்தான். ''தோற்றேன்; உமது அடிமை'' என்றுகூறி, அடிமலர்மீது வீழ்ந்து அஞ்சலி செய்தான்.

சுவாமிகள், ''ஐயா! நான் வெள்ளியம்பல முனிவர் பெருமானுடைய அடிமை. நீ எனக்கு அடிமையாவது பொருந்தாது; எனது குருமூர்த்திக்கு அடிமையாவதே தக்கது'' என்றுகூறி, அவனை அழைத்துக்கொண்டு, சிந்துபூந்துறை சென்று, குருநாதர் திருவடிகளில் பணிந்தார். அப்போலிப் புலவன் வெள்ளியம்பல முனிவருடைய சீலத்தையும், கோலத்தையும்கண்டு, தருக்கடங்கி ''அடியேனை ஆட்கொள்ள வேண்டும்'' என்றுகூறிப் பணிந்தான்.

தனஞ்சயன், துருபதனைத் தேர்க்காலில் கட்டிக் கொணர்ந்து துரோணருக்குக் குருகாணிக்கை தந்ததுபோல் இருந்தது அக்காட்சி. தம்பிரான் மிகுந்த மகிழ்ச்சியுற்றார். தனது சீடருடைய திறத்தை நினைந்து உள்ளம் உவந்தார்.

புலவனை நோக்கி, ''அன்ப! சென்றதைக் கருதக்கூடாது. கற்றாரைக் கற்றார் காமுற்று, நற்றாமரைக் குளத்தில் நல்லன்னம்போல் நலமுற்று மருவி வாழ்தல்வேண்டும். நாம் அனைவரும் தமிழன்னையின் தனயர்கள். நம்மில் வேறுபடக் கூடாது. வேற்றுமையால் கொடிய வேதனையே வளரும். ஒற்றுமையால் உயர்வும் உவகையும் உண்டாகும். கற்பதும் கேட்பதும், மனம் அடங்குவதற்குத்தான். மனம் அடங்கிய இடத்தில், சினம் அடங்கும். பரம்பொருளை நினைத்து, இந்த மனித வாழ்வைப் புனித வாழ்வாகச் செய்து இனிது வாழ்வாய்'' என்று அறவுரை கூறியருளினர்.

**வேறு நூல்கள் :**

குருநாதனிடம் விடைபெற்றுப் பிரிய மனம் இன்றிச் சிவப்பிரகாசர் தனது தம்பியர்களுடன் புறப்பட்டார். இடையில் உள்ள திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு மீளவும் துறைமங்கலம் வந்தார்.

# சிவப்பிரகாசர்

"அருள்மொழியரசு"
திரு முருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

**முன்னுரை :**

புலவர் திலகமாக விளங்கியவர் சிவப்பிரகாசர், இவருக்குக் "கவிதா சார்வபௌமர்" "கற்பனைக் களஞ்சியம்" என்ற பட்டங்கள் உண்டு. இவரைப் பாராட்டாதவர்கள் இல்லை. உலகம் புலவர்களைப் பாராட்டும். அப்புலவர்கள் இவரைப் பாராட்டுவார்கள் என்றால், இவருடைய பெருமை அளக்கற்பாலதோ? கவி பாடுவதில் நிகரில்லாதவர். ஒவ்வொரு கவியும் ஆழமும் அழகும் சுவையும் நீரோட்டமும் உடையதாய் ஒளி செய்துகொண்டிருக்கும். அம்மம்ம ! இவருடைய அறிவின் திறம் மிக விழுமியது.

தமிழுலகுக்கு இவர் புரிந்த உபகாரம் மிகவும் உயர்ந்தது. அதனை ஒருபோதும் மக்கள் மறக்கக்கூடாது. இப்புலவர் கோமானைத் தமிழ் மக்கள் மேலும் அறிந்து உவந்து நன்றி பாராட்டுங் கட்டுப்பாட்டை உண்டாக்கும் பொருட்டே இதனை எழுதுகின்றேன்.

**பிறந்த ஊர், கச்சியின் பெருமை :**

முத்தித் தலங்கள் ஏழு; காசி, அரித்துவாரம், (வட) மதுரை, துவாரகை, அவந்தி, அயோத்தி, காஞ்சி என்பனவாம். இவற்றுள் ஆறு தலங்கள் வடநாட்டிலும் ஒன்று தென்னாட்டிலும் அமைந்துள்ளது. என்ன காரணம்? ஏனைய ஆறு தலங்களுக்கு உள்ள பெருமை காஞ்சி ஒன்றுக்கேயுண்டு. தராசின் ஒரு தட்டில் ஆறு உருளைக் கிழங்குகளை வைத்து, மற்றொரு தட்டில் ஒரு உருளைக்கிழங்கை வைத்தால், அந்த ஆறு சிறு கிழங்குகட்குச் சமானம் இந்த ஒன்று என்றுதானே பொருள்.

அகில உலகங்களையும் ஈன்ற அன்னை உமாதேவியார் இறையருளை வழிபட்டு இடப்பாகம் வேண்டும் என்று கருதியபோது, எத்தனையோ உலகங்கள், எத்தனையோ நாடுகள், எத்தனையோ தலங்கள் இருப்ப, அவ்வம்மை இக் கச்சியம்பதியே, தாம் வழிபடுவதற்கு உரியது-தகுதியுடைய்து என்று துணிந்து இங்கு வந்தருளி மாவடியில் இறைவன் சேவடியை வணங்குவாராயின், இத்தலத்தின் பெருமை இத்துணைத்தென்று எம்மனோரால் இயம்புதற்கு எளிதோ?

**தந்தையார் :**

இத்தகைய திருத்தலமாகிய, எச்சித்திகளையும் தரும் கச்சியந்தலத்திலே, குமாரசாமி தேசிகர் என்பார் ஒருவர் இருந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு. இப்பெரியார் வேளாளர்கட்குத் தீட்சாகுருவாக விளங்கினர்.

திருக்கார்த்திகைத் தரிசனத்திற்காக இவர் திருவண்ணாமலைக்குச் சென்றார். அருணைக்கு அருகில் உள்ள ஈசான்ய தீர்த்தத்தில் மாலை நீராடி அநுட்டானஞ் செய்தார். பூசைப் பேடகம் பகலில் தங்கிய ஒரு நந்தவனத்தில் தங்கிவிட்டது. சீடர்கள் எடுத்து வைக்க மறந்து விட்டார்கள். அதனால் பெரிதும் வருந்தினர். உடனே தனது சீடர்களை அனுப்பிப் பேடகத்தைக் கொரணச் செய்து, மறுநாள் காலை வழிபட்டார்.

அங்கம்வேறு, லிங்கம் வேறாக இருத்தலினால் வந்த இடர் என்று கருதி, அப்பெரியார் அதுமுதல் சிவலிங்கத்தைத் திருமார்பிலேயே தரித்துக்கொண்டார். குமாரசாமி தேசிகர், கச்சியம்பதியில் சிவத்தை வழிபட்டுத் தவத்தைப் பேணி, இல்லறமாகிய நல்லறத்தில் நின்றார். இவர் செய்த பயன் கருதாத அரிய தவத்தால், அவதரித்தனர் சிவப்பிரகாசர். பேருக்கேற்ப அவர் திருமுகத்தில் சிவவொளி வீசியது. பின்னர் இரு ஆண்மக்களும் ஒரு பெண் மகவும் தோன்றின. வேலையர், கருணைப் பிரகாசர், ஞானம்பிகை என்று பேர் சூட்டினர்.

**மும்மணிகள் :**

ஒரு குடும்பத்தில் சில பிள்ளைகள் தோன்றினால், ஒவ்வொருவர் ஒவ்வொரு வண்ணமாக இருப்பதுதான் உலகியல்பு. ஒருவர் சாந்தமாக இருப்பார்; ஒருவர் படபடப்பாக இருப்பார்; ஒருவர் வீரராக நிற்பர். ஒருவர் புலவராக அமைவர். ஒருவர் தூயராக இருப்பர்; ஒருவன் பரம காலியாக இருப்பான். இப்படித்தான் எங்கும் பார்க்கின்றோம்.

குமாரசாமி தேசிகருக்கு உதித்த மூன்று பிள்ளைகளும், ஒன்றுபோலவே அமைந்திருந்தனர். மூவரும் சிறந்த தமிழ்ப் புலவர்கள்.

மூவர்களும் கவிபாடுவார்கள். மும்மணிகளாக முளைத்திருந்தார்கள். இவர்கள்பால் நற்குணங்கள் முகிழ்த்திருந்தன.

### தந்தையின் பிரிவு :

புதல்வர்கள் மூவருக்குத் தந்தை கல்வி பயிற்றினர். ஓரளவு இலக்கண இலக்கிய அறிவைப் புகட்டினர். தீட்சையுந் தந்து சிவலிங்க தாரணமுஞ் செய்தார். இவர்கள் இளமையாக இருக்கும்போதே தந்தையாரான குமாரசாமி தேசிகர் சிவபதம் அடைந்தனர். தந்தையுங் குருவுமாகிய அவர் பிரிவினல் மாலுமியை இழந்த கப்பலைப்போல் புதல்வர்கள் கலங்கி யழுதார்கள். தெய்வமே! யாங்கள் என் செய்வோம்? என்று தொழுதார்கள். மனம் மிக மறுகித் திகைத்தார்கள். சிவப்பிரகாசர் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டார். கவிபாடும் திறம் அவருக்கு அப்போதே வாய்த்திருந்தும் மேலும் கல்வி நலத்தை நன்கு பெற வேண்டும் என்ற அவா மீதூர்ந்தது. ''எங்கு செல்வோம்? யாரை யடுப்போம்? கலை நிரம்பிய தலைமையாய ஆசிரியர் யார்?'' என்று ஆராய்ந்தார்.

சைவத்தைக் காக்கும் நல்வேலியமைந்த திருநெல்வேலியின் மருங்கே, பொருநை நதிக் கரையில் சிந்துபூந்துறையில் இருந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் மிகுந்த கலைநலம் படைத்தவர் என உணர்ந்தார்.

### வெள்ளியம்பலவாணர் :

தருமையாதீனம் நான்காம் பட்டத்தில் விளங்கிய குருமகா சந்நிதானம் மாசிலாமணி தேசிக பரமாச்சாரியரிடம் சிவதீட்சை பெற்றவர் வெள்ளியம்பல முனிவர். இவர் முருகன் அருள்பெற்றவரும், கந்தர் கலிவெண்பா முதலிய பல நூல்களை உலகம் உய்யுமாறு பாடியருளியவருமான குமரகுருபரரிடம் காசியிற் சென்று கல்வி பயின்றவர். தருமையாதீன முதற்குரவர் குருஞான சம்பந்தபரமாசாரியர் அருளிய முத்தி நிச்சயம் என்ற அரிய நூலுக்கு ஒரு பேருரை எழுதினர். இவ்வாறு பல நூல்களை யாத்தும் திருப்பணி பல புரிந்தும் சொற்றுண்டும், நூற்றுண்டும் புரிந்து கொண்டிருந்தார்.

நல்ல தேனுள்ள மலரை வண்டு நெடுந் தொலைவிலிருந்து நாடிச் செல்லுமாப்போல், சிவப்பிரகாசர் நாற்பது காதத்துக்கு அப்பாலுள்ள ஒரு கலைத்தேன் பொழியும் திருமலரை நாடினர். சாலை வசதி, வாகனவசதிகள் இப்போதிருக்கின்ற வண்ணம் இல்லாத காலம் அது. அவருக்குக் கலையில் இருந்த தாகம் நெடுந்தூரத்தைப் பொருள் படுத்தாது உந்தியது.

### சோணசைல மாலை :

துணைவர்களுடன், சிவப்பிரகாசர் தென் திசை நோக்கிப் புறப்பட்டனர். தந்தையார் வழிபட்ட திருவருணையை யடைந்தார். நினைக்க முத்தியளிக்கும் புனிதமுடையது அருணசலம். ''அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவணம் அறுமே'' என்கின்றார் திருஞானசம்பந்தர். முருகப்பெருமானுடைய அருட்கடலில் முழுகிய அருணகிரிநாதர் அவதரித்த அற்புதப் புண்ணியத்தலம். அங்குச் சென்ற சிவப்பிரகாசர் சிவகங்கையில் முழுகிச் சிவபூசை செய்துவிட்டு, தம்பியருடன் அண்ணாமலையை, அன்புடன் வலம் வருவராயினர். அங்ஙனம் மலை வலம் வரும்போது சோணசைலமாலை என்ற 100 பாடல்களைக் கொண்ட ஒரு அரிய நூலைப் பாடியருளினர். சிவப்பிரகாசருக்குத் தமிழ்த் திருமொழியின் மீதிருந்த இனிய காதலை இந்த நூலில் ஒரு பாடல்மூலம் வெளியிடுகின்றார்.

விரைவிடை யிவரும் நினைப் பிறவாமை
வேண்டுநர் வேண்டுக; மதுரம்
பெருகுறுந் தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்;
இருசுடர் களும்மேல் கீழ்வரை பொருந்த
இடையுறல், மணிக்குடக் காவைத்
தரையிடை யிருத்தி நிற்றல்நேர் சோண
சைலனே கைலை நாயகனே.

### துறைமங்கலம் :

தலையன்புடைய நிலைவாணராகிய சிவப்பிரகாசர், தம்பியர் இருவரும் தொடர்ந்து வர, இயலை, இசையும், நாடகமும் தொடர்வது போல் சென்றனர். இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுமே மூன்று வடிவெடுத்துப் பொதிய மலையை நோக்கிப் பிரயாணம் புரிவது போல் இருந்தது அந்தக் காட்சி. திருநெல்வேலியை நாடிச் செல்லுகின்றபோது, விழுப்புரந் தாண்டி, திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் வழியில் பெரும்புலியூருக்கு (பெரம்பலூர்) ஆறுகல் தொலைவில் துறைமங்கலம் என்ற ஊர் உள்ளது.

இலிங்கா ரெட்டியார் என்பவர், துறைமங்கலத்துக்கும் அதனை அடுத்துள்ள ஊர்கட்கும் அதிபர். இவர் கி.பி. 1610 முதல் 1648 வரை வாழ்ந்தவர். இவருக்குப் பின் இவருடைய புதல்வர் அண்ணாமலை ரெட்டியார் பட்டத்துக்கு வந்தார். வெள்ளாற்றுக்கு அருகில் உள்ள முப்பது வட்டங்களை அரசு புரிந்து வந்தார். ஒழுக்கத்தை உயிரினும் உயர்ந்ததென ஓம்பும் உயர்வுடையவர். வீரசைவ மரபினர், குருலிங்க சங்கம பக்தி பூண்டவர்; பாவலரைப் போற்றுங் காவலர்; செந்தமிழ்ப் பற்றுடையவர். மாட்சிமை மிகுந்த ஆட்சியினர்.

துறைமங்கலத்துக்கு அருகில் ஒரு சோலையில், சிவப்பிரகாசர் தங்கி, சிவபூசை செய்துகொண்டிருந்தார். இவருடைய வரவையறிந்த அண்ணாமலை ரெட்டியார், பரிசனங்கள் புடைசூழ வந்து, எட்டுறுப்புக்களும் நலமுறவும், ஆன்மா நலமுறவும் வீழ்ந்து பணிந்தார். அவருடைய பெருமையையும், கல்வியின் அருமையையும் கண்டு, அவர்பால் மிகவும் அன்புடையராகி நின்றார்.

அண்ணாமலைரெட்டியார், அவர்களை அன்புடன் வரவேற்று இனிய உபசாரம் புரிந்தார்; அங்குச் சிலகாலம் தங்கியிருந்தார். ரெட்டியாருடைய வேண்டுகோளுக்கு இணங்கி அவருடைய ஆட்சியில் அமைந்து அருகில் விளங்கும் வாலிகண்டபுரத்தின் வடமேற்றிசையில் உள்ள திருவெங்கையிலே, சிலகாலந் தங்கியிருந்தார். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள பழமலைநாதர் மீது திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கை யலங்காரம் என்னும் நான்கு நூல்களை இயற்றினார்.

**தம்பியர் திருமணம் :**

அண்ணாமலை ரெட்டியார் அடிகளாரை நோக்கித் ''திருமணம் புரிந்து இல்லறத்தை மேற்கொள்ள வேண்டும்'' என்று வேண்டினர் சிவப்பிரகாசர்.

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னுங்காணப் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய
தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள
லாகாதே.

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகம் கிடைக்கும்; காம
வெட்டையிலே மதிமயங்கும் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டும் கவலை தானே

என்ற இரு பாடல்களைக் கூறித் திருமணத்தை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டார். ரெட்டியார் வேலையரைத் திருமணத்திற்கு வேண்டினர். அவர் மௌனமாக இருந்தார். அவருடைய இளவலைக் கேட்டார். அவர்,

''நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு
நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால்
காண லாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார் மயல் காளையர் என்பதும் புதிதோ''

என்று பாடினார். பின்னர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் கட்டளைப்படி வேலையருக்கும் கருணைப் பிரகாசருக்கும் திருமணம் செய்து வைத்தார். அப்போது சுவாமிகள் விநோதமாக ஐந்து பாடல்களைப் பாடி ஆசி கூறினார்.

**சாந்தலிங்கர் சந்திப்பு :**

சிவப்பிரகாசர் அங்கிருந்து புறப்பட்டு, தல யாத்திரை புரிந்து கொண்டு தான் பிறந்த திருத்தலமாகிய காஞ்சிபுரத்தை அடைந்தார். பேரூரிலிருந்து சாந்தலிங்கர் என்பார் அங்கு வந்தனர். அவருடன் சுவாமிகள் நட்புப் பூண்டு மகிழ்ந்தார். அவருடைய நல்லொழுக்கத்தை நோக்கித் தனது தங்கை ஞானம்பிகையை அவருக்குத் திருமணஞ் செய்வித்தார். சாந்தலிங்கருடன் பொம்மபுரத்தில் எழுந்தருளியுள்ள சிவஞானபாலைய தேசிகரை யடைந்து, அவரை அஞ்சலித்து, அவர்மீது பல பிரபந்தங்களைப் பாடினார். அவருடைய அருளாகிய அமுதை யுண்டு மகிழ்ந்தார். பின்னர் விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றம் வந்து தங்கி, அங்குள்ள சுவாமியின்மீதும், அம்பிகையின் மீதும் பல துதிநூல்கள் பாடிவழிபட்டார்.

**கருணைப்பிரகாசர் மறைவு :**

மாணவர்களின் விருப்பத்துக்கு இணங்கி நல்லாற்றுரையடைந்தார். அங்கிருக்கும்போது வெங்கனூரில் இருந்த கடைசித் தம்பி கருணைப் பிரகாசர் சிவனடி சேர்ந்தார். அது குறித்துச் சுவாமிகள் பெருந்துயரமுற்றனர்.

முன்னமொரு தமிழ்ப்புலவன் தனையுண்டு
கண்ட சுவை முதிர்ச்சியாலே
தன்னியலை முழுதுமுரைத் தமையாமுன்
நினைக் கவர்ந்து தடங்காளத்தி
மன்னவ னுண்டான்; எனது மாதவத்தின்
வலிதீர மண்ணின் மீதே
என்னுடன்வந் தவதரித்த இளங்கருணைப்
பிரகாசன் என்னுங் கோவே.

என்று பாடியிரங்கினர். வேலைய சுவாமிகள், தன் தம்பியின் பிரிவைக் குறித்துக் கலுழ்ந்து பாடிய பாடல்.

ஆண்டதனில் எனையொவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமென்ன புதுமை தானே?
காண்டகுகண் மணியேநல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்தும் உயிர்
யானுமிகு வன்னெஞ் சேனே'' [தரித்தேன்

அதற்குப் பின் அடிகளார் பிரபுலிங்க லீலை, திருக்கூவப்புராணம் முதலிய அரிய நூல்களைச் செய்தார். சுவாமிகள் மொத்தம் 32 நூல்கள் இயற்றியருளினர். ஒரு சமயம் கடற்கரையில் விரோசனத்துக்காக மருந்துண்டு இருந்தபோது, நன்னெறி என்ற நாற்பது வெண்பாவைக் கடற்கரை மணலில் எழுதினர். பிறகு மாணவர்கள் அதனை எழுதி உலகிற்கு உதவினார்கள். நல்லாற்றூர் என்ற ஊரிலே நிஷ்டை கூடியிருந்து மக்கட்கு அருள் உபதேசம் புரிந்து, 32-ஆம் வயதில் புரட்டாசி மாதம் பௌர்ணமி திதியில் சிவலிங்கத்தில் கலந்தருளினர்.

சுவாமிகளுடைய சகோதரர் வேலைய சுவாமிகள் பெரிதுந் துன்புற்றார். இளவல் கருணைப் பிரகாசர் 18-வது ஆண்டில் மறைந்தார்; மூத்தவர் 32-வது ஆண்டில் மறைந்தார். ஆறாத் துயரமுற்ற அவர்,

''அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்-முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்''

என்று பாடி வருந்தினர்.

**முடிவுரை :**

சிவப்பிரகாசருடைய உடம்பு மறைந்ததேயன்றி, அவருடைய புகழ் மறையவில்லை. அவர் தந்த தமிழ்ச் செல்வம் எங்கும் நிறைந்துமக்களுக்கு அறிவை வளர்த்து ஆனந்தத்தை வழங்குகின்றது. இவர் பாடிய தெவிட்டாத தெள்ளமுதத் தமிழ், பவப் பசியை மாற்றிச் சிவத்திருவை ஏற்றிவைக்கின்றது. **

''எமையாள வந்த எந்தாய்! எம்மை யீடேற்றும் பொருட்டு இவ்வூரில் சில காலந் தங்கியிருத்தல் வேண்டும்'' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார். சிவப்பிரகாசர் அவருடைய அன்பென்னும் பிணியினுல் கட்டுண்டார். ரெட்டியார் சிவப்பிரகாசருக்கென்று தனியே ஒரு திருமடம் புதுக்கி, அதில் எல்லா அனுகூலங்களும் அமைத்து உபசரித்தார். சில காலம் அண்ணுமலை ரெட்டியாருடைய அன்புக் கடலில் மூழ்கி, அவரை ஆண்டவனுடைய அருட்கடலில் முழுகவைத்து, அநேக அறநெறிகளை உபதேசித்தருளினுர்.

**நெல்லையை யடையதல்:**

சிவப்பிரகாச சுவாமிகள் அண்ணுமலை ரெட்டியாரை நோக்கி, ''அன்பு மிக்குடையீர்! நாங்கள் கலைநலம் வேண்டித் தென்திசை செல்கின்ருேம். திரும்புங்கால் சிலகாலந் தங்கி மகிழ்வோம். இப்போது எமக்கு விடைதாரும்'' என்று கூறி அவர்பால் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டார். வீட்டை நோக்கிச் செல்லும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலைப் போல், மூவரும் மதுரைக்கு அப்பாலுள்ள நெல்லையின் எல்லையை அடைந்தார்கள். வழி நடந்த இளைப்பு இல்லை எனுமாறு இனிய தென்றல் வீசியது. பொருநை நதியின் புனிதமான குளிர்ச்சி உடலையும் உள்ளத்தையும் குளிர்வித்தது. வெள்ளியம்பலவாணரைக் காணும் கணம் எப்போது? எப்போது? என்று துடிதுடித்துக் கொண்டு சென்றனர் சிவப்பிரகாசர்.

சிந்துபூந்துறையில் தருமபுரத்துக் கட்டளை மடத்தில், மாணவர்கட்குத் தமிழும் சைவமும் போதித்துக் கொண்டிருந்த தம்பிரான் அவர்களை, மூவருஞ் சென்று முடிகளை அடிகள் மீது வைத்து, வணங்கி, கைகட்டி வாய்பொத்தி நின்ருர்கள். தம்பிரானுர், அவர்களுடைய பரிபக்குவ நிலையையும், பயபக்தியையும் அறிந்து மகிழ்ந்தார்.

''எங்கு வந்தீர்கள்?''

''தமிழ் பயில வந்தோம்''

ஏற்கனவே தமிழ் பயின்றதுண்டோ?

ஆம், சிறிது பயின்றுளோம்.

''ஆனுல் கவிபாடத் தெரியுமோ?

திருவருளாலும் குருவருளாலும் பாடுவதுண்டு.

''கு'' என்று தொடங்கி, ''கு'' என்று முடிக்கவேண்டும். பாடலுள் ஊருடையான் என்று வருமாறு அமைத்து நேரிசை வெண்பா ஒன்று பாடும்''.

உடனே சிவப்பிரகாசர் சிறிதும் தாமதியாமல், மாமதி கொண்டு, அதி அற்புதமான இந்த வெண்பாவைப் பாடினுர்.

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னம்அணி வாற்கு-வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லையதள்
மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு''

''வடக்கோடு தேருடையான்'' என்ற அழகிய சொற்றொடரைக் கேட்டவுடனே, வெள்ளியம்பல முனிவர் விம்மிதம் உற்ருர்; வியந்தார். எழுந்து மாணவராகிய சிவப்பிரகாசரை இறுகத் தழுவிக் கொண்டார். ''அப்பனே! இப்படி அழகாகப் பாடுந் திறமுடைய நீயா என்னிடம் பாடம் கேட்கப் போகின்றனை? இது பொருந்துமா?'' என்ருர்.

''சுவாமீ! அடியேனைத் தள்ளிவிடக்கூடாது. நான் என்பது விலக நானூறு கல் கடந்து வந்துளேன். என்னையும், என் எம்பியரையும் தேவரீர் தங்கள் மாணவர் குழாத்தில் சேர்த்தருளி, தமிழ் மழை பொழிந்து, எங்கள் உயிராகிய பயிரை வளர்க்க வேண்டும்'' என்று நாக்குழற, விழிநீர் மல்க, மெல்லிய குரலால் விண்ணப்பம் புரிந்தார்.

நன்கு கவிபாடுந் திறம் வாய்க்கப் பெற்ற அவருடைய அடக்கத்தையும், அன்பையுங் காணத் தம்பிரானுர் உள்ளம் உவந்தார். அவருக்கு ஐந்து இலக்கணங்களையும், இலக்கியங்களையும் பாடஞ் சொன்னுர். சிவப்பிரகாசரும், அவருடைய தம்பியர் இருவரும் 15 நாளில் தொல்காப்பியம் முதலிய ஐந்திலக்கணங்களையுங் கற்றனர். இவ்வண்ணம் இவர் கல்வி பயின்றுகொண்டிருந்தபோது ஒருநாள் ஒருவர் வந்து 300 பொன் அடங்கிய பொற்கிழியை நீட்டினுர்.

சிவப்பிரகாசர்: இது என்ன?

''முன்னூறு பொன்''

''கொடுத்தனுப்பியவர் யார்?''

''அவர் தனது பேரைச் சொல்லவேண்டாம் என்ருர்''

''பேர் சொல்லவேண்டாம் என்றவர் செல்வம் எனக்கு வேண்டாம்''

''தான் புரியும் தருமம், பிறருக்குத் தெரியக்கூடாது என்பது கொடுத்தவருடைய கொள்கை''

''தெரியாத ஒருவரிடத்தினின்றும், பொருள் பெறக் கூடாது என்பது எனது கொள்கை''

''இதனைத் தாங்கள் ஏற்க மறுத்தால், எங்கள் வாழ்வு தொலையும்.

தண்ணுர் தயவுடைய அண்ணுமலை ரெட்டியார் எங்களை முனிவார்''

# மாதவன் விரும்பும் மாபெரும் தலம்

[திரு. என். எஸ். தாத்தாசாரியார், தஞ்சை]

## முன்னுரை :

திருமால் அடியார்கள் நிச்சலும் ஓதி உணர்ந்து உய்ய வகுத்த வழிகளில் எளிய வழியாவது, அவன் திருப்பெயரை மனதினுல் சிந்தித்து வாயினுல் பாடி மகிழ்வதேயாகும். அத்தகைய திருமால் திருநாமங்களில் வாசுதேவ மந்திரம் என்ற பன்னிரண்டெழுத்து மந்திரமும், திருவஷ்டாட்சரம் என்ற எட்டெழுத்து மந்திரமும், விஷ்ணு மந்திரம் என்ற மூவெழுத்து மந்திரமும் மிக முக்கியமானவை. இவைகளை வியாபக மந்திரம் என்றும் அழைப்பார்கள். இம்மூன்று மந்திரங்களிலும் சிறந்தது எட்டெழுத்து மந்திரமாகிய நாராயண மந்திரமாகும். இதனை மூலமந்திரம், திருவஷ்டாக்ஷரம், பெரிய திருமந்திரம் என்றும் அழைப்பார்கள். ''மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினுற் போலவே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது'' என்று முமுட்சுப்படியில் கூறிய படிக்கு இம்மந்திரம் மூன்று வேதங்களிலுமிருந்து எடுக்கப்பட்டது. இதில் எட்டு எழுத்துக்களும் மூன்று பெரும் பதங்களும் உள்ளன. இந்த மந்திரத்தை இம்மண்ணுலகில் இமயமலையில் பத்ரிநாராயணன் என்ற பதரிகாசிரமத்திலுள்ள நாராயணன், தனது அம்சமான நரன் என்பவருக்கு உபதேசம் செய்தார் என்பர். அதனுல் அந்த இடத்தைத் திருமந்திரம் விளைந்த இடம் என்பார்கள். இதற்கு அடுத்ததும் ஒரு படியில் அதனைவிடச் சிறந்ததாகக் கருதும் படியானதுமான புண்ணிய க்ஷேத்திரமும், பாரதத்திலேயே வைணவர்களின் மாபெரும் பதியாகவும் கருதப்படுவது திருக்கோட்டியூர் என்ற கோஷ்டீபுரமாகும். இந்தப் பெரும் பதியில்தான், முன்பு இராமானுசர் 18 தடவை திருவடி நோகத் தளர்ந்து எழுந்தருளி, ஆசாரிய ரத்தினமான திருக்கோட்டியூர் நம்பியிடமிருந்து திருமந்திரத்தையும், சரம சுலோகத்தினையும் (பகவத்கீதை 18-வது அத்யாயம் 66-வது செய்யுள்) உபதேச முறையில் கேட்டு, தக்கார்களுக்குத் திருவோலக்கத்தில், விமானத்தின் மீதமர்ந்து வெளியிட்டுத் தம் அளப்பிலாக் கருணையை வெளியிட்டார்.

## ஊர்ப்பெயர் :

இந்தச் சிறப்பான ஊர் இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை-திருப்பத்தூர்ப் பாதையில் சிவகங்கையிலிருந்து 16 மைல் தொலைவில் பேருந்துப் பாதையில் உள்ளது. இந்த ஊரின் நடுவே அமரபுஷ்கரிணி திருப்பாற்கடல் என்ற புஷ்கரிணிகளின் மருங்கே மிகவும் மிடுக்குடன் அமைந்த ஆலயமே, மாதவன் உகந்து அருளின திருக்கோயிலாகும். இந்த ஆலயம் சிவகங்கை மகாராஜா பரம்பரைத் தருமகர்த்தா ஸ்ரீகார்த்திகேய வேங்கடாசலபதி அவர்களின் பக்திதழைக்கும்பராமரிப்பில்இருந்துவருகிறது. இங்குத்தான் முன்பு பாண்டிய மன்னனுடைய புரோகிதரான செல்வநம்பிகள் அவதரித்தார் என்பர். இராமாநுசர், பட்டர், நஞ்சீயர் போன்ற மிகப்பெரிய மகான்கள் எழுந்தருளின இடம். இந்தப் பதியில் தான் திருப்பாவைக்கு ஒரு ஒப்பற்ற தனியனைப் பட்டர் அருளினர் என்பர். இது மிகப் பழைய ஊராகும். பாண்டியர், சோழர், விஜயநகர மன்னர்கள் யாவரும் விரும்பி ஏந்திய பெருமாள் எழுந்தருளியுள்ள தலம். இரணியவதம் செய்யத் திருமால், இங்கு முன்பு இருந்த கதம்ப முனிவருடைய ஆசிரமத்தில் கோஷ்டியாக எழுந்தருளியிருந்து இரணியனை வதைக்க ஆலோசனை செய்த இடமானதாலும், திருக்கு ஒட்டி ஊர் திருக்கோட்டியூர் என்று பதம் பிரித்துச் சிற்றின்பப் பற்றை ஒட்டுவிக்கும் ஊர் என்றும் பொருள் உரைப்பதாலும் இதனைத் திருக்கோஷ்டியூர் அல்லது திருக்கோட்டியூர் என அழைத்தனர். இந்த ஊரிலும் இதன் பக்கத்திலும் பல சங்க காலப் புலவர்களும், தற்காலப் பெரும் புலவர்களும் வாழ்ந்திருந்தார்கள் என்பர்.

## ஊரின் சிறப்பு :

இத்தலத்துப்பெருமாளைப் பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் என்ற ஐவர் மங்களாசாசனம் செய்துள்ளார்கள். ஆனபடியால் பாண்டிபதினெட்டு திவ்யதேசங்களில் இரண்டாவதான ஒரு சிறந்த தலமாகும். இந்த ஊரின் சிறப்பை, ''நாள்தோறும் விருந்தோம்புவார்'' என்றும், ''செங்கமல வயல் திருக்கோட்டியூர்'' என்றும், ''காசின்வாய்க் கரம்விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டு தேசவார்த்தை படைக்கும் வண் கையினுர்கள் வாழ் திருக்கோட்டியூர்'' என்றும் பெரியாழ்வார் அருளிச் செய்துள்ளனர். ''பெருமாள் இத்தலத்தில் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் கூத்தாடியும் பக்தர்களுக்குச் சேவை தருவான். மாசி மகஸ்னனம் மகாமகச்சிறப்பில் கும்பகோணத்தில் புகழ்பெற்றது. த்விவிதான வைகானஸ

ஆகம பூஜைத்தலமானதால் பெருமாள் கோயிலுக்குள்ளேயே சரபேசுவரர் என்ற சிவபெருமான் கோயில் உள்ளது. கோயிலின் வெளிச் சுற்றில் வடகிழக்குக் கோடியில் சுரங்கக்குளம் என்ற ஒரு சிறு புஷ்கரிணி உள்ளது. பிறரால் ஆபத்து ஏற்பட்ட காலத்தில் திருக்குடந்தைப் பெருமாளேயும், மதுரைக் கள்ளழகர்பெருமாளேயும் இந்த ஆலயத்தில்தான் எழுந்தருளப் பண்ணி மறைத்து வைத்தார்கள். கோவில் வடக்குச் சுற்றில், கண்டாலே கண்டார் உள்ளம் கலங்கும் படியாய், சிற்பத் திறமையின் எல்லேநிலமாய் விளங்கும் இரு நரசிங்கப்பெருமானின் உயரமான திவ்விய சிலேவிக்கிரகங்கள் எழுந்தருளியுள்ளன. இத்தலத்தில் இராமானுசரின் பொன்னடிகள் 18 தடவைகள் பட்டுத் திகழ்ந்தன. ஒவ்வொரு ஆண்டும் மாசிமாதம் பௌர்ணமியில் காசினி வியக்கும் தெப்ப உத்சவத்தில் அடியார்களுக்குத் ததீயாராதனம் (உணவளிப்பது) நடப்பது மிகமிகப் போற்றத்தக்கதாகும்.

சமாராதனே என்ருல் எங்கும் இவ்வளவு பரிவுடனும், அறுசுவையுடனும் அடியார்கள் அனேவருக்கும் பக்தி சிரத்தையுடன் விரும்பி அன்னம் அளிப்பதைக் காண இயலாது. இந்தத் தமிழ்நாட்டில் உள்ள மூன்று அஷ்டாங்க விமானங்களில் மிக முக்கியமான மூன்று அடுக்குள்ள மாடக்கோயில் விமானம் இருப்பது திருக் கோஷ்டி நாதனுன மாதவன் என்ன, அவரது நாச்சியார், திருமாமகள் நாச்சியார் என்ன என்ற இத் திவ்வியமங்கள விக்ரக தரிசனம் எங்கும் காண இயலாது. என்றெல்லாம் இத் தலத்தின் தனிச்சிறப்பினே எழுதிக்கொண்டே போகலாம். ஊருக்குள் மிகவும் அருள் சுரக்கும் ஒரு அனுமன் திருச் சந்நிதி உள்ளது. ஸ்ரீமத் அகோபிலமடம் தேசிகன் திருக்கோயில் உள்ளது.

## தலவிளக்கம் :

கோயில் பெருமாள் மூலவருக்கு ''உரக மெல்லணேயான்'' என்ற திருநாமம். திருவிழாக் காணும் உத்சவமூர்த்தத்திற்கு ஸ்ரீஸௌமிய மாதவன், ஸௌமிய நாராயணன், அன்ன உருவி, வெள்ளியான், கரியான் என்றெல்லாம் திருநாமங்கள். இப்பெருமாள் விக்கிரகம் வெள்ளியால் ஆனதால், ஆகமம் அறிந்த பெரியோர்கள் நினேத்த காரியத்தை உடனே நிறைவேற்றி அருளும் இறைவன்இவர் என்பர். நாச்சியார் திருப்பெயர்கள், திருமாமகள் நாச்சியார், மஹாஸ்வாமிநீ என்பன. பெருமாள் க்ஷீராப்திநாதன் என்ற திருப்பெயருடன் பள்ளி கொண்டும், ஸ்திதநாரணன் என்ற திருப்பெயரில் வீற்றிருந்த கோலத்திலும் விமான தளத்தில் திவ்ய தரிசனம் தருவார்கள். இந்த நரசிங்கப்பெருமாளுக்குத் தெற்காழ்வான், வடக்காழ்வான் என்றெல்லாம் திருநாமங்கள். அமரபுஷ்கரிணி, திவ்வியபுஷ்கரிணி, திருப்பாற்கடல் என்பன இத்தலத்துப் புஷ்கரிணிகளாகும். திருப்பாற்கடலில் நடக்கும் தெப்பத் திருவிழா வையம் புகழ்ந்ததாகும். பதினறு வகை விமானங்களுள் ஒன்ருகிய ஸ்ரீஅஷ்டாங்க விமானம் இத்தலத்தின் சிறப்பின் சிகரமாகும். மற்றென்று இப்பொழுது திருப்பணி நடந்துவரும் ஒப்பற்ற மதுரைக் கூடலழகர் கோயிலில் உள்ளது. பெருமாள் கதம்ப முனிவருக்கும், தேவேந்திரனுக்கும் காட்சிதந்தவர். ''கோட்டியூர் போகாதவர் குரங்காய்ப் பிறப்பார்'' என்ற பழமொழி நடமாடும் சிறப்பு வாய்ந்த தலமாகும். செல்வநம்பிகள், திருக்கோட்டியூர்நம்பி, இராமாநுசர், பட்டர், நஞ்ஜீயர், பிள்ளேப்பெருமாள் ஐயங்கார், ஸ்ரீமத் அழகிய சிங்கர்கள், ஸ்ரீமத் ஆண்டவன் முதலான பரம பாகவதர்களும், சிறுகம்பையூர் சர்க்கரைப் புலவர் மற்றும் நற்றிணே 21-ம் பாடலேப்பாடின கோட்டியூர் நல்லந்தையார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற சங்ககாலப் புலவர்களும் இந்தத் தலத்தில் மிகவும் ஈடுபட்டவர்கள். இங்குள்ள அமரபுஷ்கரிணியில் நீராடி, மாதவனே வழிபட்டால் பிள்ளே இல்லாதவர்களுக்கு விரைவில் பெருமாள் அருளால் நல்ல குழந்தை பிறக்கும் அதிசயத்தை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

## புராணப் பெருமை :

...ும,
...சால்
... சாற்றும்

பிரம்மாண்ட புராணத்திலும்...வி, ஊர்மிளே கைவர்த்த புராணத்திலும் முஎதேனும் இலக்குவ இரண்டு அத்தியாயங்களில் ன ஒருசிறிதேனும் சிறப்புப் பேசப்படுகின்றது. க... அண்ணல் இராம முனிவர் நாரதருக்கு இப்பதி...டன் தொடர்ந்த எடுத்துக் கூறினர். இத்தலத்தில்...ன், உடல் வாக்கு யன் வர இயலாததான மதங்க பு...இத்தகையதாக ஆசிரமம் ஒன்று இருந்தது. இரல... கொடுமைகள் தாங்காத தேவர்... மாளிடம் தங்கள் துயரைத் துடைக்க...ன் : திருமால் தேவர்களுடன் கோஷ்டியா... இரணியனேக் கொலே செய்ய ஆலோசித்...ரெலாம் புதனுடைய பேரனுன புரூரவஸ் என்ற ம... பார்த்த கங்கைநீராட எண்ணிப்பொன்தேரில் சென்...தனள். அப்பொழுது கதம்பமுனிவர் அவர் எ...ாற்று தோன்றி இத்தலத்து அஷ்டாங்க விமானத...னள். இறங்கி வணங்காமல் செல்வது பிழை என்...ம்பு மன்னரும் தேரினின்றும் இறங்கி விமானத்...ல், வலம்வந்து எம்பெருமானேத் தரிசனம் செய்...க முனிவருடைய ஆணேயின் பேரில் ஓர் அழகி...ந் ஊரை ஏற்படுத்தினர். அதனல் இந்த ஊருக்கு மூலஸார்த்தம் (ஊர்களில் யாவற்றிலும் ஒப்பற்றது) என்ற திருப்பெயர் ஏற்பட்டது. அந்த மன்னன் விமானப் பிரதட்சணம் செய்ததை ஒட்டி இன்னும் இந்த ஊரில் அதிகாலேயில் விமானப் பிரதக்ஷிணம் செய்வது நம் பீடைகளே எல்லாம் போக்கும் என்பர். சந்திரவமிசத்து மன்னன் புண்ணியநிதி என்பவன் சேது யாத்திரை வழியில் இங்கு வந்து பெருமாளேத் தரிசனம் செய்து கோயில் முதல்தளத்தைக் கட்டிக் கொடுத்தான். அவனுக்குப் பகைவர்களின் கஷ்டங்கள் இப்பெருமாள் தரிசனத்தால் நீங்கிற்று என்பதும் புராண வரலாறுகளின் சுருக்கமாகும்.

## தெப்பம் :

நம் தமிழ்நாட்டில் கோடைக் காலத்தில் எங்கும் தண்ணீர்ப் பந்தல் வைப்பதும், அடியார்களுக்கும், ஏழைகளுக்கும் பசியார உணவளிப்ப

தும், முதலிய தருமங்கள் செய்வது தொன்று தொட்டு நடத்தி வரும் சிறந்த வழக்கமாகும். கோடையில் இவ்வாறு அன்னம் இட்டு எம்பெருமானுக்குத் திருப்பள்ளி ஓடம் என்ற தெப்பத் திருவிழா நடத்துவதும் ''வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான்புலம்'' என்ற திருக்குறள் அடியில் கூறிய கருத்திற்கொப்ப மழைக்காலத்தில் மாதம் மும்மாரிபொழிய, சீர்வளம் தழைக்க மக்கள் இன்புறுவார்கள் என்பது பெரியோர்களின் திருவுள்ளமாகும். அவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் இத்தலத்தில் காரைக்குடியில் உள்ள, ஒரு அன்னதான வடகலையார் குழு, மிகவும் உத்சாகத்துடனும் ஆதரவுடனும் இத்தலத்துப் பெருமாளின் தெப்போத்சவத்தின் மூன்று நாட்களிலும் நடத்தி வருகிறார்கள் என்பதை நாடறியும், நகரம் அறியும். அந்தப் புனிதமான கைங்கரியச் சிறப்பும், சிவகங்கைத் தேவத்தானத்தார் மன்னர் பெருமானுடைய சிறந்த ஊக்கத்தால் நடத்தி வரும் பெரும் திருவிழாவும் நடக்கவிருக்கின்றன. 'நலம்பெற விழையும் மக்கள் அனைவரும் திருக்கோட்டியூர் சென்று பெருமானைத் தெப்பத்தில் தரிசித்தும், அங்குவரும் மகான்களில் திருக்கண்களில் பட்டும் உய்வோமாக!

# திருக்கோட்டியூர்

நாவகாரியம் சொல்லிலாதவர் நாடொறும்விருந் தோம்புவார்,
தேவகாரியம் செய்துவேதம் பயின்றுவாழ்திருக் கோட்டியூர்,
மூவர்காரிய மும்திருத்தும் முதல்வனைச்சிந்தி யாத, அப்
பாவகாரிக ளைப்படைத்தவன் எங்ஙனம்படைத் தான்கொலோ!

குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக்கனு கூலராய்,
வெற்றமொன்றுமி லாதவன்கையி னர்கள்வாழ்திருக் கோட்டியூர்,
துற்றியேழுல குண்டதூமணி வண்ணன்தன்னைத் தொழாதவர்,
பெற்றதாயர் வயிற்றினைப்பெரு நோய்செய்வான்பிறந் தார்களே.

பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏதுமொன்றுமி லாதவண்மையி னர்கள்வாழ்திருக் கோட்டியூர்,
நாதனைநர சிங்கனைநவின் றேத்துவார்க ளுழக்கிய,
பாதுதூளி படுதலாலிவ் வுலகம்பாக்கியம் செய்ததே.

காசின்வாய்க்கரம் விற்கிலும்கர வாதுமாற்றிலி, சோறிட்டு,
தேசவார்த்தைப டைக்கும்வண்மையி னர்கள்வாழ்திருக் கோட்டியூர்,
கேசவா! புரு டோத்தமா! கிளர் சோதியாய்! குற ளாவென்று,
பேசுவாரடி யார்களெந்தம்மை விற்கவும் பெறுவார்களே.

—பெரியாழ்வார்.

காய்ச் செப்பெனக் கேட்டனன். எங்குமில்லா அழகியை உனக்கென எடுத்தேன். இங்கெனே இக்கதியாக்கினன் என்றனள். யாரவள் என்றனன். பேரவள் சீதை. ஆரவள் அழகினை உரைப்பர் என்றறைந்தனள். அத்துமீறித்தன்னைப் பற்றிய காமநோய்ப் பித்துநோய் அண்ணற்குத் தொத்து நோயாக்கினுள்.

மனப்பிணியுற்ற இராவணனுக்கு அவனது மதிமிக்க மந்திரிகள் சானகியைக் கொண்டு வர வழி வகுத்தார்கள். அவர்கள் வகுத்துரைத்த வழியாக மாமன் மாரீசனை அணுகினன் இராவணன். வரவேற்றனன் மாரீசன். ஆனுல், அவனுல் என்னவருமோ என ஏக்கங் கொண்டனன். இராவணன் தனது தங்கை பட்ட பங்கமனைத்தையும் தங்கள் அருமை மாமனுக்கு அறைந்தனன், அவன் வருந்தினன். பின்னர்க் கரனுதியர் மரித்ததையும் மாரீசற்கு உணர்த்தினன். மாமா இப்படி எளியமானிடரால் எனது உருகி பங்கமுற, உனது மருகர் அழிவுற நேர்ந்ததே, இது உங்கள் மரபிற்கும் எங்கள் மரபிற்கும் மானம் அழிதரும் செயலாக வந்துவிட்டதே என வருந்தினன் அவன்.

மாரீசன் வருந்துகின்ற மருகன் இராவணனுக்கு இதம் கூறித் தேற்றினன். இராவணன் பின்னரும், ''மாமா எனது தங்கைக்கு வந்த துன்பத்தை நினைத்தால் என் நெஞ்சம் வேகின்றது. நாவுலருகின்றது. செய்தவர்களையெதிர்க்கவோ மனம் நாணுகின்றது. ஏனெனில் எனது பெருமைக்கும் ஆற்றலுக்கும் ஈடற்ற மனிதர்கள் ஒருபொருளல்லர். அதனுல் தான் எதிர்க்கத் துணியவில்லை. ஆனுல் அவர்களை ஈட்டிற்கீடாக ஏதெனும் செய்து முடிக்க வேண்டுமெனவும் நினைக்கின்றேன். இதன் பொருட்டே இங்கு உங்களிடம் வந்தேன். அந்த இராமனிடம் உள்ள அவன் மனைவி சீதை மிக அழகியாம். அவளைக் கொண்டு வந்துவிட வேண்டுமெனக் கருதுகின்றேன். இது உங்களால்தான் ஆகவேண்டும் என்றனன்.

''வெப்பழி யாதென் நெஞ்சும் உலர்ந்தேன் விளிகின்றேன்
ஒப்பழி வென்றே போர்செய லொல்லேன் உடன் வாழும்
துப்பழி செவ்வாய்ச் சீதையைச் வவ்வத் துணை கொண்டிட்டு
இப்பழி நின்னுல் தீரிய வந்தேன் இவண் என்ருன்''

—மாரீசன் வதை, 17

## சீரையழித்தது சின்னத்தனம் :

இவனது கொடுஞ் சொற்களைக் கேட்ட மாரீசன் தனது இருசெவிகளையும் சேரப் பொத்திக் கொண்டனன். உலகத்தில் மரியாதை வழக்கமொன்றுளது. பெரியவர்களுடன் சிறியவர் எளியவர் பேசுகின்ற பொழுது தமது வாயைச் சிறிது மறைத்துக் கொண்டு செவியை அச்சிறந்தவர் இருக்கும் பக்கம் அளவாகச் சாய்த்து நின்று வணக்கமான படி யாதொன்றையும் பேசுவதுங் கேட்பதுந் தான் வழக்கம். இதை வாய்பொத்தி நிற்றல் என்பர். மாமனும் மருகனுமாக மாரீசனும் இராவணனும் உளர். ஆனுல் மரியாதையில் மாரீசனுக்கும் இராவணனுக்கும் உள்ள உயர்வு தாழ்வுகள், ஒருமலைக்கும் மடுவிற்கும் உள்ள வேற்றுமையுள. அதனுல் மாரீசன் இராவணனிடம் மரியாதையோடு வாய் புதைத்துச் செவிசாய்த்துப் பேச வேண்டியவனே. எப்பொழுதும் அப்படித்தான் பேசி வந்தனன். ஆனுல் இன்று, இப்பொழுது, அந்தமுறை மாறி விட்டது. ஒரு அளவொடு மாறவில்லை அது, மிகவுந் தலைகீழாக மாறிவிட்டது. திறக்க வேண்டிய செவிகள் இறுக மூடிக் கொண்டன. மூடவேண்டிய வாய் மிக விரிவாகத் திறந்தது. மாறித் திறந்தவாய் இராவணனை வாழ்த்தத் திறக்கவில்லை. அது, வையவே திறந்தது. வைதது சிற்றெலியாகவல்ல, மிகவும் பேரோசையுடன் வைதது. அது, அதுவரையில் இராவணனை நோக்கி யாரும் வையாத அளவு வைதது. அப்படியா அவ்வளவு கடினமான வசவா? உலகவர் நாயை நோக்கி வையும் வசவு அது. ஆமாம், நாயை நோக்கிக் கூட யாவரும் ஒருமுறைதான் அப்படி வைவார்கள். அப்படிப்பட்ட கடுமொழியை இருமுறையாக இராவணனை நோக்கிக் கூறியவண்ணம் ஒரு சிறிதும் அச்சமின்றித் திறந்தது மாரீசனதுவாய். அது என்ன தீஞ்சொல்? மக்கள் நாயை ஓட்டச் 'சீ' என்பர். மாரீசன் மன்னவனைப் பார்த்து சீ சீ எனப் பேசி வாய் திறந்தனன்.

''இச்சொல் அனைத்தும் சொல்லியரக்கன் எரிகின்ற
கிச்சின் உருக்கிட்டு உய்த்தனன் என்னக் கிளராமுன்
சிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தித் தெருமந்தான்
அச்சம் அகற்றிச் செற்றமனத்தோ டறைகின்ருன்''

—மாரீசன் வதை 176

கிச்சு-நெருப்பு. இராவணன் சீதையைப் பழிக்க நின்ற சொல், மாரீசன் காதில் நெருப்பால் உருக்கிய லோகக் குழம்பை ஊற்றியதை ஒத்திருந்தது. அதனுல் புகழ்ச்சிக்குரிய இராவணன் மாரீசனது இகழ்ச்சிக்குரியவனுயினன். 'எனைத் துணையராயினும் என்னும் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்'.

மாரீசன் பற்பல அறநெறிகளைக் கூறினன். அவன் கேட்கவே இல்லை. மாரீசன் ஆயினும் விட்டுவிடவில்லை. இராவண, உனக்கு உனது வாழ்வு எளிதாக வந்து விட்ட ஒன்றல்ல. உனது தவமோ அரியது. உணவின்றி ஆண்டுகள் பல. தலைகளை அறுத்துத் தழலிடையிட்டபடி பல வாண்டுகள், எப்படியெப்படி எல்லாம் தவமியற்றி இப்பெருவாழ்வைப் பெற்றனை சற்றே நீ உற்றுப்பார். உனக்கு இவ்வளவு வாழ்வைத் தந்தது அறமே. அவ்வறத்திற்கு மாறுபட நடக்க முயல்கின்றனை நீ. நீ, இப்பொழுது குறித்த தப்பு வழியில் தலைப்பட்டால் உன்னை ஆக்கிய அறமே உன்னை அழித்தும் விடும். தப்பு வழி நடக்க முயன்ற முரடர்கள் ஒருவரும் பிழைத்து வாழ்ந்தது கிடையாது என்றனன் மாரீசன்.

# பேதையும் மேதையுமான சீதை

'' முதுபெரும் புலவர் ''
புரிசை திரு. சு. முருகேச முதலியார்,
திருவண்ணுமலை

(முற்றுடர்ச்சி)

## இல்லாளை மறந்த இளவல் :

சீதைக்கும் இராமபிரானுக்கும் திருமண மான அன்றே, சனகன் தனது மகளாகிய ஊர் மிளையை இலக்குவனுக்கும் தந்து திருமணம் செய்வித்தனன். மற்றும் மாளவி சுருதகீர்த்தி என்னும் இருவரையும் பரதசத்துருக்கருக்கு மணம் செய்வித்தனன். தசரத குமாரர்கள் நால்வரும் சனகர்பெருமான் தந்த சிறந்த வரிசைகளுடன் அயோத்தி நகரை அடைந்து அன்பும் இன்புமுற வாழ்ந்து வந்தனர். பின்னர் கூனியும் கைகேயியும் கூட்டுறவாகச் செய்த நாட்டரசு நாடகத்தால், அண்ணல் இராமன் அரசுரிமை தகர்ந்தது. அக்கொடுஞ்செயலால் இளவல் இலக்குவன் உளம் குன்றிவிட்டது. அது முதல் அண்ணல் இராமனின் நலங்களைத் தவிர, யாதொன்றும் இலக்குவன் மனத்தில் இடம் பெற்றதில்லை. அத்துன்பத்தால், மாமணஞ் செய்துவந்த மனைவியையும் மறந்தனன் இலக்கு வன்.

கான்புகத் தொடங்கியபொழுது, இராமன் சீதையினிடம் சென்று தனது பிரிவைத் தெரி வித்தபொழுதும் அவள் தயங்கி மயங்கித் தெரு மந்தபொழுதும், இராமன் எத்தனை சொல்லி யும், சீதை பிரியமனத்துடன் பிரிய மனமில்லா மல், பின்தொடர்ந்ததனையும் உடனிருந்து அறிந்தவன்தான் அவ்விளவல். அவளும் இவள் தங்கைதானே? அவளுக்கும் நம்மைப் பிரிவதில் இவ்வளவு வருத்தமும் வருமே, அவளுக்கும் நமது பிரிவை அறிவித்து ஆறுதல் உரைத் தேனும் புறப்படுதல், அறமும் முறையுந் தானே என்ற நினைவும் இலக்குவனுக்கு எழுதர வில்லை.

பின்னர், பின்னவன் முன்னவனுகை முன்ன வன் பின்னவனுகை, அன்னமும் பின்தொடர் பாகக் கான்நோக்கிக் கால்வழி கொள்ளுகின்ற னர். அவர்கள் நடப்பிற்கு வருந்திய சுமந்திரன் வணங்கிக் கேட்டுக் கொள்ள இரதம் ஊர்ந்து வழிகொள்ள இணங்கினர். நாடுகடந்து காடு தொடரும் காலத்தில் இராமன் பாகனுக்கு விடை பணித்தனன். அக்கட்டளைக்குக் கீழ்ப் படிந்து திரும்பும் சுமந்திரன், செய்திகளுள வோ எனக் கேட்டனன். இராமன், எனது தாயார் மூவருக்கும் எனது வணக்கங்களைத் தெரிவிக்க, தந்தைக்கும் வணக்கங்கூறி அருகி லிருந்து ஆவனசெய்க என்றனன். சானகி, அமைச்சரே எனது அத்தையருக்கெல்லாம் எனது வணக்கங்களைச் சொல்லுங்கள், அரசர் பெருமானுக்கும் அறையுங்கள். எனது தங்கை யர்களுக்கு யான் வளர்த்துவந்த கிளியையும், பிற பறவைகளையும் பாதுகாத்து வரச் சொல் லுங்கள் என்றனள். இச் சானகியார் சாற்றும் தங்கையர்களில் இலக்குவன் மனைவி, ஊர்மிளை யும் ஒருவர்தான். அப்பொழுதேனும் இலக்குவ னுக்கு ஊர்மிளையின் பிரிவினை ஒருசிறிதேனும் உள்ளத்தில் உறுத்தவில்லை. அண்ணல் இராம பிரானுக்கு அடிமை செய்ய உடன் தொடர்ந்த அருமைத் தம்பி இலக்குவனின், உடல் வாக்கு உள்ளங்களின் ஒருமைப்பாடு இத்தகையதாக விருந்தது.

## கண்ணேட்டங் குன்ருத காவலன் :

கானகத்தில் பஞ்சவடியில் பாரெலாம் சுற்றிவரும் சூர்ப்பணகை இராமனைப் பார்த்த னள். அவன் அழகு வெள்ளத்தில் ஆழ்ந்தனள். அவள் காமனுல் அடியுண்டு கலங்கினள். மாற்று ருவங்கொண்டனள். மன்னன் எதிர் நின்றனள். அவள்தன்னை முதலறிவித்தாள், தான் விரும்பு வதை வெளியிட்டாள். இராமன் இசையாமல், பொருந்தாது ஏகென்ருன். அசையாள் அக லாள் அவள் நின்ருள். அப்போது சாலைக் குள்ளிருந்த சானகி வெளிவந்தனள். பாவை யைப் பார்த்தாள் சூர்ப்பனகை. தனது ஆவ லுக்கு அங்கு இடங் கிடைக்காதென அல்ல லுற்ருள். பின்னர் அவளை அகற்றப் பெரும் பாடு பட்டனன் பெருந்தகை. அகலாது சுற்றிச் சுற்றி அல்லல்படுத்தும் அவளையகற்ற, இளவல் வருவன் இருக்காதே எனக் கூறிப் பயமுறுத்த வும் நேர்ந்தது இராமபிரானுக்கு. அவளும் அகன்றனள் இரவும் வந்தது.

மறுநாள் காலையில் இராமன் எழுந்து காட்டில் வேறொருபால் ஒரு தடாகத்தை நோக்கி நடக்கின்றனன். அப்போது அச்செம் மல் மாலைவந்த அரக்கி, காலையிலும் வருவ ளோ என்பதனைக் கவனிக்கவேயில்லை. சானகி யைப் பார்த்தவுடன் அவளுக்கு வந்த வேதனை யும் வெறுப்பும் பொருமையும், அண்ணல் அறியாதனஅல்ல. அவ் ஒவ்வாதவள் முதல் நாள் நடத்திய காதல் நாடகத்தில் ஒரு சிறி தையும் இளவல் கண்டவனல்லன். அவளது

வருகையும் இளவலுக்குத் தெரியாதென்பதும் இராமனுக்குத் தெரியும். மாற்றுருக்கொண்டு மறையவும் வேற்றுருக்கொண்டு வெளிப்படவும் வல்லவளான அவள், ஆருமற்ற நேரத்தில் பொன்னனைய பூவையைக் கண்டால் என்னென்ன செய்வளோ என்பதும், அண்ணல் எதிர்பாராதனவல்ல. இவ்வளவுமிருக்க அன்னைக்கு ஒரு ஆதரவையும் அமைக்காமல், இளையவன் எங்கிருக்கின்றனன் எனவும் நாடாமல், அண்ணல் அயலிடம் சென்றது எவ்விதத்தோ அறிய முடியவில்லை.

ஒரு ' சிறந்த பொருளைப் பாடுபட்டுத் தேடியவர்கள் பெரு முயற்சியினராக இருப்பர். அவர்களைவிட அப்பொருளைக் களவு செய்யக் கருதுவோர் செய்யும் பெருமுயற்சியோ, மிகப் பெரியதாக அமையும். ஒரு அரசனுக்குள்ள அத்தனை ஆட்களும் படைகளும் பெரும் பெயர் பெற்ற திருடர்களுக்கும் உள. அரசன் வெளிப் படையாகப் படைகளையுங் கருவிகளையும் வைத்திருக்கலாம். திருடன் தனக்குள்ள அத்தனையையும் மறைமுகமாக வைக்கும் திறமை, அரசனை விட அதிக முயற்சியால் பெறுவதாகும். அத் திருட்டுத்தனத்தில் பெருத்த முயற்சியுள்ள கருத்துமிக்க திருடி, சூர்ப்பணகை. அவள் தனக்கு மாறுபொருளான சீதையை எடுத்து மறைத்தொழிக்கத் திட்டமிட்டுவிட்டனள். அழகனயலானன். அழகி தங்கியிருந்தாள். ஆச்சுதுவேலை பேச்சினி என்னவெனப் புகுந்தாள். சீதையைத் தூக்கிப் புறப்பட்டாள். அணுகாது அகலாது அயலிருந்தனன் இளவல், அதட்டி வந்தனன். அரிந்தனன் மூக்கை. உதைத்துத் தள்ளினன். ஒழிந்தவள் தொலைந்தனள். இப்படி ஒதுங்கியும் நின்று கண்ணோட்டத் தொடும் இளவல் உற்று நோக்கி நின்றிலனேல் அன்று என்னவாகியிருக்கும். கரதூடணற்குச் செலவில்லாமல் மாரீசனும் மாளாமல் இராவணன் செயலனைத்தையும் இவளே செய்ய முயன்றிருப்பள் அல்லவா?

## துன்பத்தில் முன்னிற்குந் தோன்றல் :

''பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள்'' என்றொரு அழகான பழமொழி. இப்பண்புமிக்க பழமொழியைப் படைத்தளித்த பெருமகன் யாரோ தெரியவில்லை. ஒருவன் எனக்கு ஒரு சிறிதும் ஓய்வில்லாத வேலையென்றனனும். அப்பொழுது நீ எத்தனை வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனை என்றனன் அடுத்தவன். இரண்டே வேலைகள்தான் என்னை இப்படி வதைக்கின்றன என்றனனும். முதல்வன் அவை எவை என்றனன். எதிரவன், உண்டவுடன் எனக்குக் கொஞ்சம் உறக்கம் வரும், உறங்கி விழித்தவுடன் உடம்பு வலவலவென்றாகி விடும். கொஞ்சம் அப்பொழுது சாப்பிடுவேன். இவ்விரண்டு வேலைகளுமே எனக்குத் தொல்லை தருகின்றன என்றனனும் அவன். பின்னர் ஓய்வற்ற வேலையென்றனையே? ஆமாம் உண்டவுடன் உறங்குகின்றேன், உணர்ந்தவுடன் உண்ணுகின்றேன். எங்கே ஒழிவு? என்றனனும். அப் பரபரப்புள்ள பண்பாளன். அப்படியுள்ள, மற்றவர் உழைப்பில் உண்ணும் பெத்தப் பெருமக்கள் படைப்புத்தான் மேற் சொன்ன பெருமொழி.

மூக்கறுப்புண்ட முன்னவளைப் பின்னவள் என்றழைக்கும் பெரியவர்கள் பலர். அவருள் மூவர் கர திரிசிர துடணர். அவர்கள்பால் சென்றாள். ஆனதெல்லாம் விண்டாள். அவர்கள் தங்கையின் சொல் கேட்டுத் தங்காது புறப்பட்டார். அவர்கள், பதினாலாயிரம் வீரப் படைகளுடன் வருந்தீரர். மரங்கள் ஒடிந்தொசிய, வனவிலங்குகள் பயந்தோட, மனிதர் எங்கே எனத் தேடிவந்து விட்டார் பேரரக்கர். கண்டான் கடைக்கண்ணால், கனன்றெழுந்தான் இளம்வீரன், கொண்டான் பெருவில்லைக் குணத் தொனி செய்தான் நாணால், அண்டாத சேனைகள் முன் ஆர்த்தெழுந்தான் அமர் புரிய. இப்படி முன்னேறும் இளவலைப் பார்த்த இராமன், அருமைத்தம்பீ அரக்கரை அழிப்பேன் என யான் தண்டகவனத்துத் தபோதனர்களுக்கு அன்றளித்த வாக்குநிறைவேற வேண்டும். அதனால் இம்முதற் போரை யானே செய்கின்றேன். நீ சாலையைக் காத்து நில் எனக் கூறினன். அப்பொழுதும் இளவல் ''அண்ணா இப் போரை எனக்குக் கொடுத்து எனது தோளின் தினவைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள உதவி புரியுங்கள் என வேண்டிக் கொண்டனன். இராமன் இயையாது மறுக்க நேர்ந்தது.

''மீளருஞ் சமரின் விண்ணும்
மண்ணுமென் மேல்வந் தாலும்
நாளுலந் தழியு மென்றே
நானுனக் குரைப்ப தென்னை
ஆளியின் துப்பினாய் இவ்
வமரெனக்கு அருளி நின்றுஎன்
தோளினைத் தின்னுகின்ற
துப்பினைத் துடைத்தி யென்றான்''

(கரன், வதை. 63)

இப்படிப்பட்டது இலக்குவன் சேவகம். இதனால் ''படைக்கு முந்திக்கொள்'' எனவும், நாள் தோறும் காய்கனிகளைத் தேடித்தந்து அண்ணலுண்ட பின்னர் தான் உண்பது இலக்குவனார் வழக்கம். ''பச்சிலை காய்கனி பரமன்நுங்கிய மிச்சிலே நுகர்வது'' என்பது நோக்கற்குரியது. இதனால் ''பந்திக்குப் பிந்திக்கொள்'' எனவும் மாற்றியமைக்கும் மாவீரன் இலக்குவன்.

கரனைக் கட்டோடு தொலைத்த சூர்ப்பணகை, மலங்கிக் கலங்கி இலங்கையை எய்தினள். கண்டவர் கலங்கினர். அண்டினள் அண்ணனை. அவள் முகத்தைப் பார்த்தனன் மூண்டது வெகுளி. இடி என முழங்கினன். யார் செயல் என்றனன். அறுத்தவர் மானிடர் அண்ணா என்றனள். எங்கே என்றனன். பஞ்சவடியெனும் அங்கே என்றனள் அழுதழி சூர்ப்பணை. நமது கரன்முதல் காவலர் இல்லையோ அங்கெனச், செப்பினன். தேரினில் சென்றனர் என்றனள். இராவணன், ஏறினோர் மனிதரை என்செய்தாரென, அண்ணன்மார் அனைவரும் விண்ணவராயினர். ஆ! அது யாரால் நேர்ந்தது என்றனன். அழகன் இராமன் வில் அடியினால் என்றனள். அன்ன மாவீரன் உன்னை ஏன் தொட்டனன், என்ன வினவினன் இராவணன் தங்கையை. அவள், அண்ணா உனக்காய் அடுத்தது ஈதுஎன்றனள். அவன் செய்ததென் எனக்

''நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார் நடையல்லா
வாரங்கொண்டார் மற்றொருவர்க் காய்மனை
வாழும்
தாரங்கொண்டார் என்றிவரைத்தான் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டகர்உய்ந்தார் எவரையா''

—மாரீசன் வதை 180

## இராமன் வாளி இரத்தச் சுவைகண்டது :

இராவண! விராதனை நமக்குத் தெரியும். அவன் வடிவமும் வல்லமையும் நமக்கு நன்றாகத் தெரியுமல்லவா? அப்பெரிய வீரன் இராமன் அம்பால் உம்பர் உலகம் புகுந்தனன் எனக் கேள்வியுற்ற பொழுதே யான் அலறினேன். ஐயோ அவ்வளவு ஆற்றல் பெற்ற இராமன் ஒருக்கால் இப்பகுதிக்கு வருவதானால் நமது கதி என்னவோ என நினைத்து நடுங்குகின்றேன். மாண்டுபோயினர் என வரவரச் செய்திகள் நெருங்கி வந்தேவிட்டன. அந்த இராமனை அவன் வாளிகளின் வல்லமையை நான் நினைத்து நினைத்து நெஞ்சழிகின்றேன். எங்கள் தாய் தாடகையைக் கொன்றது, எனது தம்பி சுவாகுவைக் கொன்றது, இராமனுடைய ஒரே ஒரு அம்பு. ஒருபோரில் ஒரே கோணத்தில் நின்று எதிர்க்கும் இருவரை ஒரு பாணத்தால் அடித்துக் கொன்றது யாகமேட்டிலே, அது பல நாள்முன்னே. இது பலநாள் பின்னே. இப்படி இடத்தாலும் காலத்தாலும் வேற்றுமையுடைய இருவரை இராமனது ஒரு அம்பே கொன்றது. அது எப்படியாகும். பொய்க்கதை எனப் புக லாதே. மெய், நடந்ததைத்தான் நான் கூறு கின்றேன். இராமன் விடுகின்ற வாளி எந்த எதிரியின் எவ்வளவு வலுத்த உடம்பிலும் நின்றுவிடுவதில்லை. அது அப்பகைவர் உடலிற் பாய்ந்து ஊடுருவி ஆகாய கங்கையில் சென்று நீராடி விட்டு, அவன் புட்டிலிலேயே சென்று புகுந்து கொள்ளுகின்றன. அந்த ஒரு அம்பே அடுத்து யார் வருகின்றனரென எதிர்பார்த் தும் நிற்கின்றது. எங்கள் குடும்பச் சுவை யறிந்த அந்த அம்பே என்னைத் தேடினாலுந் தேடுமென நினைக்கின்றேன். அப்பப்ப அந்த இராமனையேயன்றி அவன் தம்பியை நினைத்தா லும் எனது மனம் தடுமாறுகின்றது. மனம் தம்பித்து நினைவின்றி நின்றுவிடுகின்றது. அவர் களும் அவர்கள் வாளிகளும் நம்மைத் தேடி வருகின்றபொழுது இதோ வந்தோமென எதிர்சென்று சிக்கிக் கொள்ள நீ வழி தேடு கின்றனை, என மறுகினன் மாரீசன்.

''எம்பிக்கும் எம் அன்னைதனக்கும் இறுதிக்குஓர்
அம்புஉய்க்கும்அவ் அல்லிதனக்கும் அயல்நிற்கும்
தம்பிக்கும்நம் ஆண்மை தவிர்ந்தே சுயநிற்கும்
கம்பிக்கும்என் னெஞ்சவன் என்றே கவல்கின்றேன்'

—மாரீசன் வதை, 186

மாரீசன் இடிப்புரை கேட்டு இராவணன் வெகுண்டு எழுந்தனன். மாமா நீ நடந்த கொடுஞ் செயலை மறந்துவிட்டனை. எனது மனோநிலையையும் கருதாது நிற்கின்றன. எனக்கு இளையவளை என்ன பாடுபடுத்தியுள்ளனன், அந்த ராமனுக்கு இளையவன்? அப்படிச் செய்த அம்மனிதர்களைப் புகழ்ந்து பேசுகின்றனை. நீ என்பால் ஒப்பற்ற தப்பினைச் செய்துளாய். உனது உறவு நோக்கி அவற்றை யான் பொறுத்துக் கொண்டேன் என்றனன்.

''நிகழ்ந்ததை நினைந்திலையென் நெஞ்சின்நிலையுஞ்
சாய்
இகழ்ந்தனை யெனக்கு இளையதங்கைமுகம்எங்கும்
அகழ்ந்தனைய தொப்புற வமைத்தவரை யையா
புகழ்ந்தனை தனிப்பழி பொறுத்தனன் இது என்றான்

—மாரீசன்வதை, 189

மாரீசன், தன்னைக் கோபித்த அந்த இராவண னாகிய தறுதலையைத் தன்மையற்றவனை உறுத்து நோக்கினன். மறுபடியும் அவன் மிகவுங் கோபிப்பனென மாரீசன் அஞ்சாது பேசுகின்றனன். இராவண, இது என்ன கோபம்? யார்மேல் கோபம்? என்மேலா? அல்ல அல்ல. உனது கோபம் உனது குலத்தைக் கோபிக்கும் கோபம். உனது வளத்தைக் கோபிக் கும் கோபம். உனது வாழ்வைக் கோபிக்கும் கோபம். என்னைக் கோபிக்கும் கோபமென்று அதனை எண்ணுகின்றனை. அப்படியொரு போதும் நீ எண்ணிக் கொள்ளாதே. இது என் செயல் என்றனன்.

தன்னை முனிவுற்ற தறுகட் டகவிலோனை
பின்னை முனிவுற்றிடு மெனத் தவிர்தல் பேணாது
உன்னை முனிவுற்றுன குலத்தை முனிவுற்றாய்
என்னை முனிவுற் றிலையிதுஎன்ன செயல்என்றான்

—மாரீசன்வதை 190

## பெண்ணல்ல அது பெருநெருப்பு :

மேலும் மாரீசன் இராவணா உனக்கு ஒன்றுந் தெரியவில்லை. நீ என்றுந் தெரியாத வனல்ல, இன்றுதான் தெரியாதவனாயினை. உனக்கு ஒரு அதிக ஆசை உண்டாயிற்று. அது அரியது கிடைக்காதது எனவெண்ணும் பொழுது, அவ்வாசை கோபமாய் மாறிவிட்டது. அதற்குச் செல்ல வழியின்றி மயக்கமாக மாறி விட்டது. இந்த நேரம் உனக்கு அந்த நேரம். இம்மயக்கத்தில் உனக்கு என்ன தெரியப் போகின்றது? அதனால் உனக்காகவுந் தெரி யாது. சொல்லினாலுந் தெரிந்துகொள்ளப் போகின்றதில்லை. எல்லாம் தெரியுமென எண் ணும் உனது செருக்கினால், உனது தங்கை அறி வித்தாள் ஒரு பெண்ணைப் பற்றி எனச்சொல்லிப் பற்றிக்கொள்ளப் பார்க்கின்றனையே. அது உண் மையில் ஒரு பெண்ணல்லஅப்பா, அது ஒரு நெருப்பு. நெருப்பிலே சின்னநெருப்பு பெரிய நெருப்பென்றா உள்ளது? எல்லாம் ஒரே நெருப்புதான். நெருப்பு கொஞ்சம் விறகு கிடைத்தால் சின்னது. அதிகம் விறகு கிடைத் தால் அதே பெரியதுதான். உனது அருமைத் தங்கை கண்டுபிடித்துக் கொண்டுவர வழி வகுத்துளளே, அந்த தீ நமது இலங்கையில் பட்டுவிட்டால் அது ஏகமாக எரியும் தெரியுமா? நாம் பண்ணிக் கட்டிவைத்திருக்கின்ற கோடி

என்றெல்லாம் அதன் வலிமையைப் பேசாத புலவர்கள் இல்லை. இத்தகைய காமத்தையும் கீழ்ப்படுத்தி மேல் நிற்பது கோபம் ஆகும். சீதா தேவி மீது காமம் கொண்ட இராவணன் தவ வேடம் பூண்டு பொய்யுரை பல புகன்ற போது, அது பொருது தேவி இகழ்ந்து கடிந்து பேசினாள். அவ்வளவில் அவன் கொண்ட காமம் மறைந்தது. கோபம் குடி கொண்டது. குதித்து எழுந்தான்—கொதித்தும் எழுந்தான். மேக நாதன் இறந்ததை அறிந்து, ''இதற்குக் காரணம் இவள் (சீதை) அல்லவா'' என்று தேவியை 'வெட்ட வாளை எடுத்தான் என்பதும், கோபத்தின் ஆற்றலையே குறிக்கும். கோபத்தின் கொடுமையை அனைவரும் தத்தம் அனுபவத் தாலேயே அறிந்து இருப்பர். ''கோபமே பாபங்களுக்கு எலாம் தாய் தந்தை'' என்பது பலர் அறிந்த பாட்டு. இத்தகைய இழிநிலையின தான கோபம் சான்றோர் கொள்வரோ?

''குணம் என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது''

என்பது திருக்குறள். (நற்) குணம் என்னும் குன்றின் மேல் நிற்பவர் கோபம், கணப்பொழு தேனும் காத்தல் அரிது என்பது நேர் உரை. இதில் காத்தல் என்ற சொல்தான் இருபால் பட்டு நிற்கிறது. காப்பது குன்று ஏறி நிற்ப வரா? மற்றவரா? இருவருக்கும் சார்த்தி விளக்கம் தருகின்றனர். குணத்தில் சிறந்த சான்றோர் கொண்ட கோபம் கணப்பொழுதே நிற்பது எனினும், அக்கோபத்தின் விளைவைத் தடுத்து நிறுத்த எவராலும் இயலாது என்று கூறுகின்றனர். சான்றோர் கோபத்தால் மற்ற வர் அடையும் விளைவைக் கூறி, அதன் வழியே சான்றோர் பெருமையை—ஆற்றலைக் கூறு வதைக் காட்டிலும், அடுக்காத குணத்தை — கோபத்தை அடுத்து விட்டோமே என்று மனம் நொந்து அப்பொழுதே, வெகுளி தோன்றிய வுடனே அதை அடக்கி விடுவர் என்பது சான் றோர்க்குச் சிறப்புத் தருவதாகும்.

வான்மீக முனிவர் நீராடத் தமசா நதிக்குச் செல்லும்போது வழியிடையே ஒரு மரத்தின்மேல் விளையாடிக் கொண்டு இருந்த அன்றில் பறவைகள் இரண்டில் ஆண் பற வையை வேடன் ஒருவன் அம்பு எய்தி வீழ்த்தி விடுகிறான். அது கண்ட முனிவர் மனம் பொருது வெகுண்டு ''மாநிஷாத! ஏ! வேடனே! என்று விளித்து ''நீ நாசமாகப் போவாய்'' என்று திட்டிவிடுகிறார். உடனே முனிவர் ''நாம் ஏன் அவனைத் திட்டினோம்; அவனைத் திட்ட நமக்கு ஏது உரிமை? ஐயோ! என்ன தவறு செய்துவிட்டோம்'' என்று மனம் நொந்து போனார் என்பது கதை. சான்றோர் கோபம் கொள்ளார். ஒருக்கால் தம்மை மறந்த நிலையில் சினம் தோன்றினாலும் அதை அக் கணமே அடக்கிக் கொள்வர். ''வில்பிடித்து —நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்'' என்பது பாலர் பாடம். திருத்தக்க தேவர் இக்கருத்தையே வலியுறுத்துகிறார். சீவகனுடைய தாய் மாமன் கோவிந்தன். அவனுடைய விதேய நாட்டுக்குச் சீவகன் தோழர்களோடு செல்கிறான். வழி யிடையே ஒரு பாலை நிலம். அந்நிலத்தின் வெப்பம் தாங்க முடியாமல் அதை அவர்கள் கடந்து சென்ற விரைவைப் பின்வருவனவற் றோடு உவமித்துக் கூறுகிறார். பேரையும் புக ழையும் விரும்புபவன் பொருளை வழங்குவதன்றி வாரி இறைத்தல் வேண்டும். அதனால் அவன் ஈட்டிய பொருள் அனைத்தும் தேய்ந்து மாய்ந்து போகும் விரைவு போலவும், ஒருவன் மீது காமம் கொண்டவள் போல நடிக்கும் பரத்தை, அவன் பொருள் தன்பால் வந்து சேர்ந்த அளவில் கொண்ட காமம் மாறிவிடுகிற விரைவு போலவும், சான்றோரிடத்துத் தோன்றும் கோபம் மறையும் விரைவு போலவும் வெப்பம் மிகுந்த பாலை நிலத்தைச் சோர்வு இன்றி ஒரு முகூர்த்த நாழிகையில் கடந்து சென்றார் எனக் கூறுகிறார்.

''நிலையில உலகில் நின்ற வண்புகழை
வேட்டவன் நிதியமே போன்றும்,
இலைகுலாம் பைம்பூண் இளமுலைத் தூதின்
இன்கனித் தொண்டையம் துவர்வாய்க்
கலைவலார் நெஞ்சில் காமமே போன்றும்,
கடவுளர் வெகுளியே போன்றும்,
உலைவிலார் நில்லா(து) ஒருபகலுள்ளே
உருப்பவிர் நெடும்சுரம் கடந்தார்''

இவ்வாறு வள்ளுவ தேவரின் சொல்லையும், பொருளையும் தேவர் இருவரும் எடுத்தாளும் இடங்கள் பல.

**

## ஒரு வாசகம்

**தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்,**
**மூவர் தமிழும், முனிமொழியும்,—கோவை**
**திருவா சகமும், திருமூலர் சொல்லும்,**
**ஒருவா சகம்என் றுணர்!**

—அவ்வைப் பிராட்டியார்.

கோடி மூட்டைகள் உள. என்ன மூட்டைகள் தெரியுமா. நமது பாபமூட்டைகள். அம் மூட்டைகளெல்லாம் அந்த நெருப்பிற்கு என்ன மூட்டைகள் தெரியுமா? பஞ்சுமூட்டைகள். எந்த நெருப்பிற்கு. நீ ''சீதை'' என்கின்றனே யே அந்த நெருப்பிற்கு. நீ நினைப்பதைச் செய்வாயாகில் இலங்கையில் வந்து பற்றி அது யெரியத் தலைப்படும். நமது வினை என்னும் விறகால் எரியும் நெருப்பிற்குப்போதும் என்ற காலம் ஒன்று உண்டா? அது போடப் போடப் பற்றுகிறது. முதலில் மக்கள் அடுப்பு விறகுக் காக நெருப்பைத் தேடுகின்றார்கள். பிறகு நெருப்பிற்காக விறகைத் தேட வேண்டிவரு மல்லவா? நீயும் உனது தங்கையும் கொண்டு வந்து இலங்கையில் பற்றவைக்கும் நெருப்பிற்கு அவிர்ப்பாகந் தரப்போகின்றது எது தெரி யுமா. அந்த இராமனுடைய கோதண்டம். அது தனதிடத்துள்ள கணைகளை ஏவும், அக் கணைகள் நமது தலைகளை எல்லாம் கொண்டு போய் அத்தீயினிடத்தில் போடும், இது போடப் போட அது சுடும். தெரியுமா? இராமன் மனிதனா? ஒருவெற்றாளா? அவன் கணைக்கு உனது தங்கை நமது உயிர்களையெல் லாம் ஒப்பங் கொடுத்து விற்றாளா. வெள்ளைத் தனமாய்ப் பேசாதே. கொள்ளை கொள்ளும் இராமபாணம் எனக் கூறினன் மாரீசன்.

''யாதுமறியாய் உரைகொளாய் இகல்இராமன்
கோதை புனையாமுன்உயிர் கொள்ளை படுமன்றே
பேதைமையினல் இதுஓர் பெண்ணுருவ மென்றாய்
சீதை உருவோ?(அது) நிருதர் தீவினையது அன்றோ''

(மா. வா 192)

மாரீசன் பின்னும் மருக, ''எனது உறவின ரோடு இராமன் கணைக்கு முற்படாமல் ஓடி ஒளிக்க ஒரு இடம் கிடைக்குமா என எனது நெஞ்சம் பறையறைகின்றது. அது உனக்கு எங்கே தெரிகின்றது. ஒருவனுக்கு அருகுள்ள வர்கள் அன்புள்ளவர்கள், அவன் ஒருநஞ்சுகலந்த நீரைக்குடிக்க முயலும்பொழுது, அதன் குணத்தை அறிந்தும், எங்ஙனம் வாளா விருக்க முடியும்? நீ இன்று இறங்குந்துறை நஞ்சுநீர்த்துறை. உன்னைத் தடுக்காமல் உண்டு உயிரொழியட்டும் என யான் பார்த்திருக்க வேண்டுமா? என வினவினன்.

''உஞ்சுபிழையா உறவின் ஓடுமெனவுன்ன
நெஞ்சுபறை போதுமது நீநினைய கில்லாய்
அஞ்சுமென தாருயிர் அறிந்து அருகுநின்றார்
நஞ்சுநுகர் வாரையிது நன்றெனலும் நன்றோ''

(மா. வ. 193)

இப்படி மாரீசன் இனியன பல உரைக்க வும் ஒருப்படாது அடாதன பேசத் தொடங்கி னன் அரக்கர்கோமான். அவன் யான் ஒரு நாட் டிற்கு அரசனல்லன், ஒரு தேசத்திற்குத் தலைவ னல்லன், மூன்றுலகங்களுக்கும் முதன்மையான வேந்தன். எனக்கு நல்ல பகைஞர் வருகின்றன ரென்றால் நல்லதுதானே. அவர்களுக்கு யான் அஞ்சுபவனா? துஞ்சுபவனா? எனக்கு ஏலாதன வெல்லாம் சொல்லி வந்த உனக்குக் கடமை யென்ன என்பதனை நீ உணர்ந்து கொண் டனையா? எனது கட்டளைப்படி நடப்பதா? எனக்கு அமைச்சர்களில்லை என நீ அமைச்சிய லில் தலையிடுவதா? மறுபடியும் எனக்குப் புத்தி புகட்ட வாயெடுத்தால் நீ எனது வடிவாளுக்கு இரையாவாய். யான் வெறுப்பதை நினைக் காதே. அது நீ உயிருடன் இருக்க உதவாது. எனது குறிப்பின் வழி நில். அது உனக்கு வேண்டுவ கொடுக்கும் என்றனன் கொடிய இராவணன்.

''மூவுலகினுக்கு மொரு நாயகம் முடித்தேன்
மேவலர் கிடைக்கின் இதன்மேல் இனியதுண்டோ?
ஏவல்செய கிற்றியென தாணை வழியின்றிக்
காவல்செய் அமைச்சர் கடன் நீகடவதுண்டோ?''

''மறுத்தனை எனப்பெறினும் நின்னை வடிவாளால்
ஒறுத்தென மனக்குறை முடிப்ப னொழிகல்லேன்
வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டென்
குறிப்பின் வழிநிற்றியுயிர் கொண்டுழலின் என்றான்'

''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் சலம்'' என்பது பழமொழி. இராவ ணன் என் சொற்படி நடவாவிடின் வெட்டி வீசுவேன் என்கின்றனன். இவன் சொல்லிய படியே செய்கின்றவன்தான். இக்கருத்தை யாவரும் மறுக்க மாட்டார். நமது சிற்றகத் திற்குப் பேரரசன் வந்தனன், இவன் ஒரு நாளும் வந்தவனல்லன், யாதோ தீங்குளது என முன்னமே முடிவுகண்டவன்தான் மாரீசன். இவன் என்ன சொல்லப் போகின்றான். இராமனை எவ்வழியோ ஒரு வழி எதிர்க்கவிடப் போகின் றான். இராமனிடம் முன்னர் இருமுறை தப்பிப் பிழைத்தோம். இப்போது சென்றால் கொல்லும் அந்த சுவைகண்ட வாளி, கொல்லாவிட்டா லும் இங்கு இப்போதே இவன் கொல்லப் போகின்றான். பிறந்தவர் இறக்கை திண்ணம் என்றாலும், யாவரும் எப்போதோ ஒரு நேரத் தில் இறப்போமெனத்தான் எண்ணுவார்கள், எனக்கு அப்படியில்லை. இராவணனாலோ இராம னாலோ இப்போதே இறப்போம் என்ற உறுதி யுள்ளவன் ஆனேன் யான். இறப்பவனுக்கு அச்சமென்ன! உண்மையைக் கூறுகின்றேன். ஆவது ஆகட்டும் என அறைவதாயினன் மாரீ சன். இராவண! யான் எனக்காக எனது உயிருக் காகப் பயந்து பேசுகின்றேன் என எண்ணாதே. உனக்காக உனது உயிருக்காக உனது வாழ்விற் காக உனது குடிக்காக உண்மையைச் சொன் னேன். உறுதியைச் சொன்னேன்; இப் பொழுதும் நடக்கப் போகின்றதை உரைக்கின் றேன். ஒருவனுக்குக் கெடுங்காலம் வருகின்ற பொழுது தீயரெல்லாம் நல்லவராகத் தோன்று வர். அவர் உரைப்பன எல்லாம் அமுதமொழி யாகத் தோன்றும். அப்படியே அவனுக்கு நல்லவரெல்லாம் கெட்டவராகத் தோன்றுவர். அவர் உரைப்பனவெல்லாம் தீயவிடமாகத் தோன்றும், கசக்கும் அவை இனிக்காது. இப் பொழுது உனது தங்கை சொற்களெல்லாம் உனக்கு இனிப்பன, எனது சொற்கள் எல்லாம் கசப்பனவல்லவா? இவை இன்று கசக்கட்டும், வரும் ஒரு காலத்தில் மாமா சொன்னதை மறுத்தோமே என எண்ணுவாய். மட்டத்தில்

மனம் வைத்த மருமகனே என்ன சொல்லுகின்றனை. சொல் செய்கின்றேன். நான்தான் உனக்கு மந்திரி, அல்ல மட்டவேலைக்காரன், நீ திட்டமிட்டதைச் சொல், உனதுஇட்டம்போலச் செய்கின்றேன் என்றனன் மாமன் மாரீசன்.

''உன்வயின் உறுதிநோக்கி
உண்மையின் உணர்த்தினேன் மற்று
என்வயின் உறுதிநோக்கி
அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்
நன்மையும் தீமையன்றே
நாசம் வந்துற்றபோது
புன்மையின் உற்றநீராய்
செய்வது புகறி யென்றான்''

மாமன் சொல்லால் மருகன் மனங்கரைந்தான். நெருப்பெரிந்த கண்களில் நீரொழுக நின்றான். வெட்டத்தூக்கிய கைகளால் கட்டித் தழுவிக் கொண்டான். மலைபோன்ற தோள்களையுள்ள மாமா நான் உங்களை வதைக்கின்றேன் என எண்ணாதீர்கள். என்னையும் ஒருவன் மறைந்து நின்றே வதைக்கின்றனன்; அவன் தான் மன்மதன். இந்த மதனன் வாளியால் மரிப்பதைவிட அந்த ராமன் வாளியால் அழிந்தாலும் உலகுள்ளவரை பெயராவது நிற்கும் என்ற முடிவில் இருக்கின்றேன். மாமா உங்களைப் போற்றுகின்றேன். யான் என்றும் உறவாடிய தென்றற் காற்றை, இன்று உறவாட முடியாமல் செய்துவிட்டனள் அந்தச் சீதை. அந்த அழகியைச் சீதையை எனக்குக்கொண்டு வந்து தாருங்கள் மாமா எனப் போற்றினன் இராவணன்.

''என்றலும் எழுந்துபுல்லி
யேறிய வெகுளிநீங்கிக்
குன்றெனக் குவிந்ததோளாய்
மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலில் இராமனம்பால்
பொன்றலே புகழாம் அன்றே
தென்றலைப் பகையாய்ச் செய்த
சீதையைத் தருதி யென்றான்''

## மறுக்க வழியின்றி மானானான் மாரீசன் :

இராவணனை நோக்கி மாரீசன், இராமன் ஆற்றலென்ன? எனது வலியென்ன? அந்த அளவற்ற ஆற்றலுள்ளவன்பாலுள்ள அழகியை எப்படியான் உனக்குத் தருவது? எனக் கேட்டனன். மாமா மாயையால்தான் கொண்டுவர வழிகாண வேண்டும் என்றனன் இராவணன். அப்படியா என்ன மாயம் செய்வது, உரைப்பாயாக என்றனன் மாரீசன். மாமா நீங்கள் ஒரு அழகிய பொன் வண்ணமான மானாகிச் சென்று சானகியின்கண் காணச் சாருங்கள். அவள் உளம் மகிழ்ந்து மானைப் பிடித்துத் தர வேண்டுவாள். இராம இலக்குவர் உங்களைத் தொடர்ந்து வருவார்கள். நீங்கள் அவர்களுக்கு அகப்படாமல் நெடுந்தூரங் கொண்டு செல்லுங்கள். உங்களைத் தொடர்ந்து மறைந்து வரும் நான் சீதையைப் பற்றிக் கொண்டு வந்து விடுகின்றேன். நமது தேரையும் அங்குவரச் செய்துதான் வந்துளேன் என்றனன் இராவணன்.

''என்னமா மாயம் யான்மற்று
இயற்றுவது இயம்புக என்னப்
பொன்னின்மா னாகிப்புக்குப்
பொன்னைமால் புணர்த்துகஎன்ன
அன்னதே செய்வன்என்ன
மாரீசன் அறைந்துபோனான்
மின்னும்வேல் அரக்கர்கோனும்
வேறொரு நெறியில் போனான்''

பெரியவர்கள் இருளை இருவகையாகப் பிரித்தனர். ஒரு இருள் புறவிருள், மற்றது அகவிருள். புறவிருள் மக்கள் கண்களுக்கு எதிரிலுள்ள எல்லாப் பொருள்களையும் தெரியாமல் மறைத்து விடும். ஆனால் அப்படி பல பொருள்களும் மறைந்திருப்பது எதனால் என்பதை மக்கள் அறிந்து கொள்ளுகின்றனர். அவர்கள் மிக இருண்ட இதுதான் எதனையும் மறைத்ததென்பதை எளிமையாக அறிகின்றனரல்லவா? எல்லாவற்றையும் மறைத்த இந்தப் புற இருளுக்குத் தன்னை மறைத்துக் கொள்ளத் தெரியவில்லை. ஆனால் அகவிருள் அப்படியல்ல. மக்கள் உணர்ந்திருந்த ஒன்றையும் உணரவொட்டாது செய்துவிடும். தெரிந்திருந்தவை தெரியமுடியாமற் போகவைத்தது என ஒருவரும் உணரமுடியாமலும் செய்து விடுகிறது அந்த அகவிருள். ஆகவே அவ்வக இருள் தன்னையும் மறைத்துக் கொள்ளும் பெரும் ஆற்றல் படைத்தது.

இங்கே மாரீசன் தன்னை யாவரும் உணராதபடி மறைத்துக் கொண்டான். ஆனால்தான் முழுதும் மறையாமல் மானென ஒரு வடிவமாகி ஒருவாறாகத் தெரியவும் நிற்கின்றான். இராவணனோ ஒருவகையாலும் தன்னை ஒருவரும் உணராதபடி முழுவதுமாக மறைந்தவனாகிப் பின் தொடருகின்றனன். இவ்விருவரும் சீதாராம இலக்குவர்களுக்கு இருதிறப்பட்ட பகைவர்களாகப் புறப்படுகின்றனர். பாதி மறைந்த பகைவன் மாரீசன். முழுதும் மறைந்த பகைவன் இராவணன். அரக்கர் உடற் சுவையுண்ட ஆண்டகையின் வாளிகள் அடிக்கடி மாரீசன் நினைவில் படுகின்றன. இராவணன் உடைவாளின் பற்களும், மாரீசன் செல்லவில்லையென்றால் மாரீசனை அல்லல்படுத்த ஆயத்தமாக அணிவகுத்து நிற்கின்றன. என்ன தான் செய்வான் இவன். செல்லுகின்றேன். இனி திரும்ப மாட்டேன் என எண்ணுகின்றான். தனது அன்புள்ள சுற்றத்தவரை நினைந்து நினைந்து அழுகின்றான். தான் எதிர்க்கப்படும் வீரரை நினைந்து நினைந்து அவர் வாளிகளுக்கு அஞ்சி அஞ்சி அடிபெயர்க்கின்றான். மேலே பொல்லாத விஷப் பொடியைத் தூவப்பட்ட நீருக்கடிவாரத்திலுள்ள ஒரு மீன்படும்பாட்டையெல்லாம் பட்டு மாரீசன் துடிக்கின்றான். அப்பப்ப, அவன் அன்றுபட்ட துன்பத்தைச் சொல்லுவது எப்படி? நினைக்கவே முடியாது.

''வெஞ்சுற்றம் நினைந்துஉகும் வீரரைவேறு
அஞ்சுற்று மறுகுறும் ஆழ் குழி நீர்
நஞ்சுற்று உறும் மீனின் நடுக்குறுமால்
நெஞ்சுற்ற தொர்பெற்றி நினைப்பரிதால்''

—[தொடரும்]

# முத்தேவர்

[பேராசிரியர் திரு. பெ. இராமாநுஜன்]

தமிழ்ப் புலவர் உலகிலே தேவர் என்ற சிறப்புப் பெயரில் ஆன்றோர் பலர் அழைக்கப் பெறினும், காவிய உலகிலே பலர் அறிந்த சான்றோர் திருவள்ளுவதேவர், திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர் ஆவர். இம் மூவரிலே முதற்பாவலரான திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் கருத்துக்களையும், சொற்களையும் எடுத்து ஆளாத தமிழ்ப் புலவர் ஒருவரும் இல்லை. இம்முறையில் திருத்தக்க தேவரும், தோலாமொழித் தேவரும் இயற்றிய சிந்தாமணி சூளாமணி காவியங்களிலே திருக்குறளின் கருத்துக்களையும் சொற்களையும் கையாண்டு இருக்கும் திறனை ஒரு சிறிது எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கு நீர் இன்றியமையாதது. நீரும் மழையைப் பொழிந்தாலன்றி இல்லை. ''நீரின்றமையா துலகெனின் யார்யார்க்கும்—வானின் றமையாதொழுக்கு'' என்பது குறள். சில இடங்களில் மேகம் அளவுக்கு மீறியும், சில இடங்களில் வேண்டப் படாத காலத்தும் பெய்கிறது. வேறு சில இடங்களில் மழை இல்லாமல் வறட்சி நீடிக்கிறது. இதனல் வாழ்க்கை நிலை குலைந்து அல்லல்பட ஏதுவாகிறது. பெய்ய வேண்டிய காலத்துப் பெய்யாமலும், அளவு கடந்து பெய்தும், பெய்யாமலே பொய்த்தும் போகிறது. இவ்வாறு இயற்கை நியதி வழுவி உயிர்கள் அல்லல் உற யாது காரணம்? சோலை முதலியன அழிதல். ஆகாயச் சூழ்நிலை கெடல். இன்னேரன்னவைதாம் காரணம் என்கிறது விஞ்ஞான உலகம். வேதம் பொய்ப்பது இல்லை. தமிழ் வேதம் இது பற்றி என்ன சொல்கிறது? ''முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி—ஒல்லாது வானம் பெயல்'' (உறை—மழை). மன்னவன் பொல்லான் ஆயின் மழை பொய்க்கும். இயற்கை நியதி பிறழும். அதனல் விளைவன ; ஆ பயன் குன்றும், அறு தொழிலோர் நூல் மறப்பர் முதலியன. இக் கருத்தையே திருத்தக்க தேவர்,

''கோள்நிலை திரிந்து நாழிகுறைபடப் பகல்கள் மிஞ்சி
நீள்நிலம் மாரிஇன்றி விளைவு அஃகிப் பசியும் நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பில் கற்புஇழந்து அறங்கள் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின் என்றன்'

என நயம்பட விரித்துக் கூறுகிறர். ஆன்றோர் மரபால் செழித்து வளர்ந்த உலகு—ஆணை இவ்வுலகு. சூளாமணி ஆசிரியர்,

''நிறம்தலை மயங்கி வெம்பி நெடும்கலில் சுடுவ தாயின்
இறந்து அலைமயங்கும் நீர்வாழ் உயிர்க்கிடர் எல்லையுண்டே
மறம்தலைமயங்கு செவ்வேல் மன்னவன் வெய்யன் ஆயின்
அறம்தலை மயங்கி வையம் அரும்படர் உழக்கும் அன்றே''

என வையங் காவலன் வெய்ய கோலன் ஆயின் மக்கள் அன்றி மாக்களும் வாழ்தல் அரிது எனக் கூறுகிறர்.

''அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'' என்னும் பழமொழி பலராலும் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. அரசன் என்றல் அரசனும் அவனைச் சார்ந்தோரும் ஆவர். குணத்தில் சிறந்தோர்க்கும், பணத்தில் பெருத்தோர்க்கும் புகழும் பெருமையும் சேர்வது அறிந்த மற்றவர்கள், தாங்களும் அவற்றிற்கு உரியர் ஆக வேண்டும் என விழைகின்றனர். காந்தியடிகள் கதர் உடுத்தத் தொடங்கியபோது ஆடம்பர வாழ்வில் திளைத்த செல்வச் சீமான்களில் பலர், தாங்களும் முரட்டுக் கதர்த் துணியை விரும்பி அணிந்து கொண்டதைக் கண் கூடாகக் கண்டோம் அன்றே? ஆதலின் நன்னெறியைப் போதிப்பதைக் காட்டிலும் நடந்து காட்டுவதே பயனுடையதாகும். நன்னெறி (நடந்து) காட்ட வேண்டுமே அல்லாது வாயால் உபதேசிப்பது மேலோர் செயல் ஆகாது. இக் கருத்தையே ''முறைகோடி மன்னவன் செய்யின்'' எனச் செயலையே குறிப்பிடுகிறர் திருவள்ளுவர். அதையே தேவர் இருவரும் விரித்துக்கூறி இருக்கின்றனர்.

காமம் கொடிது—மிகக் கொடிது என்று வேதாந்த நூல்கள் அன்றி இலக்கியங்களும் பரக்கப் பேசும்.

''ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளிப்பின் உயலாகும்-நீருள்
குளிப்பினும் காமம் சுடுமே குன்றுஏறி
ஒளிப்பினும் காமம் சுடும்''